யெ. ருமியான்த்செவ்

# இந்துப் பெருங்கடலுக்குச் சமாதானமும் பாதுகாப்பும்

யெ. ருமியான்த்செவ்

2

# இந்துப் பெருங்கடலுக்குச் சமாதானமும் பாதுகாப்பும்

NEW CENTURY BOOK HOUSE (P) LTD.
Rs. 3-00
MADRAS-98.

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: இரா. பாஸ்கரன்

**Е. А. Румянцев**

ИНДИЙСКОМУ ОКЕАНУ - МИР И БЕЗОПАСНОСТЬ

*на тамильском языке*

**E. A. Rumyantsev**

PEACE AND SECURITY TO THE INDIAN OCEAN

*in Tamil*

© முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

P $\frac{0803000000-346}{014(01)-86}$ 349-86

முன்னுரை . . . . . . . . . . . 5

அத்தியாயம் ஒன்று

இந்துப் பெருங்கடல்: நேற்றும் இன்றும் . . . . . . . . . . 9

அத்தியாயம் இரண்டு

இந்துப் பெருங்கடல் எப்படி பதட்ட நிலை மண்டலமாயிற்று? . . . . 25

அத்தியாயம் மூன்று

அமெரிக்க ஐக்கிய நாடு: குறிக்கோள்கள், கொள்கைகள், நடவடிக்கைகள் . . . . . . . . . . . . 64

அத்தியாயம் நான்கு

இந்துப் பெருங்கடலில் ஒவ்வொருவரின் உண்மை நிலை . . . . 107

அத்தியாயம் ஐந்து

சமாதான மண்டலத்திற்காக . . 146

அத்தியாயம் ஆறு

சோவியத் யூனியனின் நிலையும் முன்முயற்சிகளும் . . . . . . 181

# முன்னுரை

கடந்த பத்தாண்டில் மட்டும் இந்துப் பெருங்கடலைப் பற்றி பல கட்டுரைகளும் சிறு பிரசுரங்களும் நூல்களும் எழுதப்பட்டுள் ளன. இது ஏன் என்பது நன்கு புரிகிறது. ஏராளமான மக்கள் வசிக்கும் இப்பிரதேசத் தில் இன்றைய உலகின் பல முக்கியப் பிரச் சினைகள் ஒன்றுதிரண்டு பிரதானமாகவும் கூர்மையாகவும் வெளிப்படுகின்றன.

வரலாற்று ரீதியாக சமீப காலத்தில் கால னியாதிக்க நுகத்தடியிலிருந்து விடுதலைய டைந்த மக்கள் உண்மையான சுதந்திரத்திற் காகவும் தம்முடைய இயற்கைச் செல்வங் களின் எஜமானர்களாக இருக்க வேண்டு மென்பதற்காகவும் நடத்தும் போராட்டம் இங்கு தொடருகிறது. புதிய அரசுகளும் புதிய அரசியல் ஆட்சிமுறைகளும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. தமது நிலைகளை இங்கே பேணிக் காத்து பலப்படுத்தப் பழைய மற்றும் புதிய சுரண்டலாளர்கள் காட்டும் நாட்டம் குறையாதது மட்டுமின்றி, வலுத்தும்

வருகிறது. பல நாடுகளின் நலன்கள் இங்கே மோதுகின்றன, முரண்படுகின்றன.

இந்துப் பெருங்கடலில் உள்ள நிலவரம் உலகளாவிய தன்மை வாய்ந்த நவீன நிகழ்ச்சிப் போக்குகளின் சாரத்தைப் போதுமான அளவு தெள்ளந்தெளிவாகப் பிரதிபலிக்கிறது. உலகெங்கும் நடைபெறுவதைப் போன்றே இங்கும் முற்போக்கும் பிற்போக்கும், சமாதானச் சக்திகளும் யுத்த சக்திகளும் மோதுகின்றன. சமாதானத்திற்கு ஆதரவாயும் அணு ஆயுத யுத்த அபாயத்திற்கு எதிராயும் மக்களின் விடுதலைக்காகவும் இவர்களின் சுய அரசுரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் நடக்கும் போராட்டம் பதட்ட நிலையை அதிகப்படுத்துதல், ஆயுதப் போட்டியை முடுக்கி விடுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட போக்கிற்கும் அச்சுறுத்தல், உள்விவகாரங்களில் தலையிடுதல், அதிகாரம் செய்தல், தேசிய விடுதலை இயக்கங்களை ஒடுக்குதல் எனும் கொள்கைக்கும் உலக ஆதிக்கத்தின் மீதான நாட்டத்திற்கும் எதிராக உள்ளது.

இப்பிரதேசத்தில் பதட்ட நிலை அதிகரித்து வருவதற்கான காரணங்கள் யாவை? இங்கே நம்பிக்கை, ஒத்துழைப்புச் சூழ்நிலையை ஏற்படுத்தவும் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக ஆக்கவும் மக்கள் நடத்தும் போராட்டம் ஏன் இவ்வளவு நீண்டதாயும் கடினமானதாயும் இருந்தது, இன்னமும் இருக்கிறது? இப்பிரதேசம் யாருடைய ஜீவாதார நலன்களின் மண்டலமாக இருந்து வருகிறது?

இப்பிரதேச மக்களை உண்மையிலேயே அச் சுறுத்துவது யார்? இந்நூலில் இக்கேள்வி களுக்கான பதில்கள் உள்ளன, 80ஆம் ஆண்டு களில் உலக நிலவரம் கூர்மையடைந்ததன் பின்னணியில் இந்துப் பெருங்கடல் பிரதேசத் தின் அரசியல் நிலவரம் ஆராயப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக இந்துப் பெருங்கடல் பிரதேசத்தில் தம்மை எஜமானர்களாகக் கருதி வந்தவர்கள் ஆதிக்கம், நிர்ப்பந்தம் எனும் கருத்துக்களின் போக்கில் தொடர்ந்து சிந்திக்கின்றனர் என்பதை மக்கள் தம் சொந்த அனுபவத்தில் உணருகின்றனர். இங்குள்ள எண்ணெய், யுரேனியம், இரும்பல்லா உலோகங் கள் முதலியவை முன்போன்றே மேற்கத்திய ஏகபோகங்களுக்குத் தொடர்ந்து தேவைப்படு கின்றன. ஸ்தல இயற்கைச் செல்வங்களையும் மற்றும் உழைப்பாளிகளையும் சுரண்டுவதைத் தொடரவும் இதை வலுப்படுத்தவும் இவை விரும்புகின்றன. இன்று ஏகாதிபத்தியத்தின் இராணுவ இயந்திரமும் இங்கே மிகத் தீவிர மாக்க் கொண்டு வந்து குவிக்கப்படுகிறது. இன்று இந்துப் பெருங்கடல் இராணுவ நட வடிக்கைகளின் களமாகவும் கருதப்படுகிறது. இந்துப் பெருங்கடலின் பதட்ட நிலவரத்தின் சாரமும் இதைப் புரிந்து கொள்ளும் வழியும் இதில்தான் அடங்கியுள்ளன.

நிலவரம் சரிவரப் புரிந்து கொள்ளப்பட் டால் இது இங்குள்ள பதட்ட நிலையைத் தணிப்பதற்கான போராட்டத்தின் சரியான பாதையைக் குறிக்கும். இப்போராட்டம்,

யாருக்கெல்லாம் சமாதான லட்சியமும் மக்களின் விடுதலையும் முக்கியமோ அவர்களின் ஒற்றுமையைக் கோருகிறது.

இப்போது உண்மைகளை, சம்பவங்களை, நிரூபணங்களைப் பார்ப்போம். அதன் பின்— முடிவுகளுக்கு வருவோம். ஆனால் இந்த முடிவுகளுக்கு வர வேண்டியது வாசகர்கள் தான்.

அத்தியாயம் ஒன்று

# இந்துப் பெருங்கடல்: நேற்றும் இன்றும்

இந்துப் பெருங்கடல் உலகில் உள்ள பெருங் கடல்களிலேயே மிகவும் "சிறியது", ஆனால் அதே சமயத்தில் — இப்படிச் சொல்லலா மெனில் — மிகவும் தொன்மையானது. கி. மு. 2,500ஆம் ஆண்டுகளின் போதே, எகிப்திய ஃபரவோ மன்னர்கள் ஆட்சி புரிந்த போதே இங்கே கப்பல் போக்குவரத்து நடைபெற்றது. 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்துப் பெருங்கடலுக்கு நன்னம்பிக்கை முனை அருகே வாஸ்கோ ட காமா செய்த பயணம், 19ஆம் நூற்றாண்டில் சூயஸ் கால்வாய் திறக் கப்பட்டது போன்ற சம்பவங்கள் மிக முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளாகக் கருதப்படுகின்றன.

இந்தியாவிற்கு வாஸ்கோ ட காமா வழி கண்டுபிடிப்பதற்கு முன்னரே ஐரோப்பாவி லிருந்து சிலர் இங்கு சென்று வந்துள்ளனர் என்பதை வரலாற்று நியாயத்திற்காகக் குறிப் பிட வேண்டும். இவர்களில் ஒருவர் ருஷ்ய வியாபாரியாகிய அபனாசி நிக்கீத்தின். 1466இல்

வோல்கா ஆற்றின் கரையில் உள்ள திவேர் (இப்போது இந்நகரின் பெயர் கலீனின்) நகரிலிருந்து தன் பயணத்தைத் துவக்கிய இவர் ஆற்றின் ஓட்டத்தோடு சென்று காஸ் பியன் கடலை அடைந்து இரான் நாட்டைக் கடந்து பின் கொந்தளிப்பான இந்துப் பெருங் கடலின் வழியாக இந்தியாவை அடைந்தார். கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் இந்துஸ் தானத்தில் பல இடங்களுக்குச் சென்ற நிக் கீத்தின் 1472இல் தாயகம் திரும்பினார். இத்துணிவு மிகுப் பயணி விட்டுச் சென்ற **மூன்று கடல்களுக்கு அப்பால்** எனும் நாட் குறிப்பின் உதவியால் இந்தப் பயண விவரங்கள் பிரபலமாயின.

அபனாசி நிக்கீத்தினின் பயணத்தைப் பற்றி கிட்டத்தட்ட நான்கு நூற்றாண்டுகள் ஒன்றுமே தெரியவில்லை. 19ஆம் நூற்றாண்டின் நடுவில் இவருடைய குறிப்புகளை முதன்முத லாகக் கண்டுபிடித்த பிரபல ருஷ்ய வரலாற்றா சிரியராகிய நி. மி. கரம்ஸீன் பின்வருமாறு எழுதினார்: "மிக நீண்ட காலம் முன்னரே இந்தியாவிற்கு ஒரு பயணத்தை மேற்கொண்ட ஐரோப்பிய நாடு என்ற பெருமை ருஷ்யா விற்குச் சாரும் என்பது பூகோள இயலர் களுக்கு இதுவரை தெரியாது... ஆப்பிரிக்கா விலிருந்து இந்துஸ்தானத்திற்குப் பாதை கண்டுபிடிக்கும் வாய்ப்பைப் பற்றி வாஸ்கோ ட காமா மட்டுமே சிந்தித்துக் கொண் டிருந்த போது நமது திவேர் நகரவாசி மலபாரின் கரையில் ஏற்கெனவே பயணம் செய்து கொண்டிருந்தார்..."

நிக்கீத்தினின் பயணம் வர்த்தகப் பயண மாய், சமாதானப் பயணமாய் இருந்தது. வரலாற்றுப் பதிவேடுகளில் இவருடைய பெயர் எளிய இடத்தையே வகிக்கிறது. ஆனால் நானூறு ஆண்டுகளடங்கிய ஒரு முழு சகாப் தமே – இதுதான் ஐரோப்பியர்கள் ஆசியா வைக் காலனியாதிக்கக் கொடுமைக்கு உட் படுத்திய சகாப்தமாகும் – வாஸ்கோ ட காமா வின் பெயரால் அழைக்கப்படுகிறது. கிட்டத் தட்ட 15ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து (வாஸ்கோ ட காமா 1498இல் இந்திய மண் ணில் காலடி எடுத்து வைத்தார்) இதற்குப் பின் வந்த நூற்றாண்டுகளில் இச்சமுத்திரப் பிரதேச நாடுகளின் வரலாறு மேற்கத்திய வல்லரசுகளின் வர்த்தக, பொருளாதார, இராணுவ, அரசியல் போட்டியின் வரலா றாகும். போர்த்துகல் நாட்டவரையடுத்து ஹாலந்து நாட்டவரும் ஆங்கிலேயர்களும் டென்மார்க் நாட்டவரும் பிரெஞ்சுக்காரர் களும் இந்துப் பெருங்கடலுக்கு வந்தனர். இறுதியாக, 19ஆம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் இந்துப் பெருங்கடலில் ஆங்கிலேயர்கள் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்கள். 20ஆம் நூற்றாண்டின் 20ஆம் ஆண்டுகளிலிருந்து ஆங்கி லேயர்கள் தம் கடல் ஆதிக்கங்களை அமெ ரிக்க ஐக்கிய நாட்டுடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தாலும் இந்துப் பெருங்கடலில் இவர் களுடைய முழு ஆதிக்கம் 40ஆம் ஆண்டுகளின் இறுதி வரை நீடித்தது. 1945இல் பாசிச ஜெர்மனியும் இராணுவ வெறிகொண்ட ஜப்பா

னும் முறியடிக்கப்பட்டதன் விளைவாய் — இதில் சோவியத் யூனியன் தீர்மானகரமான பங்காற்றியது — காலனியாதிக்க முறை விரைவாகத் தகர்ந்து விழ ஆரம்பித்ததையடுத்து நிலவரம் மாறத் துவங்கியது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் இந்துப் பெருங்கடல் பகுதியைச் சேர்ந்த டஜன்கணக்கான நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றன. ஆனால் இது, உண்மையான, அதாவது பொருளாதார சுதந்திரத்திற்கான, தம் இயற்கைச் செல்வங்களைத் தம் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ளும் உரிமைக்கான இவர்களுடைய நீண்ட போராட்டத்தின் துவக்கமாக மட்டுமேயிருந்தது.

இந்த இயற்கைச் செல்வங்கள் இங்கு நிறையவே உள்ளன. சோஷலிச நாடுகள் அல்லாத உலகில் இருக்கும் மொத்த எண்ணெயில் 62 சதவிகிதம் பாரசீக வளைகுடா பகுதியில் உள்ளது.* சோஷலிச நாடுகள் அல்லாத உலகில் எடுக்கப்படும் மொத்த தங்கத்தில் சுமார் 80 சதவிகிதமும் பாதிக்கும் மேற்பட்ட வெள்ளியமும் மூன்றிலொரு பங்கு மாங்கனீசும் இந்துப் பெருங்கடல் பகுதி நாடுகளில் கிடைக்கின்றன. இங்கே இயற்கை ரப்பர் கிடைக்கிறது, பாக்சைட்டும் ஈயமும் நிக்கலும் இரும்புத் தாதுவும் துத்தநாகமும்

---

* Brojendra Nath Banerjee, *Indian Ocean a Whirlpool of Unrest,* Paribus Publishers, N. D., 1984, p. 19.

எடுக்கப்படுகின்றன. யுரேனியம், லித்தியம், பெரிலியம் மற்ற வகையான போர்த்தந்திர மூலப் பொருட்கள் உட்பட 40 வகையான மூலப் பொருட்களை அமெரிக்க ஐக்கிய நாடு இங்கிருந்து எடுத்துச் செல்கிறது.* பாரசீக வளைகுடா பகுதி நாடுகளிலிருந்து கிடைக்கும் எண்ணெயைக் கொண்டு ஜப்பான் தன் தேவை களை அனேகமாகப் பூர்த்தி செய்து கொள் கிறது. இதைத் தவிர ஜப்பான் தான் இறக் குமதி செய்யும் இரும்புத் தாதுவில் 75 சதவி கிதத்தையும் கல்கரியில் 35 சதவிகிதத்தையும் பாக்சைட், துத்தநாகம் மற்றும் இயற்கை ரப்பரில் 90 சதவிகிதத்தையும் இந்துப் பெருங்கடல் பகுதி நாடுகளிலிருந்து வாங்கு கிறது.**

இப்பிரதேச நாடுகள் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு மலிவான மூலப் பொருட்களுக்கான மூல ஊற்று மட்டுமின்றி மிகப் பெரும் விற்பனைச் சந்தையும் மூலதனங் கள் முதலீடு செய்யப்படும் லாபகரமான துறை யுமாகும். பொருளாதார நிபுணர்களின் கணக் கீட்டின்படி, இந்துப் பெருங்கடல் பிரதேச நாடுகளின் பொருளாதாரத்தில் அமெரிக்க முதலீடுகளின் மதிப்பு 10 பில்லியன் டாலர் களுக்கும் அதிகம்.*** வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தில் இடப்பட்ட ஒவ்வொரு

---

* Ibid., p. 100.

** Ibid., pp. 103 — 104.

*** Ibid., p. 237.

அமெரிக்க டாலரும் 4.25 டாலர்கள் லாபம் தருகிறது.* காலனியாதிக்க வல்லரசுகள் 300(!) ஆண்டுகளில் தம் காலனிகளிலிருந்து சுரண்டிச் சென்றதை விட அதிக அளவு லாபத்தை ஏகாதிபத்திய ஏகபோகங்கள் கடந்த 30 ஆண்டுகளில் வளர்முக நாடுகளி லிருந்து ''பங்குதாரரர் உரிமையோடு'' எடுத்துச் சென்றுள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது.** இவ்வாறு ''உறிஞ்சப்படும்'' நாடுகளில் கணிச மான பகுதி இந்துப் பெருங்கடல் பிரதேசத் தில்தான் உள்ளது.

இங்குள்ள கரையோர மற்றும் உட்கண்ட அரசுகளில் உலக மக்கள்தொகையில் கிட்டத் தட்ட மூன்றில் ஒரு பகுதியினர் வாழுகின்ற னர். ஐ. நா. சங்க வரையறுப்புகளின்படி ஒரு நாடு நேரடியாக கடற்கரையைக் கொண் டிருந்தால் அது கரையோர நாடு எனப்படும், ஒரு அரசின் பரப்பு ஒரு கரையோர அரசின் பரப் பால் மட்டும் கடற்கரையிலிருந்து பிரிந்திருந்தால் அது உட்கண்ட அரசு எனப்படும் என்பது தெரிந்ததே.

சமீப காலம் வரை இந்துப் பெருங்கடலின் ''எல்லைகளைக்'' குறித்து ஒருமித்தக் கருத்து நிலவவில்லை. 1974இல் இந்துப் பெருங்கடல் பற்றிய ஐ. நா. சங்க விசேஷக் கமிட்டி பின்வருமாறு இதன் எல்லைகளை வரையறுத்

---

* நோவயே விரேமியா, இதழ் 12, 1983, பக்கம் 42. (ருஷ்ய மொழியில்.)

** நவீன காலனியாதிக்கத்தின் நெருக்கடி, மாஸ்கோ, 1981, பக்கம் 8 (ருஷ்ய மொழியில்.)

தது. ஆப்பிரிக்காவின் தென் கோடியாகிய ஈகலஸ் முனையிலிருந்து அன்டார்க்டிக்கா வரை செல்லக் கூடிய 20° கிழக்கு தீர்க்கரேகை தென்மேற்கில் இந்துப் பெருங்கடலுக்கும் அட்லாண்டிக் பெருங்கடலுக்கும் இடையிலுள்ள எல்லையாக நிபந்தனையோடு ஏற்கப்பட்டுள்ளது. இந்துப் பெருங்கடலின் வடக்கு எல்லைகள் கரையோர நாடுகளின் கரைகளின் வழியே செல்கின்றன. டாஸ்மேனியா தீவிலுள்ள தென் முனையிலிருந்து அன்டார்க்டிக்கா வரை செல்லும் 147° கிழக்கு தீர்க்கரேகை தென்கிழக்கு எல்லையாக நிபந்தனையோடு ஏற்கப்பட்டுள்ளது. தெற்கே 60° தென் அட்சரேகை இந்துப் பெருங்கடலை அன்டார்க்டிக்காவிலிருந்து பிரிக்கும் நிபந்தனை எல்லைக் கோடாக விளங்குகிறது. இந்த எல்லைகளினுள் இந்துப் பெருங்கடலின் பரப்பு, இதை ஒட்டியுள்ள கடல்களோடு சேர்த்து, சுமாராக 75 மில்லியன் சதுர கிலோமீட்டர்களாகும். இது உலகின் பெருங்கடல் பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு.

இப்பெருங்கடலின் பூகோளம் பன்முகத் தன்மையுடையது. இதில் பெரும் தீவுகளும் சிறு பவழத் தீவுக் கூட்டங்களும் நிறைந்துள்ளன. இங்குதான் தீவுக் கண்டமாகிய ஆஸ்திரேலியாவும் உலகிலுள்ள தீவுகளிலேயே ஐந்தாவது பெரிய தீவாகிய மடகாஸ்கரும் ஸ்ரீலங்கா, சுமத்ரா, ஜாவா போன்ற பெரிய தீவுகளும் சமுத்திரம் பூராவும் சிதறிக் கிடக்கும் மூன்று பெரும் தீவுக் கூட்டங்களும் ஏராளமான சின்னஞ்சிறு தீவுகளும் உள்ளன.

உலகின் இப்பிரதேசத்திலுள்ள நாடுகள் மிகப் பல்வேறானவை. 700 மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகையை உடைய, மிகப் பெரும் வளர்முக நாடாகிய இந்தியாவும் 1984ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த புருனை நாடும் இங்குள்ளன. மிகச் செல்வங் கொழிக்கும் அராபிய பழமைவாத நிலப் பிரபுத்துவ முடியரசுகளும் பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற மிக ஏழ்மையான நாடுகளும் இங்கு இருக்கின்றன. இங்குள்ள நாடுகளில் சோஷலிசத் திசையமைவு நாடுகளும் உள்ளன, நேப்பாள நாட்டிலோ முடியாட்சி நிலவுகிறது.

இந்துக்களும் முஸ்லீம்களும் புத்த மதத்தவரும் கிறிஸ்துவர்களும் மற்ற மதத்தவரும் மொழியாலும் பேச்சு வழக்காலும் மொழி நடையாலும் பாரம்பரியங்களாலும் பழக்க வழக்கங்களாலும் ஒருவரிடமிருந்து ஒருவர் மாறுபடும் நூற்றுக்கணக்கான மக்களினங்களையும் தேசிய இனங்களையும் சேர்ந்தோரும் இங்கே வாழுகின்றனர்.

அரசியல், சமூக-பொருளாதார, மத, மற்ற வேறுபாடுகள் நிலவியபோதிலும் இந்த மக்களில் மிகப் பெரும்பான்மையானோரிடத்தில் இவர்களை ஒன்றிணைக்கும் ஒரு பொது அம்சம் உண்டு. இதுதான் இவர்களுடைய வரலாற்றுப் போக்குகளின் பொதுமை, வரலாற்றில் செயலற்ற நிலையில் இருந்தவர்கள் சுறுசுறுப்பானவர்களாக மாறியுள்ள அம்சம், தமது நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின்

உண்மையான எஜமானர்களாக மாறி உலகில் மதிப்பு மிகு பாத்திரத்தை ஆற்ற இவர்கள் கொண்டுள்ள நாட்டம் ஆகும்.

இந்துப் பெருங்கடல் பிரதேசம் தேசிய விடுதலை இயக்கம் தீவிரமாக நடைபெறும் மண்டலமாகும். காலனியாதிக்கக் கொடுமை யிலிருந்து தேசிய விடுதலை பெறுவது என்பது இப்பிரதேச மக்களினங்களின் வளர்ச்சியில் தலையாயப் போக்காகும். ஆனால் இப்பாதை நேரடியானதோ ஒரே மாதிரியானதோ அல்ல.

காலனியாதிக்கம் விருப்பமின்றியே தன் னுடைய பல நூற்றாண்டு பிடிப்பை இங்கே தளர்த்துகிறது. நேர் வழியில் ''கதவை இழுத்து மூடி விட்டு'' பின்னால் ''கொல் லைப்புறக் கதவின்'' வழியாக நுழைவதற்காக காலனியாளர்கள் வெளியேறுகின்றனர். அதா வது அரசியல் ஒடுக்குமுறை வழிகளைப் பொரு ளாதார-நிதிச் சுரண்டலால் மாற்றுகின்றனர். ''பிரித்தாளுதல்'' எனும் தமது பழைய போர்த்தந்திரத்தை இவர்கள் இன்றும் தீவிர மாயும் நெகிழ்வுத் தன்மையோடும் பயன் படுத்துகின்றனர். எனவே இப்பிரதேசத்தில் சமீப பத்தாண்டுகளில் கூட தேசங்களிடையே பல்வேறு சச்சரவுகள் மூண்டு வருகின்றன. ஒரு சில ஆப்பிரிக்க அரசுகளுக்கு இடையி லான மோதல், இந்திய-பாகிஸ்தான் யுத்தங் கள், இரான்-இராக் யுத்தம் ஆகியவை இதற்கான உதாரணங்களாகும்.

உலக அரசியலில் மேன்மேலும் தீவிரப்



2–898

பங்காற்றவும் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சி களைக் கூட்டாக எதிர்த்து நிற்கவும் இளம் அரசுகள் கொண்டுள்ள உறுதியின் பயனாய் நவீன வரலாற்றின் மிகப் பெரும் முற்போக்கு இயக்கமாகிய கூட்டுச் சேரா இயக்கம் தோன் றியது. இதில் இன்று ஒன்றரை பில்லியன் மக்கள் வசிக்கும் சுமார் 100 நாடுகள் உள் ளன.* இந்துப் பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகள்தான் பெரும்பாலும் இந்த இயக்கத் தைத் தோற்றுவித்த நாடுகளாகும். இந்த இயக்கத்தின் ஆரம்பத்திற்கு அடிகோலிய மகாநாடுகளில் ஒன்றாகிய பாண்டுங் மகா நாட்டின் 30ஆம் ஆண்டு விழா 1985 ஏப்ரலில் கொண்டாடப்பட்டது.

கூட்டுச் சேரா இயக்கத்தின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் 7வது மகாநாட்டை நடத்திய இந்தியா அடுத்த மகாநாடு நடை பெறும் வரை இந்த இயக்கத்தின் தலைவ னாக இருக்கும். இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவதன் மீது கூட்டுச் சேரா இயக்கம் பெரும் கவனம் செலுத்து கிறது. இந்த இயக்கத்தின் கூட்டங்களிலும் ஆவணங்களிலும் இது பிரதிபலிக்கிறது. இந்துப் பெருங்கடலை சமாதானம், பாதுகாப்பு, ஒத் துழைப்பு மண்டலமாக மாற்றுவதுதான் இவற்றின் நோக்கமாகும்.

நிலவக் கூடிய ஏகாதிபத்திய சுரண்டல்

---

* கம்யூனிஸ்ட், இதழ் 7, 1983, பக்கம் 100. (ருஷ்ய மொழியில்.)

முறையை (மேற்கத்திய ஏகபோகங்கள்தான் இதில் முக்கியப் பங்காற்றுகின்றன) ஒழித்துக் கட்ட விடுதலையடைந்த நாடுகள் மேற் கொண்ட உறுதியான நடவடிக்கைகளை அமெரிக்க ஐக்கிய நாடும் மற்ற மேலைய நாடுகளும் இங்குதான் சந்திக்க நேர்ந்தன என்பது குறிப்பிடத் தக்கது.

70ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் முத லாளித்துவ உலகில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டது. முன்பிருந்தது போல் அமெரிக்க மற்றும் மேலைய ஏகபோகங்களால் எண் ணெயின் விலைகளை நிர்ணயிப்பதன் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது என்பதை இது காட்டியது. எண்ணெய் வளம் மிக்க வளர்முக நாடுகள் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் ஸ்தாபனமாக ஒன்றிணைந்து, எண்ணெய் சம்பந்தமான சலுகைகளை ஒழித்துக் கட்டின, சில சந்தர்ப்பங்களில் சோஷலிச நாடுகளுட னான ஒத்துழைப்பை விரிவாக்கி, ஏகாதிபத்திய எண்ணெய் கொள்கையின் பகடைக் காயாக இருந்த நிலையிலிருந்து வெளிவந்து இதற்குத் தீவிர எதிர்ப்பைக் காட்டும் சக்தியாக மாறின.

பொருளாதார நவீன காலனியாதிக்கத் திற்கு எதிராயும் உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் நிலவும் உறவு களை மறுபரிசீலனை செய்யவும் இவற்றை நியாயமான, ஜனநாயக அடிப்படைகளில் மாற் றியமைக்கவும் புதிய சர்வதேசப் பொருளா தார முறையை நிலைநாட்டவும் வளர்முக நாடுகளால் தீவிரமாயும் பயன்மிகு வகையிலும்

போராட முடியும் என்பதை இந்த அனுபவம் காட்டுகிறது. மேற்கூறிய புதிய பொருளாதார முறைக்கான போராட்டம் உண்மையான சுதந்திரத்திற்கான இளம் அரசுகளுடைய போராட்டத்தின் தலையாயத் திசைகளில் ஒன்றாகும்.

இப்போராட்டத்தில் சோவியத் யூனியன் இந்த அரசுகளின் தரப்பில் உள்ளது. புதிய சர்வதேசப் பொருளாதார முறையை நிலை நாட்ட வளர்முக நாடுகள் கொண்டுள்ள நாட்டத்தை ஆதரிக்கும் சோவியத் யூனியன் வாயளவில் மட்டுமின்றி செயலளவிலும் இதைச் செய்கிறது. சோவியத் யூனியனின் பங்கேற்போடு வளர்முக நாடுகளில் சுமார் 3,600 பெரும் தேசியப் பொருளாதார அமைப்பு கள் கட்டப்பட்டுள்ளன அல்லது கட்டப்பட்டு வருகின்றன, இவை இந்த அரசுகளின் சொத் தாகும். சோவியத் யூனியனின் உதவியோடு இந்நாடுகளுக்காக 12,50,000க்கும் கூடுதலான தேர்ச்சி மிகு நிபுணர்கள் பயிற்றுவிக்கப் பட்டுள்ளனர். சோவியத் யூனியன் தன்னுடைய மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் 1.3 சதவிகிதத்தை வளர்முக நாடுகளின் உதவிக்காக அனுப்புகிறது.

.இந்த உதவியின் கணிசமான பகுதி இந்துப் பெருங்கடல் பிரதேச நாடுகளுக்குச் செல்கிறது. ஒரு பெரிய தொழிற்சாலையைக் கட்டுவது பற்றி சோவியத் யூனியன் வளர்முக நாட்டுடன் செய்து கொண்ட முதல் உடன் படிக்கையின் 30வது ஆண்டு விழா 1985ஆம்

ஆண்டு பிப்ரவரி 2ஆம் தேதி கொண்டாடப் பட்டது. இது பிலாய் இரும்பு எஃகு உற்பத்தி ஆலை பற்றிய சோவியத்-இந்திய உடன்படிக் கையாகும். இதை ஜவஹர்லால் நேரு ''எதிர் கால இந்தியாவின் அடையாளம், முன்னறிவிப் பாளன்'' என்று அழைத்தார். பிரபல இந்திய அரசியல், அரசுப் பிரமுகரும் சமாதானப் போராட்ட வீரரும் எழுத்தாளரும் தத்துவ ஞானியுமாகிய கே. பி. எஸ். மேனன் பிலா யின் முக்கியத்துவம் பற்றி பின்வருமாறு எழுதினார்: ''இது இந்தியா மற்றும் சோவியத் யூனியனின் உறவுகளில் மட்டுமின்றி ஆசியா, ஐரோப்பாவின் உறவுகளிலும் கிழக்கு, மேற் கின் உறவுகளிலும் ஒரு மைல் கல்லாகும். வாஸ்கோ ட காமாவின் சகாப்தம் என்ற ழைக்கப்பட்ட நான்கு நூற்றாண்டுகளில்... ஆசியர்களும் ஆப்பிரிக்க கண்டத்தவரும் எளிய உடல் உழைப்பிற்கு ஏற்றவர்களாக மட்டுமே கருதப்பட்டனர். மூலப் பொருட்களை எடுத்து இவற்றை சல்லிக் காசிற்காக மேலைய நாடு களுக்கு விற்பது மட்டுமே இவர்களுடைய பங்காக இருந்தது. மேலைய நாடுகளோ இந்த மூலப் பொருட்களை உற்பத்திப் பொருட்களாக்கி அவற்றை யானை விலைக்கு விற்று செல்வம் சேர்த்தன. ஆசிய, ஆப்பிரிக்க மக்கள் அரசியல் சுதந்திரம் அடைந்த பின்னரும் இதே மாதிரி தொடர்ந்து நடைபெறுமென மேலைய அரசாங்கங்கள் கனவு கண்டன.''*

---

* P. Gopinath Menon, *Links of a Golden Chain,* Soviet Land Booklets, 1975, Foreword.

ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் தொழில் துறைமயப்படுத்த உதவிய ஒரே நாடு சோவியத் யூனியன் மட்டுமே என்று கூற முடியாது. இது இந்த விஷயத்தில் முன்னோடியாக விளங்கியது.

பிலாய் தொழிற்சாலைக்கான சப்ளைகள் சோவியத் யூனியனிலிருந்து இந்துப் பெருங் கடலின் வழியாகச் சென்றன. இது இன்று சோஷலிச நாடுகளுக்கும் ஆசிய, ஆப்பிரிக்க வளர்முக நாடுகளுக்கும் இடையிலான ஒத்து ழைப்பின் பெரும் பாதையாக மாறியுள்ளது.

பிலாயும் சோவியத்-இந்திய நட்புறவின் மற்ற 80 பெரிய கட்டுமானங்களும், அடை யாளச் சிறப்போடு சொல்லுவதெனில், வளர் முக நாட்டின் முதல் பிரதிநிதியாகிய இந்திய விண்வெளி வலவர் ராகேஷ் ஷர்மாவை விண் வெளிக்கு அனுப்பிய ஏவு தளமாக விளங்கின என்று கூறலாம். ராகேஷ் ஷர்மா 1984 ஏப்ரலில் ''சல்யூட்-7 — சயூஸ்-11'' சோவியத் விண்வெளி இணையத்தில் சோவியத்-இந்திய வலவர் தொகுதியில் ஒருவராக விண்வெளி யில் பறந்தார். விண்வெளியிலிருந்து இவர்கள் இந்தியப் பரப்பையும் இந்துப் பெருங்கடலை யும் படமெடுத்தனர். இந்தப் பயணம் சோவி யத்-இந்திய ஒத்துழைப்பிற்கு மட்டுமின்றி சோஷலிச உலகிற்கும் வளர்முக உலகிற்கும் இடையிலான ஒத்துழைப்பிற்கும் அடையாள மாக விளங்கியது.

இதன் தொடர்பில் இந்துப் பெருங்கடலின் மிகப் பெரும் முக்கியத்துவத்தைப் பற்றிச்

சொல்லாமலிருக்க முடியாது. ஐரோப்பா, கிழக்கு ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, தொலை கிழக்கு, ஆஸ்திரேலியா மற்றும் சமுத்திரப் பிரதேசம் ஆகியவற்றை இணைக்கும் கடல் மற்றும் வான் மார்க்கங்கள் இதன் வழியாகச் செல்லுகின்றன. அட்லாண்டிக் மற்றும் பசிபிக் பெருங்கடல் களை இணைக்கும் இந்துப் பெருங்கடல் கடல் மார்க்கங்களின் பெரும் மையமாகும்.

உலகப் பெருங்கடல் பரப்பில் வேறெங்கும் உள்ளதை விட இங்கு நீர் மார்க்கங்கள் பெரிதும் அடர்த்தியானவை. உதாரணமாக, ஹோர்மூஸ் ஜலசந்தியின் வழியாக மட்டும் உலகில் கப்பல்களின் மூலம் எடுத்துச் செல்லப் படும் எண்ணெயில் 57 சதவிகிதம் எடுத்துச் செல்லப்படுகிறது. ஒவ்வொரு 11 நிமிட இடை வெளியிலும் இங்கே கப்பல்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லுகின்றன.* இந்துப் பெருங் கடலின் மேலாகச் செல்லும் வான் மார்க்கங் களும் சமீப காலத்தில் பெரும் முக்கியத் துவத்தைப் பெற்றுள்ளன. இவற்றின் நீளம் 10 லட்சம் கிலோமீட்டர்களுக்கும் அதிகம். கண்டம் விட்டு கண்டம் செல்லும் வான் மார்க்கங்களுக்கு சேவை புரியும் 240 விமான நிலையங்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கு இந்துப் பெருங்கடல் பிரதேச நாடுகளில் உள்ளன.

இவையனைத்தும் இப்பிரதேசத்தில் சமாதா

* Brojendra Nath Banerjee, *Indian Ocean a Whirlpool of Unrest*, p. 22.

னம், அமைதி, ஒத்துழைப்பை ஏற்படுத்துவதன் அவசியத்தை, சர்வதேச சட்டங்களுக்கேற்ப இந்துப் பெருங்கடலைத் தங்கு தடையின்றி பயன்படுத்தும் வாய்ப்பை எல்லா நாடுகளும் பெறுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தும் அவசியத்தை கோடிட்டுக் காட்டுகின்றன.

ஆனால் இந்துப் பெருங்கடல் பிரதேசத்தில் வாழும் நாடுகள் இதை சமாதான மண்டல மாக மாற்ற வேண்டுமென பெரிதும் விரும் பினாலும் கூட இப்பிரதேசத்தில் நிலவரம் அனுகூலமானதாக மாறவில்லை. மாறாக ஆண்டுகள் செல்லச் செல்ல இது இன்னமும் பதட்டமானதாகி வருகிறது. பிரபல இந்திய விஞ்ஞானியும் கட்டுரையாளருமான பிரஜேந் திர நாத் பானர்ஜி 1984இல் வெளிவந்த தன் நூலிற்கு **இந்துப் பெருங்கடல்— பதட்ட நிலையின் படுபாதாளம்** என்று பெயரிட்டிருந் தது மிகவும் பொருத்தமானதாயிருந்தது. இது இங்கே நடைபெறும் நிகழ்ச்சிப் போக்கு களின் சாரத்தையும் இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் கவலையையும் பிரதிபலிக்கிறது. பத்தாண்டிற்கு முன், ஏன் அதற்கும் குறை வான ஆண்டுகளுக்கு முன் இங்கே நிலவரம் இவ்வளவு அபாயகரமானதாக இருக்கவில்லை. ஏன் இப்பிரதேசம் ‘‘பதட்ட நிலையின் படுபா தாளமாயிற்று’’? இதற்கான காரணங்கள் யாவை? இந்தப் ‘‘படுபாதாளத்திலிருந்து’’ வெளிவர வழிகள் உண்டா?

## அத்தியாயம் இரண்டு

# இந்துப் பெருங்கடல் எப்படி பதட்ட நிலை மண்டலமாயிற்று?

தலைமை நாடுகளுக்கும் இவற்றின் காலனிகளுக்கும் இடையிலான முரண்பாடுதான், மேலைய நாடுகளுக்கும் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக இவற்றைச் சார்ந்த அரசுகளுக்கும் இடையிலான முரண்பாடுதான் வரலாற்று ரீதியாக இந்துப் பெருங்கடல் பிரதேசத்தில் பிரதான முரண்பாடாக இருந்து வந்துள்ளது. தேசிய விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத காலனியாதிக்கவாதிகள் வெளியேறும்படி கட்டாயப் படுத்தப்பட்டார்கள். ஆனால் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் இவர்கள் ஆட்சியை எடுபிடியாட்களுக்குத் தந்து சென்றனர் அல்லது ''பிரித்தாளும்'' தந்திரத்தைப் பின்பற்றினர்.

உதாரணமாக, கிரேட் பிரிட்டன் இப்படித்தான் நடந்தது. இது மத அடிப்படையில் இந்தியாவை இரண்டாகப் பிரித்து, இவற்றின் இடையேயான உறவுகளில் பதட்ட நிலைக்கான வாய்ப்புகள் வரலாற்று ரீதியாக நீண்ட காலம் நிலவவும் இவற்றை சச்சரவுகளுக்குள்

இழுக்கவும் இயன்ற அனைத்தையும் செய்தது.

இந்த விஷயத்தில், ''சூயஸ் கால்வாயின் கிழக்கேயுள்ள'' பிரதேசத்திலிருந்து வெளியேறி, இதனுடைய கருத்துப்படி இதன் தொடர் பாக ஏதோ ஒரு ''வெற்றிடத்தை'' (''கரை யோர நாடுகளுக்கான அபாயத்தை'' அகற்று வதற்காக இதை ஏதோ இட்டு நிரப்புவது அவசியமாம்) ஏற்படுத்தும் பிரிட்டிஷ் கொள்கை குறிப்பிடத் தக்கது. பின்னால் இந்தத் தத்து வம், இப்பிரதேசத்தில் தன் இராணுவ நட மாட்டங்களை நியாயப்படுத்துவதற்காக அமெ ரிக்க ஐக்கிய நாட்டால் தீவிரமாகப் பயன் படுத்தப்பட்டது.

''சூயஸ் கால்வாயின் கிழக்கேயுள்ள'' பிர தேசத்திலிருந்து வெளியேறியதானது முந்தைய காலனியாதிக்க வல்லரசின் போர்த்தந்திரமே தவிர வேறில்லை. இந்த முந்தைய காலனி யாதிக்க வல்லரசு ஆயுதப் பலத்தால் கூட அன்னிய பிரதேசங்களைப் பிடித்து வைத் திருக்க இயலாமல் எப்படியாவது அங்கே தன் செல்வாக்கைத் தக்க வைக்க முயன்றது. ''எனவேதான் பிரிட்டன், ஆசியக் கண்டத்தில் உள்ள தன் தளங்களிலிருந்து உரிய நேரத்தில் வெளியேறி, போர்க்குணமுள்ள தேசிய இயக் கங்கள் அச்சுறுத்தாத, குறைந்த மக்கள் தொகையை உடைய இந்துப் பெருங்கடலின் சிறு தீவுகளின் மீது தன் கவனத்தை திருப்ப முடிவு செய்தது'' என்று பிரபல இந்திய விஞ்ஞானியாகிய தேவேந்திரா கவுஷிக் **இந்துப் பெருங்கடல்: பாதுகாப்பு பிரச்சினைகள்** எனும்

தன் நூலில் எழுதுகிறார். இந்துப் பெருங் கடலில் தன் திட்டங்களை நிறைவேற்று கையில் தென்னாப்பிரிக்க குடியரசு, ஆஸ்தி ரேலியா, நியூஜிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் பாரசீக வளைகுடாப் பகுதி அரசு களை ஆதாரமாகக் கொண்டு செயல்பட பிரிட்டன் திட்டமிட்டிருந்தது என்று ஆசிரியர் மேற்கொண்டு எழுதுகிறார். பிரிட்டனைப் பொறுத்த மட்டில் இது ''வெளியேறிய'' பின்னரும் கூட ஆசியா விசேஷ நலன்களின் மண்டலமாக இருந்தது என்று கவுஷிக் கோடிட்டுக் காட்டுகிறார்.*

''சூயஸ் கால்வாயின் கிழக்கேயுள்ள'' பிரதேசத்திலிருந்து வெளியேறும் முடிவை கிரேட் பிரிட்டன் 1968இல் அறிவித்தது. இங்கே மேற்கொண்டு தம் துருப்புகளைக் காலனி யாதிக்கவாதிகளால் தொடர்ந்து வைத்திருக்க இயலவில்லை. ஆனால் இந்நேரத்தில் இங்கே பிரிட்டனின் வெளிநாட்டு மூலதன முதலீடு களில் மூன்றில் இரண்டு பங்கு இருந்தது, இதன் அயல்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் மூன்றில் இரண்டு பங்கு இங்குதான் நடை பெற்றது. இக்காரணிகள் இப்பிரதேச நாடு களை முன்போன்றே தொடர்ந்து சுரண்ட பிரிட்டனுக்கு வாய்ப்பளித்தன. இந்தியா விலும் பாகிஸ்தானிலும் பிரிட்டன் பெரும்

---

* தேவேந்திரா கவுஷிக், இந்துப் பெருங்கடல்: பாதுகாப்பு பிரச்சினைகள், முன்னேற்றப் பதிப்பகம், 1976, பக்கம் 32. (ருஷ்ய மொழியில்.)

தொகைகளை முதலீடு செய்திருந்தது. மத்திய கிழக்கிலிருந்து எண்ணெயும் தென்னாப்பிரிக்க குடியரசிலிருந்து தங்கம், வைரம், யுரேனியமும் மலேசியாவிலிருந்து ரப்பர், வெள்ளீயமும் பிரிட்டனுக்கு வந்தன. பிரிட்டிஷ் பொருளாதாரம் பெரும் லாபம் அடைந்து வந்தது. ஆசியாவில் மட்டான இராணுவ உறுதி மொழிகளை மேற்கொண்ட பிரிட்டன், காலனிகளை அகற்றும் நிகழ்ச்சிப் போக்கு தடைபடும் என்றும், மத்திய ஆசிய அரசு கழகத் தலைவர் எஸ்லெர் டெனிங்கின் கூற்றுப்படி, ''அளவிற்கதிகமாயும் மிக விரைவாயும் உணவு உட்கொண்டால் வாயு சேர்ந்து வயிறு கெட்டு... ஏற்படும் மயக்கத்தைப்'' போல் மறைந்து விடும், ''பதட்ட நிலை தணிந்து, கொந்தளிப்புகள் அமைதியடையும்'' என்றும் நம்பியது.*

''சூயஸ் கால்வாயின் கிழக்கேயுள்ள'' பிரதேசத்திலிருந்து வெளியேறி, தீவுகளின் மீது கவனம் செலுத்த பிரிட்டன் முன்னராகவே தயார்படுத்திக் கொண்டது. இந்திய ஆராய்ச்சியாளர் கவுஷிக்கின் கூற்றுப்படி, இராணுவத் தளங்களுக்கான தீவுகளைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்தோடு **1964**ஆம் ஆண்டே பிரிட்டன் இந்துப் பெருங்கடலை வேவு பார்த்தது. இந் நடவடிக்கையின் மூலம் இந்துப் பெருங்கடல் பகுதியில் புதிய போர்த்தந்திரத்திற்கான அடிப்படையை ஆங்கிலேயர்கள் தயார்படுத்தி

---

* அதே நூல், பக்கம் 34.

னார்கள் என்பதோடு கூட இதை அவர்கள் அமெரிக்கர்களோடு கூட்டாகச் சேர்ந்து மேற்கொண்டார்கள் என்பதும் முக்கியமாகும்.

இந்துப் பெருங்கடலின் மேற்குப் பகுதியில் ''இந்துப் பெருங்கடலின் பிரிட்டிஷ் பரப்பு'' (B. I. O. T.) எனும் பெயரில் புதிய காலனியை ஏற்படுத்தும் தன் முடிவைப் பற்றி 1965ஆம் ஆண்டின் இறுதியில் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தது. ஓராண்டு கழிந்ததுமே ஆங்கிலேயர்கள் இதை அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு 50 ஆண்டு காலக்கெடுவிற்கு அளித்தனர். இப்படித்தான் பிரிட்டன் 30 லட்சம் பவுன்கள் தந்து மொரீஷியசிடம் வாங்கிய டியகோ கார்சியா தீவு அமெரிக்காவின் வசம் வந்தது. உள்ளூர் வாசிகளை இத்தீவை விட்டுத் துரத்திய அமெரிக்கர்கள் இங்கே ''தகவல் மையத்தைக்'' கட்ட ஆரம்பித்தனர். ஒரு சில ஆண்டுகளுக்குப் பின் இது ஒருவித அமெரிக்க அணு ஆயுத விமானந்தாங்கி அமைப்பாக மாறியது. 80ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் டியகோ கார்சியா தீவின் வரலாறு கிட்டத்தட்ட திரும்ப அப்படியே நடந்தது என்று கூறுவது தகும். பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க நவீன காலனியாதிக்கவாதிகள் டியகோ கார்சியா தீவு விற்பனையின் உதாரணத்தின்படி ஃபோக்லென்ட் தீவுகளின் விஷயத்திலும் நடந்து கொண்டனர்.

''சூயஸ் கால்வாயின் கிழக்கேயுள்ள'' பிரதேசத்திலிருந்து வெளியேறிய பிரிட்டன் சென்டோ மற்றும் சீட்டோ இராணுவக் கூட்டு

களின் உறுப்பு நாடாகத் தொடர்ந்து இருந்தது, இப்பிரதேசத்தில் இருந்த சில நாடுகளுடன் (மொரீஷியஸ், ஓமான், மலேசியா, கென்யா) இராணுவ உடன்படிக்கைகளைச் செய்து கொண்டிருந்தது, ஒரு சில நாடுகளில் இராணுவத் தளங்களை வைத்திருந்தது. இங்கே ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற முந்தைய காலனியாதிக்க வல்லரசின் நாட்டம் அப்படியே இருந்தாலும் சக்திகளின் விகிதம் மாறியிருந்தது. தன்னந்தனியாக தன் திட்டங்களை நிறைவேற்றுவது என்பது இயலாததாயிருந்தது. எனவேதான் பிரிட்டன், ஐ. நா. சபையின் தீர்மானங்களை மீறி, பிரிட்டிஷ் காமன் வெல்த்தில் உள்ள ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் எதிர்ப்புகளை அலட்சியம் செய்து தென்னாப்பிரிக்க குடியரசிற்கு சகலவிதங்களிலும் உதவுகிறது; ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் உள்ள தன் பொருளாதார நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு பல்தரப்பு காவற் சக்திகளைத் தோற்றுவிக்கும் தன் நவீன காலனியாதிக்கத் திட்டங்களில் தென்னாப்பிரிக்காவிற்கு முக்கியப் பங்கை ஒதுக்குகிறது. அதிலும் போர்த்தந்திர ரீதியாக முக்கியமான சைமன்ஸ்டாவுன் கப்பற்படைத் தளத்தைப் பயன்படுத்தும் உரிமை அதற்கிருந்தது.

தென்னாப்பிரிக்க குடியரசு, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகளை நெருங்கிய கூட்டாளிகளாகக் கொள்வது, ‘‘தீவுத் தந்திரத்திற்கு’’ மாறுவது, முக்கியமாக, இந்துப்

பெருங்கடலில் ஆதிக்கம் செலுத்துவதில் அமெரிக்காவுடன் ''உழைப்புப் பிரிவினை'' செய்து கொள்வது—''சூயஸ் கால்வாயின் கிழக்கேயுள்ள'' பிரதேசத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியது இப்படிப்பட்டதாகத்தான் இருந்தது.

''பிரிட்டிஷ் முறைப்படி வெளியேறுதல்'', அதாவது விடைபெறாமலேயே வெளியேறுதல் எனும் தொடர்மொழி நன்கு அறிந்ததே. ஆனால் நவீன காலனியாதிக்க முறைப்படி ''பிரிட்டிஷ் முறைப்படி வெளியேறும்'' இன்னொரு வகையும் உண்டு எனத் தெரிகிறது, அதாவது ''போய் வருகிறேன்'' என்று சொல்லி விட்டு உண்மையில் அங்கேயே தங்கி விடுவது. ''சூயஸ் கால்வாயின் கிழக்கேயுள்ள'' பிரதேசத்திலிருந்து பிரிட்டன் வெளியேறிய பின் தோன்றும் ''வெற்றிடத்தைப்'' பற்றிய தத்துவமும் இதன் கருத்துப்படி உருவாகும் ''சோவியத் அபாயம்'' பற்றிய தத்துவமும் பொய்யானவை என்பதற்கு இது வல்லவோ சான்று.

இந்தியாவின் பாதுகாப்பிற்கான ருஷ்ய அபாயம் என்றழைக்கப்படுவது மற்றும் இந்துப் பெருங்கடலில் புக ருஷ்யா செய்யும் முயற்சி எனும் கட்டுக்கதை (இதை 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே ஆங்கிலேயர்கள் பலமாக பிரச்சாரம் செய்தனர்) ஆகியவற்றைப் பற்றி குறிப்பிட்டு 1928ஆம் ஆண்டிலேயே ஜவஹர்லால் நேரு பின்வருமாறு எழுதினார்: ''கடந்த காலத்தில்

வெகு நாட்களாக ருஷ்ய படையெடுப்பு அபாயம் என்று எங்களுக்கு பூச்சாண்டி காட்டப்பட்டது; எங்களை ஆயுதந்தரிப்பதற்குப் பெரும் தொகைகளைச் செலவிடுவது இதைக் கொண்டு நியாயப்படுத்தப்பட்டது. ஜார் மன்னர்களின் காலத்தில், கடல் பரப்பையும் ஒருவேளை இந்தியாவையும் அடைவற்காக ருஷ்ய ஏகாதிபத்தியம் எப்பொழுதும் தெற்கு நோக்கி வர முயலுகிறது என்று எங்களுக்குக் கூறப்பட்டது. ஜார் இப்போது இல்லை... இப்போதோ சோவியத் அரசாங்கம் எம்மை அச்சுறுத்துவதாக எங்களிடம் கூறுகின்றார்கள்.''*

மாறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளுக்கு இடையேயான உறவுகளுக்கு உதாரணமாகத் திகழும் சோவியத்-இந்திய உறவுகள் 1971ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதானம், நட்புறவு, ஒத்துழைப்பு சம்பந்தமான ஒப்பந்தத்தால் வலுப்படுத்தப்பட்டன. ஆனால் சோவியத் இராணுவ அபாயம் பற்றிய கட்டுக்கதை மீண்டும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. ''சோவியத் தரப்பிடமிருந்து'' இந்துப் பெருங்கடல் பிரதேச நாடுகளுக்கு வரும் அபாயமும் இதில் அடங்கும். இந்துப் பெருங்கடலில் வல்லரசுகளின் போட்டியைப் பற்றிய தத்துவம் இதன் ஒரு வகையாகும்.

இந்தத் தத்துவம் இப்பிரதேசத்திலுள்ள

---

* J. Nehru, *Soviet Russia,* 1928, p. 191.

பல நாடுகளாலும் அம்பலப்படுத்தப்பட்டிருந் தாலும், இது இந்துப் பெருங்கடலில் நில வரத்தை ஸ்திரப்படுத்துவதில் தொடர்ந்து எதிர்மறையான பங்காற்றி வருகிறது. இத்தத் துவத்தின் பின் என்ன உள்ளது? சுருங்கக் கூறின் இது, இப்பிரதேசத்தில் தம் இராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ளதை நியாயப்படுத் தவும் இந்துப் பெருங்கடல் பிரதேச நாடுகளை ஆயுதப் போட்டி வட்டத்திற்குள் இழுக்கவும் நிலவரத்தைச் சீர்கேடாக்கவும் (அப்போது தான் இப்பிரதேச நாடுகளின் மீது தம் சித்தத்தைத் திணிக்க எளிதாயிருக்கும்) அமெரிக் காவும் இதன் கூட்டாளிகளும் மேற்கொண் டுள்ள பிரச்சார முயற்சியாகும்.

கடற்பலத்தில் விஞ்சி நிற்பது என்பது உலக ஆதிக்கத்தை அடைவதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்க கொள்கையின் கோடிக் கற்களில் ஒன்றாக ஆண்டாண்டு காலமாக இருந்து வருகிறது. அதாவது உலகந் தழுவிய அளவில் கடற்பரப்பில் ஆதிக்கம் செலுத்து வது. இந்துப் பெருங்கடல் இதற்கு விதிவிலக் கல்ல.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்னரே அமெரிக்க ஐக்கிய நாடு இந்துப் பெருங்கடல் பிரதேச நாடுகளினுள் புக ஆரம்பித்தது. அப்போது அமெரிக்கா, பிரிட்டனின் பெரும் நடமாட்டத்தைச் சந்திக்க நேர்ந்தது. இது யுத்த ஆண்டுகளிலும் தொடர்ந்தது, ஆனால் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில்தான், குறிப்பாக ‘‘கெடுபிடி

யுத்தம்'' கட்டவிழ்த்து விடப்பட்டதும்தான் அமெரிக்கா இப்பிரதேசத்தில் தன் நடமாட்டத்தை விரிவுபடுத்தும் முயற்சிகளைத் தீவிரப் படுத்தியது. இச்சமயத்தில் பொருளாதார நலன்கள் மட்டுமின்றி போர்த்தந்திர நலன் களும், திட்டவட்டமாகச் சொன்னால், அமெரிக்க இராணுவத் தளங்களை நிறுவுவதற் கான இடங்களைத் தேடும் முயற்சியும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை உந்தித் தள்ளின.

1948ஆம் ஆண்டிலேயே மத்திய கிழக்கு மற்றும் பாரசீக வளைகுடா நாடுகளுக்கான விசேஷ அமெரிக்கப் படைத்தலைமை ஏற் படுத்தப்பட்டு இது பஹ்ரேய்னில் வைக்கப்பட் டது. மிதக்கும் தளம், இரண்டு கண்ணிவெடிக் கப்பல்கள், இவற்றைக் கவனித்துக் கொள் ளவும் இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற் கவும் 200 பேர் அடங்கிய படை ஆகியவை இதிலடங்கும்.

50ஆம் ஆண்டுகளில் கம்யூனிச எதிர்ப்பு என்பது அமெரிக்க வெளிநாட்டுக் கொள் கையின் முக்கியப் போக்காகியது. சோஷலிச நாடுகளைச் சுற்றி, குறிப்பாக சோவியத் யூனியனைச் சுற்றி அமெரிக்க இராணுவக் கூட்டுகளையும் தளங்களையும் வாஷிங்டன் ஏற்படுத்த ஆரம்பித்தது, ஒரு சில ஆசிய, ஆப்பிரிக்க வளர்முக நாடுகளில் அமெரிக்க ஆதரவு ஆட்சிகளைப் பதவியிலமர்த்தத் துவங் கியது. இவையெல்லாம் இந்துப் பெருங்கடல் பிரதேச நாடுகளின் விஷயத்திலும் பின்பற்றப்

பட்டன. உலகின் இப்பரப்பிலும் அமெரிக்க விஸ்தரிப்பு நிலையானதாயிற்று.

அமெரிக்க ஐக்கிய நாடு இராணுவ உதவி குறித்து இரான், பாகிஸ்தான், சவுதி அரே பியா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளுடன் இருதரப்பு உடன்படிக்கைகளை செய்து கொண் டது. 1951இல் சவுதி அரேபியாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி டஹ் ரானில் உள்ள போர்த்தந்திர விமானப்படை தளத்தை அமெரிக்கா குத்தகைக்கு எடுத்துக் கொண்டது. தேசியப் பொருளாதாரத்தை வளர்த்து இதை அமெரிக்க ஏகபோகங்களின் செல்வாக்கிலிருந்து விடுவிக்க முயன்ற பிரதமர் மொசாதிக்கின் ஆட்சி மத்திய ஒற்றாடல் ஸ்தாபனத்தின் (சி. ஐ. ஏ.) உதவியோடு 1953இல் இரானில் கவிழ்க்கப்பட்டது. பத விக்கு வந்த புதிய ஆட்சி அமெரிக்கப் பொரு ளாதார மற்றும் இராணுவ உதவியோடு இப்பிரதேசத்தில் அமெரிக்காவின் போலீசாக இரானை மாற்றியது. அதே ஆண்டு எத்தியோப் பியாவில் உள்ள அஸ்மாராவில் தகவல் தொடர்பு மையத்தைக் கட்டுவது சம்பந்தமாக எத்தி யோப்பியாவுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இது இந்துப் பெருங்கடலில் உள்ள அமெரிக்கத் துருப்புகளுக்கும் பெண் டகனுக்கும் இடையே இடையறாத் தொடர் பிற்கு உதவ வேண்டும்.

இக்காலகட்டத்தில்தான் அமெரிக்காவின் நேரடித் தலைமையின் கீழ் இராணுவ-அரசியல் கூட்டுகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றின்

நடவடிக்கை மண்டலங்களில் இந்துப் பெருங் கடலும் அடங்கியிருந்தது. 1951இல் அன்சூசும் (ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, அமெரிக்கா), 1954இல் சீட்டோவும் (பாகிஸ்தான், ஆஸ்தி ரேலியா, நியூஜிலாந்து நாடுகளின் பங்கேற் போடு), 1955இல் பாக்தாத் உடன்படிக்கையும் (பின்னால் இது சென்டோவாகியது) தோற்று விக்கப்பட்டன. சென்டோவில் இந்துப் பெருங் கடலின் கரையோர நாடுகளில் பாகிஸ்தானும் இரானும் இடம் பெற்றன.

அமெரிக்க உதவி என்றழைக்கப்பட்டதா னது இந்த நேரத்தில், இளம் அரசுகளின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள் கையை அமெரிக்காவிற்குத் தேவையான திசை யில் திருப்ப பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. அமெரிக்க ஆதரவு ஆட்சிகள் நிலவிய நாடுகள் இந்த விஷயத்தில் அனுகூலமான நிலையில் இருந்தன. உதாரணமாக, இந்துப் பெருங் கடலின் கரையோர நாடுகளில் பாகிஸ் தானும் (497 மில்லியன் டாலர்கள் இராணுவ ''உதவியையும்'' 1,916 மில்லியன் டாலர்கள் பொருளாதார ''உதவியையும்'') இரானும் தான் (இந்த ''உதவிகள்'' முறையே 451.5 மில்லியன் டாலர்கள், 1,000 மில்லியன் டாலர் கள்) மிக அதிகத் தொகைகளைப் பெற்றன.

60ஆம் ஆண்டுகளில், ஜான் கென்னடி நிர்வாகத்தின் போது ''புதிய எல்லைகள்'' எனும் சித்தாந்தம் முன்வைக்கப்பட்டது. முரட்டுத்தனமான நிர்ப்பந்தம், மிரட்டுதல், பலவந்தம் ஆகியவற்றிற்கு மாறாக அதிக

நெகிழ்வான கொள்கையைக் கடைப்பிடிப் பதன் மூலம் இளம் வளர்முக நாடுகளைத் தன் பக்கம் இழுக்கும் முயற்சி இதன் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். இக்காலகட்டத்தில் இந்துப் பெருங்கடல் பிரதேச நாடுகளில் இந்தியாவின் மீது அதிகக் கவனம் திரும்பு கிறது. 50ஆம் ஆண்டுகளில் கூட்டுச் சேரா இயக்கத்தின் மீது அமெரிக்கா அதிகாரம் செலுத்த முயன்றது என்றால் (டால்லஸ் இந்த இயக்கத்தை ''ஒழுக்கக் கேடானது'' என்று கூட அழைத்தார்) 60ஆம் ஆண்டுகளின் நடுவில் அமெரிக்க ஆளும் வட்டங்கள் அதிக நெகிழ்வோடு நடந்து கொண்டன, கூட்டுச் சேரா இயக்கத்தைத் தோற்றுவித்த நாடுகளில் ஒன்றான, இந்த இயக்கத்திற்குத் தலைமை வகிக்கும் நாடுகளில் ஒன்றான இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைத் தன் கண் காணிப்பின் கீழ் கொண்டு வரவும் இதை இராணுவக் கூட்டுகளுக்குள் இழுக்கவும் இதன் மூலம் மற்ற வளர்முக, கூட்டுச் சேரா நாடு களில் தன் நிலையை பலப்படுத்திக் கொள் ளவும் முயற்சி செய்யப்பட்டது. இந்தியாவின் கூட்டுச் சேரா கொள்கையைக் குலைப்பதற் காக, இந்திய-சீன எல்லை சச்சரவைப் பயன் படுத்தி இந்தியாவின் மீது சில இராணுவ, மற்ற உடன்படிக்கைகளைத் திணிக்க முயன் றனர். ஆனால், இந்துப் பெருங்கடலில் அமெரிக்க 7வது கப்பற்படையின் ஒரு சில கப்பல்களை நிறுத்த இந்தியாவின் ஆமோதிப்பைப் பெற அமெரிக்கா தீட்டிய திட்டங்களுக்கு இந்திய

மக்கள் தீவிர எதிர்ப்பைத் தெரிவித்தனர். இறுதியாக, இந்தியாவின் சமாதான நாட்டமுடைய வெளிநாட்டுக் கொள்கையும் கூட்டுச் சேரா கொள்கையின் மீதான இதன் பிடிப்பும் இந்துப் பெருங்கடலில் அமெரிக்க விஸ்தரிப்புக் கொள்கையுடன் முரண்பாட்டிற்கு வந்தன.

60ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா அன்சூஸ் கூட்டின் நடவடிக்கையை விரிவுபடுத்தவும் இந்துப் பெருங்கடல் பகுதியில் தன் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இதைப் பயன்படுத்தவும் முயன்றது. ஆஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியில் நார்த் வெஸ்ட் கேய்ப் எனுமிடத்தில் தகவல் தொடர்பு மையத்தை ஏற்படுத்துவது பற்றி 1963இல் அமெரிக்கா ஆஸ்திரேலியாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டது. இது நாலரை ஆண்டுகளுக்குப் பின் செயல்படத் துவங்கியது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி இக்காலகட்டத்தில்தான் பிரிட்டன் இந்துப் பெருங்கடலின் பிரிட்டிஷ் பரப்பு என்றழைக்கப்பட்டதை (சாகோஸ் தீவுக் கூட்டமும் டியகோ கார்சியா தீவும் இதிலடங்கும்) அமெரிக்காவிற்கு குத்தகைக்கு விட்டது. 1967இல் அமெரிக்கா, சேய்ஷெல் தீவுகளைச் சேர்ந்த மாயே தீவைப் பயன்படுத்தும் உரிமையை பிரிட்டனிடமிருந்து பெற்றது.

இதற்குப் பிந்தைய ஆண்டுகளிலும் அமெரிக்கா இந்துப் பெருங்கடலின் இராணுவ-அரசியல் ''மீட்பைத்'' தொடர்ந்தது. எத்தியோப்பியாவிலும் (அஸ்மாரா) ஆஸ்திரேலியாவிலும் (பைன்

கேப், அலிஸ் ஸ்பிரிங்ஸ்) தகவல் தொடர்பு மையங்களும் தென் ஆஸ்திரேலியாவில் உள்ள வுமெரில் விண்வெளி தொடர்பு இராணுவ மையமும் ஏற்படுத்தப்பட்டன. இந்த நேரத்திலேயே, ஆப்பிரிக்காவின் தெற்கிலிருந்து ஆஸ்திரேலியா வரை இந்துப் பெருங்கடலில் உள்ள நேட்டோ நாடுகளின் தளங்களையும் அமெரிக்கத் தளங்களையும் ஒன்றாக இணைக்கும் திட்டங்களும் நேட்டோ மற்றும் சீட்டோவின் நடவடிக்கைகளைச் சீரிசைக்கும் திட்டங்களும் 6வது கப்பற்படையை (மத்தியதரைக் கடல் படை) 7வது கப்பற்படையுடன் (பசிபிக் பெருங் கடல் படை) இணைக்கும் திட்டங்களும் தோன்றின. இந்துப் பெருங்கடல் பகுதியினுள் பொருளாதார ரீதியாக அமெரிக்கா நுழைவதும் அதிகரித்தது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் மலிவான உழைப்புச் சக்தி கிடைத்ததால் மேற்கு ஐரோப்பிய நாடுகளை விட இங்கு அமெரிக்க முதலீடுகளின் வேகம் கூடியது. லாபம் அதிகரிக்க அதிகரிக்க லாபப் பசியும் கூடியது.

என்றாலும் 70ஆம் ஆண்டுகளின் துவக்கம் வரை, கரையோர நாடுகளுடன் அமெரிக்காவிற்கு ஓரளவு அரசியல் மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் நிலவினாலும், இங்கே தன் நடமாட்டத்தை அதிகரிக்க பெண்டகன் முயன்றாலும் இந்துப் பெருங்கடல் பிரதேசம் அமெரிக்காவிற்கு அவ்வளவு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டைத் தொட்டுச் செல்லும் அட்

லாண்டிக் மற்றும் பசிபிக் பெருங்கடல்களைப் போல் இது ‘‘ஜீவாதார முக்கியத்துவம்’’ வாய்ந்ததாக இருக்கவில்லை. அட்லாண்டிக் பெருங்கடல் இராணுவ-அரசியல் கூட்டாகிய நேட்டோவின் செல்வாக்கு மண்டலத்தில் உள் ளது, அமெரிக்காவை மேற்கு ஐரோப்பாவுடன் இணைக்கிறது. பசிபிக் பெருங்கடலின் ஓரமாக ஆசியக் கூட்டுகளில் வாஷிங்டனின் கூட்டாளி களாக உள்ள பல நாடுகளும் ஆசியாவில் அமெரிக்காவின் முக்கிய ஆதாரத் தளமாகிய ஜப்பானும் உள்ளன.

மேற்கு ஐரோப்பா அல்லது பசிபிக் பெருங் கடலுடன் ஒப்பிடுகையில் இந்துப் பெருங் கடலில் அமெரிக்க நலன்கள் அவ்வளவு முக் கியமானவையாக இல்லை. அச்சமயம் வெளி நாட்டு இலாகாவில் இராணுவ-அரசியல் விவ காரங்கள் சம்பந்தமான நிர்வாகக் குழுவின் தலைவராயிருந்த எர். ஸ்பாயெர்ஸ் உதாரண மாக 1971ல் காங்கிரசில் பின்வருமாறு அறி வித்தார்: ‘‘ஐரோப்பா, ஆசியாவிற்கு மாறாக இந்துப் பெருங்கடல் பிரதேசம் அமெரிக்காவின் விசேஷ கவனத்தைக் கவரவில்லை, சக்தி களின் மையச் சமன்பாட்டிற்கு எப்போதுமே பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வில்லை.’’ *

70ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையைத் தீட்டுபவர்கள் ஆசியாவில் புதிய கொள்கையின் வரம்புகளை

* *Congressional Records,* April 1974, p. E 2196.

வளர்த்து விரிவாக்கினர். இதில் கடற்படை போர்த்தந்திரத்திற்கு முக்கியப் பங்களிக்கப் பட்டது, ஆப்பிரிக்க-ஆசிய பெருங்கடல் பிரதேசத் தில் ஆதிக்கம் செலுத்துவது உலக அரசியலின் பின்னணியில் பார்க்கப்பட்டது. பன்முக இராணுவ நடமாட்டப் போக்கு, குறிப்பாக இராணுவத் தளங்களைப் பயன்படுத்தி கடற் படை நடமாட்டம் மேன்மேலும் அதிகமாக உணரப்பட்டது. அதாவது ஏகாதிபத்தியவாதி கள் நவீன காலனியாதிக்கப் போர்த்தந் திரத்தை, இராணுவ-அரசியல் நடமாட்டம் வலுத்து வருவதை இப்பிரதேசத்தில் உள்ள தமக்கு விசுவாசமான ஆட்சியினருடனான பாசாங்குத்தனமான ''ஒத்துழைப்பால்'' மூடி மறைக்க முயலுகின்றனர். ஆனால் இது, சாராம்சத்தில் பார்த்தால், ஒரு சில ஆசிய நாடுகளைக் கொண்டு அல்லது இவற்றின் உதவியோடு மற்ற ஆசிய நாடுகளை ஒடுக் கவோ கொள்ளையடிக்கவோ செய்யப்பட்ட முயற்சியாகும்.

இராணுவத் தளங்கள் மற்றும் அந்தந்த அமைப்புகளைப் பயன்படுத்தும் உரிமைகள், போதுமான சக்திகள் மற்றும் வாய்ப்புகளைப் பேணிக் காப்பதுதான் இந்துப் பெருங்கடலில் அமெரிக்கக் கொள்கையின் நோக்கமாக இருந் தது.

இந்நேரத்திலேயே பெண்டகன் இந்துப் பெருங்கடலை அமெரிக்காவிற்கு அதிகபட்ச அக்கறையுடைய பிரதேசமாகக் கருதியது; அவ்வப்போது இங்கே அமெரிக்க இராணுவக்

கப்பல்களின் நடமாட்ட அவசியத்தைப் பற்றி அறிவிக்கப்பட்டது.

ஆனால் இந்நேரத்தில் பிரிட்டன் ''சூயஸ் கால்வாயின் கிழக்கேயுள்ள'' பிரதேசத்தி லிருந்து தன் இராணுவத்தில் கணிசமான பகுதியை இன்னமும் வெளியேற்றவில்லை. இங்கே பிரெஞ்சு துருப்புகளும் இருந்தன. இவ்வாறாக ஏகாதிபத்தியத்தின் பொது நலன்கள் தேசிய விடுதலை இயக்கத்தின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றப்பட்டன. இத னிடையே அமெரிக்கா வியட்நாமில் தான் நடத்திய மாசு படிந்த யுத்தத்தில் தன் கரங் களைக் கணிசமான அளவு கறை படியச் செய்திருந்தது. இல்லாவிடில் இந்துப் பெருங் கடல் பகுதியில் அமெரிக்கா இன்னமும் விரைவாகப் புகுந்திருக்கும்.

வியட்நாமிய யுத்தத்தின் விளைவாய் உலகில் அமெரிக்காவின் நிலை பலவீனமடைந்ததானது, ஆசியக் கண்டத்தில் ஆக்கிரமிப்பு நடவடிக் கைகளில் அமெரிக்கத் துருப்புகள் நேரடியாக பங்கேற்பதை முன்னனுமானிக்கும் தன் வெளி நாட்டு கொள்கைகளை மறுபரிசீலனை செய் யும்படி 1969 ஜனவரியில் ஆட்சிக்கு வந்த நிக்சன் நிர்வாகத்தைக் கட்டாயப்படுத்தியது. இந்தப் புதிய போர்த்தந்திரமானது, இதை உருவாக்கியவர்களின் கருத்துப்படி, முக்கியமாக தீவுகளில் உள்ள தளங்களைப் பயன்படுத்து வதன் மூலமும் இந்துப் பெருங்கடல் பகுதியில் தன் கடற்படை நடமாட்டத்தை விரிவுபடுத்து வதன் மூலமும் அமெரிக்காவின் ஏகாதிபத்திய

நிலைகளின் பாதுகாப்பிற்கு வகை செய்ய வேண்டும்.

''சூயஸ் கால்வாயின் கிழக்கேயுள்ள'' பிர தேசத்திலிருந்து 1971ஆம் ஆண்டிற்குள்ளேயே துருப்புகளை வெளியேற்றும் தம் உத்தேசத்தை ஆங்கிலேயர்கள் அறிவித்தனர் எனும் அம்சமும் தன் தாக்கத்தைச் செலுத்தியது. விரைவில் முடிவுறும் வாய்ப்பில்லாத பெரும் ஆக்கிரமிப்பு யுத்தத்தை வியட்நாமில் நடத்திய வாஷிங் டனால் — பெண்டகனின் கூற்றுப்படி — இப்பிர தேசத்தில் தோன்றிய ''வெற்றிடத்தை'' நிரப்ப இயலவில்லை. அதே சமயம், பிரிட்டிஷ் காலனி யாதிக்கத்திலிருந்து முழு விடுதலை பெறுவதற் காக இந்துப் பெருங்கடல் பிரதேச மக்கள் நடத்திய போராட்டம் பிரிட்டிஷ் காலனி யாதிக்கத் துருப்புகள் மேற்கொண்டு இங் கிருப்பதை இயலாததாக்கியுள்ளது என்பதைப் புரிந்து கொண்ட வாஷிங்டன், பிரிட்டிஷ் துருப்புகளைக் கொண்டு நேட்டோ கூட்டைப் பலப்படுத்துவதில் அக்கறை கொண்டிருந்தது. இந்துப் பெருங்கடலில் எப்படிப்பட்ட கொள் கையைப் பின்பற்றுவது என்பது சம்பந்தமாக அமெரிக்க அரசியல்வாதிகளிடம் திட்டவட் டமான கருத்தொற்றுமை அக்காலத்தில் நிலவவில்லை. இதை அமெரிக்காவின் ''ஜீவா தார நலன்களின்'' மண்டலத்தில் சேர்ப்பது பெரிதும் அவசரமானது என்று சிலர் கருதினர். இப்பிரதேசத்தில் அமெரிக்காவின் பாதுகாப்பு நலன்கள் முக்கியமாக இரான், சவுதி அரே பியா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளை

உள்ளடக்கியுள்ளன என்று அரசுத் துறைச் செயலரின் காங்கிரசுடனான தொடர்பு சம்பந்தமான உதவியாளர் டேவிட் அப்ஷாயிர் 1971ஆம் ஆண்டிலேயே கோடிட்டுக் காட்டினார். ஆஸ்திரேலியாவைப் பொறுத்தமட்டில் இது பசிபிக் பெருங்கடல் போர்த்தந்திரத் தொடர்பிலும் இஸ்ரேலும் ஜோர்டனும் மத்தியதரைக் கடல் அரசியலிலும் முக்கியமானவை.*

70ஆம் ஆண்டுகளின் மத்தியில் இந்துப் பெருங்கடல் பற்றிய திட்டவட்டமான அணுகுமுறையை உருவாக்குவதற்கான சூழ்நிலைகள் உருவாயின. அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதார, அரசியல், இராணுவ விஸ்தரிப்பு அதிகரித்ததும் மற்ற சில விஷயங்களும் இதற்குக் காரணமாகும். வியட்நாமில் அமெரிக்காவின் தோல்வி இப்பிரதேசத்தில் இராணுவ நடமாட்டத்தை அதிகரிக்கும்படி பெண்டகனின் போர்த்தந்திரவாதிகளைக் கட்டாயப்படுத்தியது. இந்துப் பெருங்கடல் தனி போர்த்தந்திர மண்டலமாக்கப்பட்டது. ‘‘இந்துப் பெருங்கடல், அடுத்த பத்தாண்டுகளில் உலகளாவிய சக்திகளின் சமன்நிலையில் மாற்றங்கள் ஏற்படும் ஒரு பிரதேசமாக மாறியுள்ளது. இப்பிரதேச சம்பவங்களின் மீது செல்வாக்கு செலுத்தும் நிலையில் நாம் இருக்க வேண்டுமென்பது இதன் பொருள்; இங்கே நம் இராணுவப் பலத்தைப் பரப்பும் திறமை

* *The Defence Monitor,* April 1974, p. 2.

இத்தகைய செல்வாக்கின் முக்கிய அம்ச மாகும்''* என்று அமெரிக்க கடற்படைத் தலைமையகத்தின் முன்னாள் தளபதி அட் மிரல் ஏ. ஸமுவோல்ட் 1974இல் அமெரிக்க காங்கிரசின் அமர்வில் கூறினார்.

70ஆம் ஆண்டுகளின் நடுவில் இது போன்ற அறிக்கைகள் அமெரிக்க இராணுவ, விஞ்ஞான, சில நேரங்களில் அரசாங்க வட்டங்களில் மேன்மேலும் அடிக்கடி வெளிவரலாயின. ''பலத் தின் நிலையிலிருந்து'' அரசியலை நடத்தும் அதிகப் பயன் தர வல்ல சாதனங்களையும் முறைகளையும் பயன்படுத்தக் கோரும் அறை கூவல்களும் இந்த அறிக்கைகளில் இடம் பெற்றிருந்தன. ஆனால் அக்காலகட்டத்தில் உலகில் பதட்ட நிலைத் தணிவு எனும் போக்கு நிலைபெற்று வலுவடைந்து வந்த போது இப்பிரதேசத்தில் அமெரிக்க இராணுவ நடமாட்டத்தை அதிகப்படுத்துவது சம்பந்த மான திட்டங்களுக்கு அமெரிக்க அரசாங்கத் திலும் காங்கிரசிலும் முழு ஆதரவு கிட்ட வில்லை. இது பின்னால்தான் கிடைத்தது.

இந்துப் பெருங்கடல் பிரதேசத்தில் அமெரிக்க இராணுவ விஸ்தரிப்பு பற்றிய வரலாற்றைச் சுருக்கமாகப் பார்த்தால், 1948ஆம் ஆண்டிலேயே அமெரிக்கப் போர்க் கப்பல்கள் பஹ்ரேய்னில் இருந்த மனாமா பிரிட்டிஷ் இராணுவத் தளத்தில் இருந்தன என்பதிலிருந்து ஆரம்பிக்க

---

* *Proposed Expansion of US Military Facilities in the Indian Ocean,* Hearings before the Committee on Foreign Relations US Senate, pp. 2—3.

வேண்டும். 60ஆம் ஆண்டுகளில் அமெரிக்க கடற்படை யூனிட்டுகள் இந்துப் பெருங்கடல் பகுதிக்கு மேன்மேலும் அடிக்கடி வர ஆரம் பித்தன. கிட்டத்தட்ட ஆண்டுதோறும் இவை இங்கே நடக்கும் ஒத்திகைகளில் பங்கேற் கின்றன. இது மட்டுமல்ல. 1962ஆம் ஆண்டு இந்திய-சீன எல்லை சச்சரவின் போது வங்காள விரிகுடாவிற்குச் செல்லுமாறு அமெரிக்க 7வது கப்பற்படை யூனிட்டிற்குக் கட்டளையிடப்பட் டது. 1964இல் இந்துப் பெருங்கடலுக்கான அமெரிக்க கடற்படை யூனிட் — கோன்கோர்ட் (Concord) தோற்றுவிக்கப்பட்டது. இதே ஆண்டில் தாக்குதல் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற் காக, அமெரிக்க கப்பல்களைப் பயன்படுத்தி கூட்டு அமெரிக்க-இரானிய பயிற்சிகள் நடைபெற்றன.

70ஆம் ஆண்டுகளின் துவக்கத்திலிருந்து இத் தகைய ஒத்திகைகள் அளவில் பெரியவை யாயின. இவற்றில் விமானந்தாங்கிக் கப்பல் களும் பங்கேற்கத் துவங்கின. 1971 டிசம்பரில் கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் விடுதலைப் போராட்டம் உச்சக் கட்டத்தில் இருந்த போது இத்தகைய விமானந்தாங்கிக் கப்பல் களில் மிகப் பெரியதாகிய ''என்டர்பிரைஸ்'' பல போர்க் கப்பல்களின் புடைசூழ வங்காள விரிகுடாவில் நுழைந்து, எதிர்கால வங்கதேச மக்களின் நீதியான போராட்டத்தை ஆதரித்த இந்தியாவை அச்சுறுத்தியது.

1972இல் இந்துப் பெருங்கடல், அமெரிக்க பசிபிக் கடற்படையின் ''பொறுப்பு மண் டலமாக்கப்பட்டது''.

1974இல் அமெரிக்க கடற்படை சென்டோ கூட்டின் ''மிடில்லிங்க்'' என்ற மிகப் பெரும் ஒத்திகைகளில் கலந்து கொண்டது. இவற்றில் அணு நீர்மூழ்கிக் கப்பல்கள் உட்பட 50 போர்க் கப்பல்கள் வரை பங்கேற்றன. இந்த ஒத்திகைகளின் போது அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பலாகிய ''கன்ஸ்டலேய்ஷன்'' பாரசீக வளைகுடா நீர்ப்பரப்பினுள் வந்து, அமெரிக்காவிற்கு எண்ணெய் சப்ளை செய் வதன் மீது தடை விதித்திருந்த அராபியர்கள் முன் தன் பலத்தைக் காட்டியது. இதே போல் 1975இலும் மீண்டும் நடந்தது—''என்டர்பி ரைஸ்'' என்ற விமானந்தாங்கிக் கப்பலின் தலைமையில் அமெரிக்க 7வது கப்பற்படையின் கப்பல்கள் இப்பிரதேச நாடுகளின் மீது நிர்ப் பந்தம் செலுத்தும் நோக்கோடு இந்துப் பெருங்கடலில் மீண்டும் தோன்றின. ஏற்கெனவே துவங்கிய அமெரிக்க இராணுவத் தளங்களின் கட்டுமானமும் புதிய தளங்களின் தேட்டமும் துரிதமான வேகங்களில் இப்போது தொடர்ந் தன. 1971இல் டியகோ கார்சியாவில் ''தகவல் தொடர்பு கேந்திரத்தின்'' கட்டுமானம் ஆரம்ப மாகியது, பின் 1974இல் பெரும் இராணுவக் கட்டுமானம் குறித்து (அமெரிக்க போர்த்தந் திரச் சக்திகளை நிறுத்துவதற்கான அமைப்பு கள் உட்பட) பிரிட்டிஷ்-அமெரிக்க உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இத்தீவில் இராணுவ விமானத் தளம் கட்டப்பட்டது, இதன் வானூர்தி ஏற்ற இறக்க ஓடுபாதை "B-52" போர்த் தந்திர குண்டுவீச்சு விமானங்களுக்கும் பயன்

படக் கூடியது; விமானந்தாங்கிக் கப்பல்கள் உட்பட போர்க் கப்பல்கள் நிற்பதற்கான அலை இடைகரை கட்டப்பட்டது, எரிபொருள் மற்றும் போர்த் தளவாடங்களுக்கான கிடங்கு கள் தோற்றுவிக்கப்பட்டன, புதிய தகவல் தொடர்பு மற்றும் வானொலி வேவு மையம் ஏற்படுத்தப்பட்டது. டியகோ கார்சியா தளம், இப்பிரதேச நாடுகளின் மீது நிர்ப்பந்தம் செலுத்தும் முக்கிய அமெரிக்க ஆதாரத் தள மாக, தேசிய விடுதலை இயக்கத்திற்கெதிரான போராட்டக் கோட்டையாக மாறியது. 4.8 கி. மீ. அகலமும் 6.4 கி. மீ. நீளமும் மட்டுமே உடைய சிறிய, தென்னை மரங்களடங்கிய தீவாகிய டியகோ கார்சியா பத்தே ஆண்டு களில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ''மூழ் கடிக்கப்படாத விமானந்தாங்கிக் கப்பலாக'' மாறியது. இந்தப் பிரம்மாண்டமான ''கப்பல்'' இடையறாது ஆயுதந்தரித்து வருகிறது. இதில் அணு ஆயுதமும் இரசாயன ஆயுதமும் வைக் கப்பட்டுள்ளன, கிடங்கு கப்பல்கள் இங்கே கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளன, அணு நீர்மூழ்கிக் கப்பல்கள் வருவதற்கான வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

டியகோ கார்சியாவின் வரலாறு நல்ல படிப்பினையைத் தர வல்லது. இது இந்துப் பெருங்கடல் முழுவதிலும் அமெரிக்க கொள் கையின் கண்ணாடியாகும்.

என்றாலும் 70ஆம் ஆண்டுகளின் இரண் டாம் பாதியிலோ இறுதியிலோ கூட இந்துப் பெருங்கடலில் நிலைமை இவ்வளவு பதட்ட

மானதாக இருக்கவில்லை. கரையோரமில்லா அரசுகளின் இராணுவ நடமாட்டம் ஒப்பீட் டளவில் மட்டானதாகவே இருந்தது. அப் போது பதட்ட நிலைத் தணிவுப் போக்கை மேலைய நாடுகள், முக்கியமாக அமெரிக்கா இன்னமும் குலைக்கவில்லை. இந்துப் பெருங் கடலைச் சமாதான மண்டலமாக்குவது தொடர் பாக இப்பிரதேச நாடுகள் முன்வைத்த கருத்து மேன்மேலும் பிரபலமாகியது. அப்போது பதட்ட நிலைத் தணிவுப் போக்கை இப்பிர தேசத்திற்கும் கொண்டு வரலாமெனப்பட்டது. இந்நிலையில், இந்துப் பெருங்கடலில் ஆயுதப் போட்டியைக் கட்டவிழ்த்து விடும் போக்கைத் தடுத்து நிறுத்தும் நோக்கைக் கொண்ட சோவியத் யூனியன் இப்பிரதேச நிலவரம் குறித்து அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தது.

இப்பிரதேச நிலையை அணுகும் போது சோவியத் யூனியன் தன் வெளிநாட்டுக் கொள்கையின் பொதுவான சமாதானப் போக்கை ஆதாரமாகக் கொண்டு செயல்படு கிறது. இந்துப் பெருங்கடலில் தனக்கு அரசு நலன்கள் இருந்தன, இப்போதும் இருக்கின் றன, இனியும் இருக்கும் எனும் அம்சத்தை சோவியத் யூனியன் எப்போதுமே மறைத் ததில்லை. நீண்ட நெடுங்காலமாக ஆசிய நாடுகளுக்கான ருஷ்யாவின் சமாதானமான வர்த்தகப் பாதை இந்துப் பெருங்கடலின் வழியாகத்தான் செல்கிறது. இன்று சோவியத் யூனியன் இந்துப் பெருங்கடலின் மூலம் பல



4–898

டஜன் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுடன் வர்த்தக, பொருளாதார உறவுகளைக் கொண்டுள்ளது. இது அந்நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும், இரு தரப்பிற்குமே அனுகூலமானது. உலகப் புவியியல் படத்தைப் பார்த்தால், இந்துப் பெருங்கடல் சோவியத் யூனியனுக்கு எவ்வளவு பெரும் தேசியப் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது என்பது விளங்கும். ஏனெனில் இது மட்டும்தான் ஆண்டு பூராவும் உறையாமல், நாட்டின் மேற்குப் பகுதியையும் கிழக்குப் பகுதியையும் இணைக்கும் வழியாகும். இந்துப் பெருங்கடலில் சோவியத் நாடு விண்வெளி ஆராய்ச்சி உட்பட பெரும் விஞ்ஞான தேட்டங்களையும் ஆராய்ச்சிகளையும் நடத்தி வருகிறது. 1984இல் சோவியத் மற்றும் இந்திய விண்வெளி வலவர்கள் விண்வெளியில் பறந்த போது இந்துப் பெருங்கடலில் இருந்த சோவியத் விஞ்ஞானக் கப்பல்கள் இவர்களுடன் தகவல் தொடர்பு வைத்திருந்தன.

இந்துப் பெருங்கடலில் சோவியத் போர்க் கப்பல்கள் இல்லையா என்ன? ஆம், இவையும் உள்ளன. ஆனால் சோவியத் யுத்த அபாயம் எதுவும் கிடையாது. இந்துப் பெருங்கடலிலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்களுக்கு அப்பால்தான் அமெரிக்கா உள்ளது என்றால் சோவியத் நாட்டின் பரப்போ ஒரு சில நூறு கிலோமீட்டர்கள் தூரத்தில் தான் உள்ளது என்பது உலகப் படத்தைப் பார்த்தாலே விளங்கும். இந்துப் பெருங்கடலில் உள்ள கப்பல்கள், விமானங்கள், இராணுவத்

தளங்களிலிருந்து சோவியத் பரப்பை எளிதாகத் தாக்கலாம், துருவ வட்டத்திலுள்ள தைமீர் வரை முற்றிலுமாக சோவியத் பரப்பு தாக்கு தலுக்கு உட்படக் கூடிய நிலையில் உள்ளது என்பது நன்கு புரியும். எனவே இந்துப் பெருங் கடலில் உள்ள நிலவரத்தை சோவியத் யூனிய னால் அலட்சியப்படுத்த இயலாது. இந்நிலவரம் சோவியத் நாட்டின் பாதுகாப்பை நேரடி யாகப் பாதிக்கிறது.

தன் பாதுகாப்பு நலன்களுக்காகத்தான் சோவியத் யூனியன் இந்துப் பெருங்கடலில் போர்க் கப்பல்களை வைத்திருக்கும்படி கட் டாயப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் சோவியத் யூனியன் தன் போர்த்தந்திரச் சக்தி களை இங்கு கொண்டு வந்து நிறுத்த வில்லை. இதற்கு இங்கே இராணுவத் தளங்கள் இல்லை, இவற்றைப் பெறும் நோக்கமும் இதற்குக் கிடையாது. போர்க் கப்பல்களோ, 1971இலிருந்து இவை இங்கு குறைந்த பட்ச எண்ணிக்கையில், மாற்றமின்றி உள்ளன. ஒரே சமயத்தில் இங்கே 4—6 ஸ்குவாட்ரன் கண்ணிவெடிக் கப்பல்கள், ரோந்து கப்பல்கள் மற்றும் 5—6 இழுவை கப்பல்கள் ஆகியவை மட்டுமே உள்ளன. இந்தக் கப்பல்கள் கொள் ளும் மொத்த எடை ஒரு அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பலின் நீர்ம எடையின் பாதியை விடக் குறைவு. முக்கியமானது என்னவெனில், தம் நடைமுறைத் தந்திர-செயல்நுட்ப தன்மை களில் இவை முற்றிலும் தற்காப்புப் பணிகளை நிறைவேற்றக் கூடியவை, இவற்றால் தாக்கு



4*

தல் நடவடிக்கைகளை, அதாவது கரைக் கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது. இவை பாதுகாக்க மட்டுமே வல்லவை, இவற்றால் தாக்க முடியாது, இவை தற்காப்பில் மட்டுமே இருக்கும், அச்சுறுத்தலில் இறங்காது.

சோவியத் இராணுவ பிரதான படைத் தலைமையகத் துணைத் தலைவர் அட்மிரல் நிக்கலாய் அமேல்கோ சோவியத் கடற்படை யின் தன்மை குறித்து பின்வருமாறு எழுதி னார்: "சோவியத் யூனியனின் மீது படை யெடுப்பு அபாயம் அதிகரித்த போது, கடற் படை உட்பட தன் இராணுவத்தைப் பலப்படுத் தும் சில நடவடிக்கைகளை எடுக்கும்படி சோவியத் யூனியன் நிர்ப்பந்திக்கப்பட்டது... ஆனால் இதனால் சோவியத் கடற்படையின் பணிகள் கோட்பாட்டு ரீதியான மாற்றங் களை அடைந்து விட்டன என்றோ, இது பெருங்கடல் படையாகி தன் பாதுகாப்புத் திசையமைவை இழந்து விட்டது என்றோ பொருளாகுமா? சோவியத் இராணுவ சித்தாந் தம் எப்போதுமே பாதுகாப்புத் தன்மையை உடையதாகத்தான் இருந்து வந்துள்ளது, இப்போதும் இருக்கிறது. பாதுகாப்புச் சாதன மாக இராணுவப் பலத்தைப் பயன்படுத்தும் கருத்து மட்டுமே இதன் அடிப்படையாகும்."*

70ஆம் ஆண்டுகளின் இறுதியிலும் இப்போ தும் இந்துப் பெருங்கடலில் உள்ள சோவியத்

---

* மாஸ்கோவ்ஸ்கியே நோவஸ்தி, இதழ் 11, 1984. (ருஷ்ய மொழியில்.)

கப்பல்களுக்கு இவ்வார்த்தைகள் முற்றிலுமாகப் பொருந்தி வரும். அத்தோடு கூட இவற்றின் பலம் கடந்த 15 ஆண்டுகளாக இங்கு மாற்ற மின்றி உள்ளது.

இந்துப் பெருங்கடல் நிலவரம் பற்றிய சோவியத்-அமெரிக்கப் பேச்சுவார்த்தைகள் 1977 ஜூனில் துவங்கி 1978 பிப்ரவரி வரை நடந் தன. 4 சுற்று பேச்சுவார்த்தைகள் நடை பெற்றன. அமெரிக்க ஐக்கிய நாடு ஏன் பேச்சுவார்த்தைகளுக்கு வந்தது? இவர்கள் எதை அடிப்படையாகக் கொண்டு இயங் கினர்? இக்கேள்விகளுக்கான பதில்கள் விரைவி லேயே தெளிவாயின.

ஆரம்பத்தில் பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை யளிப்பவையாக விளங்கின. இந்துப் பெருங் கடலில் இராணுவ நடமாட்டத்தைக் குறைக் கும் பிரச்சினைகளைப் படிப்படியாக, கட்டம் கட்டமாக அணுக இரு தரப்புகளும் ஒப்புக் கொண்டன. முதலில் தம் இராணுவ நடமாட் டத்தை அதிகரிப்பதில்லையென்றும் பின் இதைக் குறைக்க ஆரம்பிப்பது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. எதிர்கால குறைப்பின் ஒரு சில கருத்து நிலைகள் குறித்து கருத் தொற்றுமை அடையப்பட்டது. மிக முக்கிய மானது என்னவெனில், இப்பிரதேசத்தில் புதிய இராணுவத் தளங்களை ஏற்படுத்துவதில்லை என்றும் டியகோ கார்சியாவிலும் பேர்பேரா விலும் (சோமாலி) உள்ள தளங்களை அகற்று வது என்றும் உடன்பாடு செய்து கொள்ளப் பட்டதாகும்.

இப்பிரதேச நாடுகளும் உலக மக்களும் இப்பேச்சுவார்த்தைகளை உன்னிப்பாகக் கவனித் தனர். இவை வெற்றிகரமாக முடியுமென்றும் இப்பிரதேசத்தில் நம்பிக்கை, பாதுகாப்பு, சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்துவதில் இவை பெரும் பங்காற்றுமென்றும் ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 32வது அமர்வு நம்பிக்கை தெரிவித்தது. ஒப்புக் கொண்டவற்றை எழுத்து வடிவில் உறுதிப்படுத்தும் சிறு காரியம் மட்டுமே எஞ்சியுள்ளதாகத் தோன்றியது. சோவியத் யூனியன் இதற்குத் தயாராக இருந்தது. ஆனால் அமெரிக்கா, பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த நேரத்தில், எந்த டியகோ கார்சியா தளத்தை அகற்றுவதாக பேச்சுவார்த்தைகளில் ஒப்புக் கொள்ளப்பட் டதோ அந்தத் தளத்தை விரிவுபடுத்துவதற் காக 3 மில்லியன் டாலர்களை ஒதுக்கியது. இந்துப் பெருங்கடலில் சோவியத் யூனியன் ஏதோ தன் கடற்படைச் சக்திகளைப் பெருக் கியுள்ளதாக பொய் குற்றஞ்சாட்டி 1978 பிப்ரவரியில் அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டது. பின் சோவியத் யூனியன் பன்முறை முன்மொ ழிந்தும் இவற்றை மீண்டும் துவக்க அது ஒப்புக் கொள்ளவில்லை.

இந்நேரத்தில் அமெரிக்கா, இந்துப் பெருங் கடலில் தன் போர்த்தந்திரத் திட்டங்களைத் தீட்டுவதை முடித்திருந்தது, இதற்காக 1981-1985ஆம் ஆண்டுகளுக்கு 30 பில்லியன் டாலர் கள் ஒதுக்கப்பட்டன. இந்துப் பெருங்கடலில்

இராணுவ நடமாட்டத்தைக் குறைப்பது பற்றிய பேச்சுவார்த்தைகள் அவர்களுக்கு இடையூறாக இருந்தன.*

இந்துப் பெருங்கடலில் தன் இராணுவ விஸ்தரிப்பை மூடி மறைத்து, இதிலிருந்து கவனத்தை திசைதிருப்புவதற்காகத்தான் பேச்சுவார்த்தைகள் வாஷிங்டனுக்குத் தேவைப்பட்டன என்பது தெரிந்தது. 80க்களின் துவக்கத்தில், ஐரோப்பாவில் அணு ஆயுதக் குறைப்பைப் பற்றி சோவியத் யூனியனுடன் பேச்சுவார்த்தைகள் நடந்த போதும் அவர்கள் இதே தந்திரத்தைப் பின்பற்றினர். பேச்சுவார்த்தைகள் நடந்தன, உறுதி மொழிகள் தரப்பட்டன. அதே சமயம் பல ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்க ராக்கெட்டுகளை நிறுத்துவதற்கான தயாரிப்பு வேலைகள் முழு வேகத்தில் நடந்தன. இதன் விளைவாய் ஐரோப்பிய மக்களும், ஏன் மற்ற மக்களும் அமெரிக்காவின் அணு ஆயுதப் பணயக் கைதிகளாக்கப்பட்டனர். ஏனெனில், உதாரணமாக, சிசிலியில் வைக்கப்பட்டுள்ள ராக்கெட்டுகள் ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு, தென்மேற்கு மற்றும் தெற்கு ஆசியா ஆகியவற்றின் பரப்பு வரை பாய வல்லவையாகும்.

என்றாலும் ''சோவியத் அபாயம்'' பற்றிய கட்டுக்கதை பழையதாகிப் போனாலும் இது அமெரிக்க ஆக்கிரமிப்புக் கொள்கையைத்

---

* *US News and World Report,* December 29, 1980—January 5, 1981, p. 30.

தீட்டுபவர்களின் பிரச்சார சாதனமாக இருந்து வருகிறது. இந்துப் பெருங்கடலில் தம் இராணுவ நடமாட்டம் அதிகமாகியுள்ளதை நியாயப் படுத்த அவர்கள் ''நிரூபணத்தைக்'' கண்டு பிடித்துள்ளனர் — ஆப்கானிஸ்தானில் மட்டான சோவியத் துருப்புகள் இருப்பதுதான் இதற்குக் காரணமாம். சோவியத் துருப்புகள் ஆப்கானிஸ் தானிற்கு அனுப்பப்படும் முன்னரே இந்துப் பெருங்கடலில் இராணுவ நடமாட்டத்தைக் குறுக்குவது பற்றி சோவியத் யூனியனுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அமெரிக்கா முறித்தது என்பது ஏனோ ''மறக்கப்படு கிறது''. சட்டபூர்வமான ஆப்கான் அரசாங் கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, 1978இல் செய்து கொள்ளப்பட்ட நட்புறவு, நல்லண்டை உறவு மற்றும் ஒத்துழைப்பு பற்றிய ஒப்பந்தத் தின் அடிப்படையில், ஐ. நா. சங்க விதிமுறை களின் 51வது ஷரத்திற்கு முழுவதும் ஏற்பத் தான் சோவியத் யூனியன் இந்நடவடிக்கையை மேற்கொண்டது, இந்த சர்வதேசியவாத உதவி ஆப்கானிஸ்தானின் அரசுரிமையையோ, சுதந் திரமான, கூட்டுச் சேரா நாடு என்ற இதன் நிலையையோ எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்பது அலட்சியப்படுத்தப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் சம்பந்தமான நிகழ்ச்சி களை ''இந்துப் பெருங்கடலை நோக்கிய சோவியத் விஸ்தரிப்பு'', எண்ணெய் வளம் மிக்க பாரசீக வளைகுடாவிற்கான ''அச்சுறுத் தல்'' என்று சித்தரிக்க மேற்கத்திய பிரச்சார கர்த்தாக்கள் பெரும் முயற்சிகளை மேற்

கொண்டனர். சோவியத் யூனியனில் எண் ணெய் மூல ஊற்றுகள் தீர்ந்து விடும் அபா யத்தில் உள்ளதைப் பற்றிய ''இரகசிய'' ஆவ ணங்கள் அச்சமயம் மேற்கே எவ்வளவு பிரசுரிக் கப்பட்டன என்பதை நினைவு கூர்வதே போது மானது. நிபுணர்களோ முதலில் இந்த ஆவ ணங்களைச் சந்தேகப்பட்டனர், பின் முற்றிலு மாக நிராகரித்தனர்.

ஆப்கானிஸ்தானிற்கு எதிராக, பிரகடனப் படுத்தாத யுத்தமாயிருந்தாலும் உண்மையான முழு யுத்தம் நடத்தப்படுவதால்தான் சோவியத் துருப்புகள் அங்குள்ளன. இந்த யுத்தத் திற்கு அமெரிக்காதான் நிதியுதவியளித்து, ஊக்குவித்து, தூண்டி விட்டு, இதை வழிநடத் துகிறது. அமெரிக்கா, மற்ற மேலைய நாடு களின் பணமின்றி, இவர்களின் ஆயுதங்களும் பிரச்சாரம் எனும் விஷமும் இல்லாமல் பாகிஸ்தானியப் பரப்பில் உள்ள எண்ணற்ற முகாம்களில் பதுங்கியிருக்கும் ஆப்கானிய எதிர்ப்புரட்சியாளர்களால் இந்த யுத்தத்தை நடத்த முடியுமா என்ன? பாகிஸ்தானின் இராணுவ ஆட்சிக்கு வாஷிங்டனும் மற்ற மேலைய அரசாங்கங்களும் சகலவிதங்களிலும் பொருளாயத, ஆன்மீக உதவியளிக்காவிடில் இந்த ஆட்சி எதிர்ப்புரட்சியாளர்களுக்கு இவ் வளவு ஆதரவு தர முடியுமா என்ன? ஆப்கான் அரசாங்கத்தின் எண்ணற்ற சமாதான முன் முயற்சிகளுக்கு பாகிஸ்தான் எப்போதாவது செவி மடுக்க முயன்றாலும் இதன் அயல்நாட்டு ஆதர வாளர்கள், செய்யாதே என்று தடுக்கின்றனர்.

ஆப்கானிஸ்தானைச் சுற்றிய பதட்ட நிலை அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குத் தேவை. உதாரணமாக, அவர்களின் கருத்துப்படி, இந்துப் பெருங்கடலில் தம் இராணுவ நடமாட்டத்தை நியாயப்படுத்த இன்னும் ஒரு சாக்காக இது அதற்குத் தேவை. இதன் தொடர்பாக பிரபல இந்திய விமரிசகர் மதன் லால் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''ஆப்கானியப் பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னரும் கூட இந்துப் பெருங் கடலின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் அமெரிக்கத் திட்டம்... தொடர்ந்து நிறை வேற்றப்படுமென அமெரிக்கப் போர்த்தந்திர வாதிகளின் கூற்றுகளிலிருந்து தெள்ளந்தெளி வாகத் தெரிகிறது. எனவே ஆப்கானிய சம்ப வங்கள் இவர்களுடைய இன்றைய போர்த் தந்திரக் கொள்கையின் வளர்ச்சிக்கான ஒரு சாக்கு மட்டுமே.''* இந்துப் பெருங்கடலை இராணுவமயமாக்குவது என்பதுதான் அமெரிக் காவின் இக்கொள்கையாகும். இப்பிரதேச மக்களை எதிர்நோக்கும் உண்மையான அமெ ரிக்க அபாயத்தை மூடி மறைப்பதற்காகத் தான் இந்த மாயையான சோவியத் அபாயம் தேவைப்பட்டது.

சரி, சோவியத் இராணுவ அபாயம் இல்லை யெனில், இந்துப் பெருங்கடலில் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே போட்டி நிலவுகிறதா? சோவியத் அபாயம் பற்றிய கட்டுக்கதையைப் போன்றே இந்துப்

---

* *National Herald,* September 1, 1982.

பெருங்கடலில் வல்லரசுகளின் போட்டியைப் பற்றிய கருத்தும் பொய்யானது, தீங்கிழைக்க வல்லது. இது முதலாவதாக இப்பிரதேசப் பாதுகாப்பின் நலன்களுக்கு, இதைச் சமாதான மண்டலமாக மாற்றும் போராட்டத்தின் வெற்றிக்குத் தீங்கிழைக்கக் கூடியது.

இப்பிரதேசத்தில் காலனியாதிக்கச் சகாப் தத்தில்தான் ''போட்டி'' இருந்தது. அப் போது, பலம் குன்றிய நாடுகளையும் மக்க ளையும் கொள்ளையடித்ததில் அதிகப் பங்கிற் காக, இவர்களின் மீதான ஆட்சிக்காக காலனி யாதிக்க வல்லரசுகள் ஒன்றிற்கொன்று விட்டுக் கொடுக்க விருப்பமின்றி போரிட்டன. இத்த கையப் போட்டியில் சோவியத் யூனியன் எப்போதுமே பங்கேற்றதில்லை, பங்கேற்க வில்லை, இனி பங்கு பெறும் எண்ணமும் இதற்கு இல்லை.

சரி, ஒருவேளை இராணுவப் போட்டி நிலவுகின்றதோ? இல்லை, இப்படிப்பட்ட போட்டி கிடையாது. சோவியத் யூனியனுக்கு இந்துப் பெருங்கடலில் எப்போதுமே இராணு வத் தளங்கள் இருந்ததில்லை, இப்போதும் இல்லை, இவற்றைப் பெறும் எண்ணமும் இதற்குக் கிடையாது. ஆனால் அமெரிக்கா விற்கோ இத்தகைய தளங்கள் இருக்கின்றன. இப்பிரதேசத்தில் சோவியத் இராணுவ நட மாட்டம் எப்போதுமே முற்றிலும் பாது காப்புத் தன்மையை உடையதாக இருந்து வந்துள்ளது, அமெரிக்காவின் இராணுவ-அர சியல் கூட்டு நாடுகளாகிய பிரிட்டன், ஜெர்மன்

வகுப்புகளை நடத்தியதில்லை, எந்த ஒரு கரையோர அரசின் பாதுகாப்பிற்கும் எவ்வித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியதில்லை.

1971இல் வங்காள விரிகுடாவிலிருந்து சோவியத் விமானந்தாங்கிக் கப்பலா இந்தியாவை அச்சுறுத்தியது? இல்லையே. அமெரிக்க ''என்டர்பிரைஸ்'' தான் இவ்வாறு அச்சுறுத்தியது. 1984இல் சோவியத் போர்க் கப்பலா லெபனானின் பாமர மக்கள் மீது குண்டு மழை பொழிந்தது? இல்லை, வியட்நாம் யுத்தக் கறை படிந்த ''நியூ ஜெர்சி'' என்ற அமெரிக்கப் போர்க் கப்பல் அல்லவோ இதைச் செய்தது. அதே ஆண்டு, இரான்-இராக் சச்சரவு உச்சக் கட்டத்தில் இருந்த போது சோவியத் கப்பல்களா பாரசீக வளைகுடாவில் தம் கட்டுப்பாட்டை ஏற்படுத்தின? இல்லை, விமானந்தாங்கிக் கப்பல்கள் உட்பட அமெரிக்க, பிரிட்டிஷ் கப்பல்கள்தான் இதைச் செய்தன.

சோவியத் யூனியன் இந்துப் பெருங்கடல் பகுதி நாடுகளுடன் எவ்வித இராணுவ-அரசியல் கூட்டுகளிலும் எப்போதுமே பங்கேற்றதில்லை, இப்போதும் பங்கேற்கவில்லை. இவற்றில் ஒரு சில நாடுகளுடனான சோவியத் யூனியனின் ஒப்பந்தங்கள் சமாதான, ஒத்துழைப்பு நலன்களை நோக்கமாகக் கொண்டவை, இவை மூன்றாம் நாடுகளுக்கு எதிரானவையல்ல.

இல்லை, இந்துப் பெருங்கடலின் மீது தன் கட்டுப்பாட்டை ஏற்படுத்த சோவியத் யூனியன் எவ்வித முயற்சிகளையும் மேற்

கொள்ளவில்லை. எனவே இப்பிரதேசத்தில் வல்லரசுகளின் போட்டியும் கிடையாது. சோவியத் யூனியனையும் அமெரிக்காவையும் ஒரே தட்டில் நிறுத்தி, சோவியத் நாட்டை இப்பிரதேச வளர்முக நாடுகளுக்கு எதிராக வைப்பதற்காகவும் இப்பகுதியில் தன் இராணுவ-அரசியல் மற்றும் பொருளாதார விஸ்தரிப்பை நியாயப்படுத்தவும் இத்தத்துவம் தேவைப்பட்டது.

ஏகாதிபத்தியம் இப்பிரதேசத்தை ஒருவிதமான நவீன காலனியாதிக்க மண்டலமாகப் பார்க்க விரும்புகிறது. இது, இங்கே தேசிய விடுதலை இயக்க வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த அல்லது இதன் வேகத்தைக் குறைக்கவும் உண்மையான சுதந்திரத்தின் மீதான விடுதலையடைந்த இளம் நாடுகளின் நாட்டத்தை நசுக்கவும் விரும்புகிறது. இந்துப் பெருங்கடலை இராணுவமயமாக்குவது இறுதியாக உலக ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்க பொதுப் போர்த்தந்திரத்தின் ஒரு பகுதியாகியது. இந்துப் பெருங்கடலில் உள்ள அமெரிக்க இராணுவ பலம் முழுவதும் (சொந்தக் கப்பல்கள், இராணுவத் தளங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள், ''துரிதத் தாக்குதல் படைகள்'', இராணுவ ஒத்திகைகள் ஆகியன அனைத்தும், அதாவது நிர்ப்பந்தம் மற்றும் பலாத்காரக் கருவிகள் முழுவதும் இதில் அடங்கும்) இந்த லட்சியத்திற்கு உட்பட்டதாகும்.

அத்தியாயம் மூன்று

# அமெரிக்க ஐக்கிய நாடு: குறிக்கோள்கள், கொள்கைகள், நடவடிக்கைகள்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் விஸ்தரிப்புக் கொள்கையின் ஆதரவாளரும் தத்துவகர்த்தாவுமான அட்மிரல் மேஹேன் சென்ற நூற்றாண்டின் கடைசியிலேயே ''கடல் பரப்பின் மீதான கட்டுப்பாடு'' என்ற கருத்தமைப்பை முன்மொழிந்தார். இத்தகைய கட்டுப்பாடு வெளிநாட்டுக் கொள்கையை வலுப்படுத்த முக்கியமானது என்றும் இது உலகில் மேலோங்கி நிற்கும் செல்வாக்கைக் குறிக்கிறது என்றும் இவர் கூறினார். இவருடைய வார்த்தைகளின்படி, சமுத்திரங்களையும் கடல்களையும் சுதந்திரமாகப் பயன்படுத்தும் வாய்ப்புகளை மற்ற நாடுகளுக்கு மறுக்கக் கூடிய அமெரிக்க கடற்படை மேம்பாட்டால்தான் அமெரிக்க கண்டத்திற்கு வெளியே இதன் நலன்களுக்கு வகை செய்ய முடியும். கடலில் நிலவும் ஆதிக்கம் சந்தேகத்திற்கிடமின்றி உலக ஆதிக்கத்தைக் குறிக்கிறது என்று மேஹேன் கூறினார்.

''கடல் ஆதிக்கம் என்பது நமக்கு அவசியமானது. எல்லா சமுத்திரங்களையும் கடல்களையும் அடைய வகை செய்யுமாறு வான், கடல்

மற்றும் நீர்மூழ்கி மண்டலங்களைக் கண்கா ணித்து, ஆபத்திற்குத் தயாராக நாம் இருக்க வேண்டும்...''* இவ்வாறு அமெரிக்க ஜனா திபதி ரொனால்டு ரீகன் கூறினார். மேற் கூறிய இரு கூற்றுகளுக்குமிடையே கிட்டத் தட்ட நூற்றாண்டு கடந்து விட்டது. இக்கால கட்டத்தில் எண்ணற்ற நிகழ்ச்சிகள் நடந்து விட்டன. உலக நிலவரம் மாறியுள்ளது. ஏகா திபத்திய சுரண்டலை மறுத்து பல சுதந்திர மான அரசுகள் தோன்றியுள்ளன. ஆனால் ஏகாதிபத்தியவாதிகளின் மேலாதிக்கப் பேரா சைகள் சாராம்சத்தில் மாறவில்லை. ஆனால் இவற்றை நிறைவேற்றும் வடிவங்கள் மாறி யுள்ளன: ''துப்பாக்கிப் படகு ராஜதந்திரம்'' ''விமானந்தாங்கிக் கப்பல் ராஜதந்திரமாக'' மாறியுள்ளது.

இது இந்துப் பெருங்கடலுக்கு நேரடியாகப் பொருந்தி வரும். அமெரிக்கப் போர்த்தந்திர வாதிகளின் கருத்துப்படி, யார் இந்துப் பெருங் கடல் பிரதேசத்தில் ஆதிக்கத்தை நிலைநாட்டு கிறாரோ அவர்கள்தான் ''புதிய உலகளாவிய சக்தி மையத்தை'' தம் கரங்களில் வைத்திருப் பார்கள், உலக அரசியல் உருவாவதில் முக் கியப் பங்காற்றுவார்கள்.

சமீப ஆண்டுகளாக இந்துப் பெருங்கடலில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொள்கை இதைத் தோற்றுவிப்பதைத்தான் நோக்கமாகக் கொண்டது. வரலாற்று ரீதியாகத் தவிர்க்க

---

* *International Herald Tribune,* April 30, 1984, p. 3.



5-898

இயலாத முற்போக்கு மாற்றங்களின் முன் உள்ள அச்சம்தான் இவர்களை இயக்குவிக்கிறது. இந்த மாற்றங்கள் 50 – 60ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிப் போக்குகளின் வளர்ச்சியாகும். இப்போக்குகள் இந்துப் பெருங்கடல் பிரதேசத்தில் ஏகாதிபத்தியத்தால் தோற்றுவிக்கப்பட்ட உறவு முறை முழுவதையும் ஆட்டிப் படைத்தன, ஏகாதிபத்தியத்தின் வாய்ப்புகளைக் கணிசமாகக் குறைத்தன. இந்த அச்சம்தான் ''ஸ்திரமின்மையின் அரைவட்டம்'' என்ற அபகீர்த்தி படைத்த தத்துவத்தை உருவாக்கத் தூண்டியது, இப் பிரதேசத்தில் அமெரிக்காவிற்கு ஒத்துவராத நிகழ்ச்சிப் போக்குகளை ஒடுக்குவதற்காக ''துரிதத் தாக்குதல் படைகள்'' என்ற இரும்புக் கரத்தைத் தோற்றுவிக்க இட்டுச் சென்றது.

ஆயுதந்தாங்கி சோவியத் யூனியனுக்கு எதிராக நிற்கும் நாட்டமும் சோவியத் யூனியனை விட உலகளாவிய போர்த்தந்திர மேன்மையை, முதலாவதாக ராக்கெட் அணு ஆயுதங்களில் இத்தகைய மேன்மையை அடையும் முயற்சியும் அமெரிக்கப் போர்த்தந்திரத்தில் பெரும் இடம் வகிக்கின்றன. இந்துப் பெருங்கடலை இராணுவமயமாக்கும் திட்டங்களை அமெரிக்காவில் தம் அணு ஆயுதப் போர்த்தந்திரத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கின்றனர்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் கார்ட்டர் நிர்வாகத்தின் கீழ் இந்துப் பெருங்கடல், குறிப்பாக பாரசீக வளைகுடா அமெரிக்காவின் ''ஜீவாதார நலன்களின் மண்டலமாக'' அறி

விக்கப்பட்டது என்றால், ரீகன் நிர்வாகத்தின் கீழ் இதே பாரசீக வளைகுடா, தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசியா, மத்திய கிழக்கு உள்ளிட்ட இப்பிரதேசம் ''மூன்றாவது போர்த் தந்திர மண்டலமாக'' (மேற்கு ஐரோப்பா, தொலை கிழக்கோடு சேர்த்து) அறிவிக் கப்பட்டது. ஏகாதிபத்தியத்திற்கும் சோஷலிசம் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான நேரடியான இராணுவ சச்சரவுக் களமாக இந்துப் பெருங்கடலை மாற்ற முயற்சி கள் மேற்கொள்ளப்படுகின்றன. இராணுவ நிர்ப்பந்த முறைகள், இங்கே அமெரிக்கத் துருப்புகளின் நிரந்தர இராணுவ நடமாட் டம், இராணுவத் தளங்கள் மற்றும் ஆதார மையங்களை விரிவுபடுத்துதல் ஆகியவை முக்கி யமானவையாகக் கருதப்படுகின்றன. சாராம் சத்தில் பார்த்தால் இந்துப் பெருங்கடலில் அமெரிக்க முன்னணிச் சக்திகளின் தாக்கு முனை வெகு வேகமாகத் தோற்றுவிக்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படை (சுமாராக 30 அமெரிக்கத் தளங்களும் ஆதார மையங்களும்) ஆப்பிரிக்காவின் கிழக்கு கரை முதல் ஆஸ்தி ரேலியா வரை ஏற்கெனவே உருவாக்கப்பட்டு விட்டது. இவற்றில் 1,40,000 அமெரிக்கப் போர்வீரர்கள் உள்ளனர். 60 கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் அடங்கிய கப்பற் படை இங்குள்ளது, 2 விமானந்தாங்கிக் கப்பல்கள் கிட்டத்தட்ட நிரந்தரமாக நடமாடு கின்றன – இவற்றில் 200 விமானங்கள் உள்ளன, இந்த 200 விமானங்களில் 80 விமானங்கள்

அணு ஆயுதத்தை ஏந்திச் செல்ல வல்லவை.*

70ஆம் ஆண்டுகளின் நடுவிலேயே இந்துப் பெருங்கடலில் தீவிர இராணுவ நடவடிக் கையின் அறிகுறிகள் தெள்ளந்தெளிவாகத் தென்பட்டன. வாஷிங்டனின் போர்த்தந்திர நோக்கங்களுக்காக இராணுவத் தளக் கட்ட மைப்பை உருவாக்குவது, விமானந்தாங்கிக் கப்பல்கள் உட்பட அமெரிக்க போர்க் கப்பல் கள் முறையாக ஸ்தல துறைமுகங்களுக்கு வருவது, இராணுவ ஒத்திகைகளை நடத்துவது ஆகியவை இந்நடவடிக்கைகளாகும். இராணுவ நடவடிக்கையைக் குறைப்பது சம்பந்தமாக சோவியத் யூனியனுடன் நடந்த பேச்சுவார்த் தைகளை அமெரிக்க ஐக்கிய நாடு ஒருதலைப் பட்சமாகக் குலைத்த பின் அமெரிக்கா மற்றும் இதன் கூட்டாளிகளின் இராணுவத் தளக் கட்டமைப்பு வெகு வேகமாக வளரத் துவங் கியது. இப்பிரதேசத்தில் பெண்டகனின் இரா ணுவப் பலத்திற்குப் போர்த்தந்திர உட்கருவாக விளங்கிய அமெரிக்க விமானந்தாங்கிக் கடற் படை யூனிட்டுகள் நீண்ட காலக்கெடுவிற்கு இங்கு கொண்டு வரப்படலாயின, 80ஆம் ஆண்டுகளின் துவக்கத்திலிருந்தோ இவை இங்கு நிரந்தரமாக நிறுத்தப்பட்டன.

1981 – 1982ஆம் ஆண்டுகளில் இந்துப் பெருங்கடல் பகுதியில் ரீகன் நிர்வாகத்தின் கொள்கை பெரும்பாலும், 1980இல் பிரகடனப் படுத்தப்பட்ட ''கார்ட்டர் சித்தாந்தத்தின்''

---

* பிராவ்தா, 27.07.83., 2.02.83. (ருஷ்ய மொழியில்.)

அடிப்படையில் அமைந்திருந்தது. அப்போது, அமெரிக்க-இரானிய உறவுகளில் தோன்றிய கடும் நெருக்கடிதான் ''அமெரிக்காவின் ஜீவாதார நலன்களின் மண்டலமாக'' அறிவிக்கப் பட்ட இப்பிரதேசத்தில் அமெரிக்க இராணுவ நடமாட்டத்தைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்ட கொள்கையின் முக்கிய காரணமாக விளங்கியது. மேற்கூறிய நெருக்கடி இரானில் புரட்சி வெற்றிபெற்றதாலும் 1979 நவம்பரில் டெஹ்ரானில் அமெரிக்க ராஜதந்திரிகள் கைப் பற்றப்பட்டதாலும் தோன்றியது.

ஆக்கிரமிப்புத் தன்மையுடைய ''துரிதத் தாக்குதல் படைகளுக்காக'' கட்டமைப்பு அவசர அவசரமாகத் தோற்றுவிக்கப்பட்டது. ஒரு சில கரையோர நாடுகளின் (சோமாலி, கென்யா, ஓமான்) இராணுவத் தளங்களைப் பயன்படுத்த அந்நாடுகளின் ஒப்புதலைப் பெறுவதில் அமெரிக்கா வெற்றி பெற்றது, பாகிஸ்தானுடன் உள்ள இராணுவ-அரசியல் தொடர்புகளை வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆப்கானிய ஜனநாயக குடியரசிற்கு எதிரான பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தை நடத்துவதற்காக பாகிஸ்தானின் பரப்பு தீவிரமாகப் பயன்படுத்தப்படலாயிற்று.

இந்துப் பெருங்கடல் சம்பந்தமான கார்ட்டர் கொள்கையின் இந்த அம்சங்களை ரீகன் நிர்வாகமும் எடுத்துக் கொண்டது. ஆனால் ரீகன் நிர்வாகம் இவற்றுடன் கணிசமான சில பிற் சேர்க்கைகளையும் சேர்த்தது. பாரசீக வளைகுடா அமெரிக்காவிற்கும் இதன் கூட்டாளி

களுக்கும் ‘‘ஜீவாதார முக்கியத்துவம்’’ உடையது என்ற நிலையிலிருந்து கார்ட்டர் நிர்வாகம் செயல்பட்டது என்றால், இந்துப் பெருங்கடலில் இராணுவப் பலத்தைத் தொடர்ந்து பெருக்கி வரும் ரீகன் நிர்வாகமோ உலகந் தழுவிய அளவில் சோவியத் யூனியனை விட இராணுவ மேன்மையை அடைவது என்ற தன் முக்கிய வெளிநாட்டுக் கொள்கை லட்சியத்தின் அடிப்படையில் இன்னமும் பரவலான கடமைகளை முன்வைக்கிறது.

எனவே இதைப் பொறுத்தமட்டில் இந்துப் பெருங்கடல், எங்கெல்லாம் அமெரிக்கா சோவியத் யூனியனை விட பலத்தில் விஞ்சி நிற்க விழைகின்றதோ அந்த இடங்களின் சங்கிலித் தொடரில் உள்ள இன்னுமொரு ‘‘போர்த்தந்திர மண்டலமாகும்’’.

கார்ட்டர் நிர்வாகம் ‘‘துரிதத் தாக்குதல் படைகளை’’ இப்பிரதேசத்தில் பயன்படுத்துவதைப் பற்றி அறிவித்தது என்றால் (இதன்படி இங்கே அமெரிக்க இராணுவத்தை நிரந்தரமாக நிறுத்தத் திட்டமிடப்படவில்லை), ரீகன் நிர்வாகமோ ஆட்சிக்கு வந்ததுமே இந்துப் பெருங்கடலில் அமெரிக்காவின் முப்படைச் சக்திகளையும் நிரந்தரமாக நிறுத்தும் செயல்திட்டத்தைத் தீட்ட ஆரம்பித்தது.

இந்துப் பெருங்கடலை சோவியத் யூனியனுக்கு எதிரான போர்த்தந்திர மண்டலமாக மாற்ற முயலும் முகமாக ரீகன் நிர்வாகம் இங்கே ‘‘டிரைடென்ட்’’ வகையைச் சேர்ந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் “B-52” குண்டு

வீச்சு விமானங்கள் உட்பட போர்த்தந்திரச் சாதனங்களை நிரந்தரமாக நிறுத்துகிறது, ஏராளமான சாதாரணத் துருப்புகளைக் கொண்டு வந்து குவிக்கிறது, இஸ்ரேல், சவுதி அரேபியா, பாகிஸ்தான் போன்ற தன் போர்த் தந்திரக் கூட்டு நாடுகளின் இராணுவப் பலத்தைக் கணிசமாகப் பெருக்குகிறது.

இதோடு கூட தன் பேரரசு வெளிநாட்டுக் கொள்கையை நிறைவேற்றும் ஏகாதிபத்தியம் வளர்முக நாடுகளை ஆக்கிரமிப்பு இராணுவ வெறி கொள்கையினுள் இழுக்கிறது; இவற்றின் மீது கட்டுப்பாடற்ற ஆயுதப் போட்டியைத் திணிக்கிறது, நடைமுறையில் அணு ஆயுதத்தைப் பரப்புவதற்கு ஊக்கமளிக்கிறது; மத, தேசிய இன, எல்லை, மற்ற முரண்பாடுகளையும் ஸ்தல சச்சரவுகளையும் (இரான்-இராக் சச்சரவு, சோமாலி-எத்தியோப்பிய சச்சரவு) ஆழப்படுத்தி விரிவாக்குகிறது; வளர்முக நாடுகளின் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைப் பலவீனப்படுத்தும் நோக்கத்தோடு பிரிவினைவாதத்தைத் தூண்டிவிடுகிறது (இந்தியாவில் பஞ்சாப் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளிக்கிறது)* ; இறுதியாக, கூட்டுச் சேரா

---

* பஞ்சாப் தீவிரவாதிகள் 1984 அக்டோபர் 31இல் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைக் கொன்றது தெரிந்ததே. இந்தக் கொடும் பாதகச் செயல் உலகம் முழுவதையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. வெளிச் சக்திகளின் பங்கேற்போடு தீட்டப்பட்ட ஒரு பெரும் சதியின் விளைவுதான் இக்கொலையாகும் என்று இந்தியாவின் பல்வேறு வட்டங்களில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இயக்கத்தின் முக்கியப் போக்காகிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதையிலிருந்து இந்த இயக்கத்தைத் திருப்ப சகலவித நிர்ப்பந்தங்களையும் மேற்கொள்கிறது. கூட்டுச் சேரா நாடுகளுடைய அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் 7வது மகாநாட்டிற்குப் பின் இந்தியாவின் மீது ஏகாதிபத்தியம் நிர்ப்பந்தம் செலுத்தியதைப் போல் எப்போதுமே நிர்ப்பந்தம் செலுத்தியதில்லை என்று இந்திரா காந்தியே கோடிட்டுக் காட்டினார். இந்த மகாநாட்டில் இந்தியா கூட்டுச் சேரா இயக்கத்தின் தலைவனாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் மீதான நிர்ப்பந்தம் கூட்டுச் சேரா இயக்கம் முழுவதன் மீதான நிர்ப்பந்தமாகும். இந்தியாவின் அரசியல், இதன் கூட்டுச் சேரா கொள்கை, சமாதான லட்சியம் முதலியன ஆசியாவில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆக்கிரமிப்புப் போக்குகளுக்கு அடிப்படை ரீதியாக எதிரானவை; அமெரிக்கா இந்துப் பெருங்கடலைப் போர்த்தந்திர ரீதியாக ஆக்கிரமிப்பதற்கு இவை கணிசமான அளவு தடையாக இருக்கின்றன.*

இப்பிரதேசத்தில் அமெரிக்கக் கொள்கையின் முக்கிய அம்சங்களில் ஒன்று புதிய இராணுவத் தளங்களைப் பெறுவதும் ஏற்கெனவே இருக்கும் தளங்களை விரிவுபடுத்துவதுமாகும். தற்போது இந்துப் பெருங்கடல் பகுதியில் புதிய கடற்படை மற்றும் விமானப்

---

* பிராவ்தா, *30.04.83.* (ருஷ்ய மொழியில்.)

படைத் தளங்களும் ஆதார மையங்களும் அடங்கிய சில போர்த்தந்திர அச்சுகள் உரு வாக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் ஒன்று ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையோரமாக, கென்யா, சோமாலி, சூடான் மற்றும் கடலோர துறைமுகமாகிய ஜிபூட்டி (இதை அமெரிக்கா தன் கப்பல்களுக்காகப் பயன்படுத்துகிறது) ஆகிய இடங்களிலுள்ள ஆதார மையங்களின் ஊடாகச் செல் கிறது.

1980 ஜூனில் அமெரிக்காவும் கென்யாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அமெரிக்க இராணுவம் கென்யா நாட்டு இராணுவ அமைப்புகளைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்றது. மொம்பாஸாவில் உள்ள விமானத் தளத்தையும் கடற்படைத் தளத்தையும் புனரமைக்க நிதிகள் ஒதுக்கப்பட்டன. மொம் பாஸாவில் துறைமுகம் ஆழப்படுத்தப்பட்டது, இதனுள் கப்பல்கள் வரும் வழி விரிவுபடுத் தப்பட்டது. இது அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்கள் வரும் வாய்ப்பை உண்டாக்கியது.*

1980 ஆகஸ்டில் அமெரிக்காவும் சோமா லியும் ஒரு உடன்படிக்கையில் கையொப் பமிட்டன. இதன்படி பேர்பேரா துறைமுகத் தையும் இன்னும் சில அமைப்புகளையும் கடற் படை வேவுபார்த்தலுக்காகப் பயன்படுத்தும் உரிமையை அமெரிக்க இராணுவம் பெற்றது, இந்த உடன்படிக்கையின்படி இங்கே போர்த்

---

* இஸ்வேஸ்தியா, 4.08.82, 9.12.83. (ருஷ்ய மொழியில்.)

தளவாடங்களும் மற்ற பொருட்களும் வைக்கப் பட்டன, அமெரிக்க விமானப்படை, கடற் படைக்கான சர்வீஸ் வசதிகளை இவை அளித் தன. 1982ஆம் ஆண்டே பேர்பேரா விமானப் படைத் தளத்தை மேம்படுத்த வாஷிங்டன் 4,00,000 டாலர்களை ஒதுக்கியது. உதாரண மாக, 25,000 பாரெல்கள் எரிபொருளை சேமிக்க வல்ல கிடங்கு ஒன்று கட்டப்பட்டது. சோமாலிக்கும் எத்தியோப்பியாவிற்கும் இடை யில் உறவுகள் சீர்கேடடைந்ததை அடுத்து 1982இல் பேர்பேராவிற்கு அவசர அமெரிக்க உதவி அனுப்பப்பட்டது. 5.5 மில்லியன் டாலர் கள் மதிப்புள்ள ராடார் சாதனங்களும் வான் எதிர்ப்பு தற்காப்பு அமைப்புகளும் இதில் அடங்கும். 1982 நிதியாண்டில் அமெரிக்கா 80 மில்லியன் டாலர்களையும் அதற்கடுத்த ஆண்டில் 90 மில்லியன் டாலர்களையும் இராணுவ உதவியாக சோமாலிக்கு வழங் கியது.

சூடான் நாட்டின் பரப்பில் உள்ள இரா ணுவத் தளங்களை அமெரிக்க இராணுவம் பயன்படுத்துவதைப் பற்றிய ஒப்பந்தம் 1981 ஜூனில் செய்து கொள்ளப்பட்டது. எட்ட மஸின் என்ற சூடான் விமான நிலையத் தைச் சீரமைக்கும் பணி விரைவிலேயே துவங் கியது. போர்ட் சூடான் என்ற நகரத்திற்கு வடக்கே கடற்படைத் தளமும் நாட்டின் தென்மேற்கிலும் தெற்கேயும் இரண்டு விமானப் படைத் தளங்களும் கட்டப்படும். மொத் தமாக சூடானில் இராணுவ அமைப்புகளின்

கட்டுமானத்திற்கு 4 பில்லியன் டாலர் களைச் செலவிட வாஷிங்டன் திட்டமிட்டு வருகிறது.

அதே ஆண்டு அமெரிக்கா தன் போர்த்தந் திர நோக்கங்களுக்காக கமோர் தீவுகளைப் பயன்படுத்தத் திட்டமிட்டது. இங்குள்ள துறை முகமாகிய மரொனியை நவீனப்படுத்தி இதை தன் போர்க் கப்பல்களைப் பராமரிக்கும் கடற்படைத் தளமாக மாற்றவும் இங்கே அணு ஆயுதம் உட்பட போர்த் தளவாடங்களையும் ஆயுதங்களையும் சேமித்து வைக்கவும் பெண் டகன் விரும்புகிறது.

அமெரிக்க இராணுவத் தளங்கள், ஆதார மையங்களின் இன்னொரு சங்கிலித் தொடர் எகிப்து, துருக்கி, சவுதி அரேபியா, ஓமான் ஆகிய மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளது.

எகிப்தில் தலைநகரின் சுற்றுவட்டத்தில் உள்ள கெய்ரோ வெஸ்ட் விமானப்படைத் தளத்தையும் நைல் ஆற்றோரமாயுள்ள கேனா தளத்தையும் (இரானில் இருந்த "பணயக் கைதிகளை" விடுவிக்க இரானுக்கு எதிராக அமெரிக்கா ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற் கொண்ட போது "C-130" அமெரிக்க விமானங்கள் இத்தளத்தைப் பயன்படுத்தின, ஆனால் இது வெற்றி பெறவில்லை; தற்போது இத்தளம் AWACS சாதனங்களை உள்ளடக்கிய விமானங்களைப் பராமரிக்கும்படி மாற்றிய மைக்கப்பட்டுள்ளது) பயன்படுத்தும் உரிமையை அமெரிக்க இராணுவம் பெற்றுள்ளது. செங்

கடலின் கரையில் உள்ள எகிப்திய தளமாகிய ரஸ் பனசை நவீனமயமாக்கும் பணிகள் தொடருகின்றன. இப்பணிகள் முடிந்த பின் இங்கே "B-52" ரக போர்த்தந்திர குண்டு வீச்சு விமானங்களும் "KC-135" ரக பெட்ரோல் நிரப்பும் விமானங்களும் இறங்கலாம், 18,000 அமெரிக்கப் போர்வீரர்கள் இங்கிருக்க முடியும்.

1980 மார்ச்சில் அமெரிக்காவும் துருக்கியும் கூட்டு தற்காப்புத் துறையில் ஒத்துழைப்பது சம்பந்தமாக உடன்படிக்கை செய்து கொண்டன. இதன்படி துருக்கியில் உள்ள 12 இராணுவத் தளங்களைப் பயன்படுத்தும் தன் உரிமையை பெண்டகன் புதுப்பித்துக் கொண்டது, நாட்டின் கிழக்கே இன்னமும் மூன்று இராணுவத் தளங்களைக் கட்டத் திட்டமிடுகிறது. துருக்கியில் 7,000 அமெரிக்க இராணுவத்தினர் உள்ளனர்.

சவுதி அரேபியாவில் யான்போ, ஜூபாயில், டஹ்ரான் தளங்களில் தன் விமானங்களை இறக்க அமெரிக்கா உரிமையைப் பெற்றுள்ளது. AWACS சாதனங்களைக் கொண்ட 5 விமானங்களை சவுதி அரேபியாவிற்கு விற்றதும் இந்நாட்டில் தன் இராணுவ நடமாட்டத்தை அதிகரிக்க முடியுமென அமெரிக்கா கருதுகிறது. தற்போது அமெரிக்காவிற்குச் சொந்தமான 4 AWACS விமானங்கள் சவுதி அரேபியாவில் உள்ளன. இவை இரானிற்கும் இராக்கிற்கும் இடையிலான இராணுவ நடவடிக்கையைக் கண்காணித்து வருகின்றன. முதல் AWACS விமானம் சவுதி அரேபியா

விற்கு விற்கப்பட்டு இங்கே வரும் வரை இந்த அமெரிக்க விமானங்கள் இங்கிருக்கும்.

சவுதி அரேபியாவின் AWACS விமானங்கள் பாரசீக வளைகுடாவின் ஓரமாக கரையிலிருந்து 73 கி.மீ. தூரம் தள்ளி 9—10 கி.மீ. உயரத்தில் பறந்து வான் நிலவரத்தைக் கண்காணிக்குமென நம்பப்படுகிறது. அடையாளம் தெரியா விமானங்கள் எண்ணெய் பிரதேசங்களை நோக்கி வருவது கண்டு பிடிக்கப்பட்டால் "F-15" ரக சண்டை விமானங்கள் வானில் எழ இவை உரிய நேரத்தில் கட்டளையிடும்.

நாட்டில் அமெரிக்க நடமாட்டம் விரிவடைவதை சவுதி அரேபியா மொத்தத்தில் ஓரளவு கட்டுப்படுத்த விரும்பினாலும் இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவத் தொடர்புகள் வலுவடைந்து வருகின்றன. இன்று சவுதி அரேபியாவில் 45,000 அமெரிக்க நிபுணர்கள் உள்ளனர், இவர்களில் நான்கில் ஒரு பங்கினர் இராணுவ நிபுணர்களாவர்.

1980 ஜூனில் அமெரிக்கா ஓமானுடன் உடன்படிக்கை செய்து கொண்டது. இதன் படி அமெரிக்க இராணுவம் இந்நாட்டிலுள்ள தளங்களைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்றது. அடுத்த ஆண்டே மசீரா, ஹசாப் இராணுவத் தளங்களை விரிவுபடுத்தி, நவீனமயமாக்குவதற்காக அமெரிக்கா இந்நாட்டிற்குத் தன் இராணுவத்தினரை அனுப்பியது. மசீராவில் அமெரிக்கா விமானத் தளத்தை நவீனமயமாக்கியதோடு கூட எல்லா பருவநிலைகளிலும்

செயல்பட வல்ல இரண்டாவது விமான ஓடு பாதையைக் கட்டத் துவங்கியது. ஹோர்மூஸ் ஜலசந்தியில் உள்ள ஹசாப் தளம் சிறு விமானங்களுக்கானது. ''துரிதத் தாக்குதல் படைகளின்'' 50,000 இராணுவத்தினருக்காக தோஃபார் மாகாணத்தில் அமெரிக்கா ஒரு இராணுவத் தளத்தைக் கட்டி வருகிறது.

இப்பிரதேசத்தில் அமெரிக்கப் போர்த்தந் திரத்தில் பாகிஸ்தானுக்கு ஒரு விசேஷ பங்கு அளிக்கப்பட்டுள்ளது. ஜெனரல் ஜியா ஹூல் ஹக்கின் இராணுவ ஆட்சியுடன் 3.2 பில்லி யன் டாலர் மதிப்புள்ள இராணுவ-அரசியல் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. இதன்படி அணு ஆயுதத்தை ஏந்திச் செல்ல வல்ல "F-16" ரக விமானங்கள் உட்பட நவீன ஆயுதங்கள் பாகிஸ்தானுக்கு வழங்கப்படுகின்றன. இந்தியப் பத்திரிகைகள் தெரிவிக்கும் செய்தியின்படி பாகிஸ்தான் 100 இத்தகைய விமானங்களை அமெரிக்காவிடம் கோரியுள்ளது.

ஜெனரல் ஜியா ஹூல் ஹக் வாஷிங்டனுக்கு சென்றிருந்த போது பாகிஸ்தானின் பரப்பை அமெரிக்க இராணுவத் தளங்களுக்கு அளிப்பது சம்பந்தமான இரகசிய உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதாக 1982ஆம் ஆண்டிலேயே இந்தியப் பத்திரிகைகள் எழுதின. இது வாஷிங்ட னாலும் இஸ்லாமாபாதாலும் பன்முறை மறுக் கப்பட்டது. ஆனால் சர்கோத்ஹ், குவாதார், பெஷாவர், கராச்சி ஆகிய இடங்களில் எலெக்ட் ரானிக் கண்காணிப்பு நிலையங்கள் தோற்று விக்கப்படுவதாக அயல்நாட்டுப் பத்திரிகைகள்

எழுதுகின்றன. இவை இந்தியா, ஆப்கானிஸ் தான் பரப்புகளில் வேவுபார்க்கவும் இந்துப் பெருங்கடலின் கணிசமான பகுதியைக் கண் காணிக்கவும் உதவும். ப லூச்சிஸ்தானத்தில் மக்ரான் கரையோரத்தில் ஓர்மாரா, கிவினி என்ற இரண்டு அமெரிக்க இராணுவத் தளங் கள் கட்டப்படுகின்றன. குவாதார் துறைமுகத் தின் அருகேயுள்ள மெஹ்டி ஏ கோஹ் தீவில் நவீன வானொலி உபகரணங்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ளன, வானொலிச் சாதனங்களைப் பயன்படுத்தி வேவுபார்க்கும் மையமாக பெண்டகன் இதை மாற்றியுள்ளது. குவாதார், பெஷாவர், கராச்சி ஆகிய இடங் களில் கடற்படை, விமானப்படைத் தளங் களைப் பெற வாஷிங்டன் முயலுகிறது. சென்ட்கோம் பிரதேச தலைமையகத்தை பாகிஸ்தானில் வைப்பது சம்பந்தமான உடன் படிக்கை அடையப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுத சப்ளை கூடியுள்ளது. UNI என்ற இந்திய செய்தி நிறுவனத்தின் தகவலின்படி முன்கூட்டியே எச்சரிக்கும் நவீன வான் பாதுகாப்பு மற்றும் எலெக்ட்ரானிக் வேவுபார்க்கும் ‘‘குருமன் OV-1 மொஹூக்’’ அமைப்பு, கப்பலி லிருந்து கப்பலை நோக்கிப் பாயும் ‘‘கர்பூன்’’ ரக ராக்கெட்டுகள், ‘‘வல்கன்-ஃபலான்கஸ்’’ விமான எதிர்ப்புப் பீரங்கிகள் ஆகியவற்றை இஸ்லாமாபாத் ஆட்சிக்கு அமெரிக்கா சப்ளை செய்யும்.

பாகிஸ்தானின் பரப்பிலிருந்து ஜனநாயக

ஆப்கானிஸ்தானிற்கு எதிராக பிரகடனப்படுத் தாத யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ள வாஷிங்டன் பாகிஸ்தானை ''போர்முனை யோர அரசாக'' அறிவித்து, பாகிஸ்தானின் ''தற்காப்பைப்'' பற்றிப் பேசி இதை மும்மூர மாக ஆயுதந்தரிக்கிறது. இந்தியாவுடனான எல்லைப் பகுதியில் பெரும் இராணுவத் தயாரிப்புகள் நடத்தப்படுகின்றன. இவையனைத் தும் டெல்லியில் கவலையை ஏற்படுத்தாது இருக்க முடியாது. பாகிஸ்தானின் ''தற்காப் பானது'', அட்லாண்டிக்கிலிருந்து பசிபிக் சமுத் திரம் வரை செல்லும் (இந்துப் பெருங்கடல் ஒரு புறமிருக்க) அமெரிக்க ஏகாதிபத்தியத் தின் பெரும் போர்த்தந்திர அச்சின் அங்க மாக மீண்டுமொரு முறை ஆகியுள்ளது என்று இந்திரா காந்தி குறிப்பிட்டார். இந்த அச்சு தான் பல்வேறு பிரதேசங்களில் சமாதானத் திற்கும் பாதுகாப்பிற்கும் உண்மையான அச் சுறுத்தலாக உள்ளது, மொத்தத்தில் உலகத் திற்குப் புதிய அபாயத்தை ஏற்படுத்துகிறது.

தளங்களின் மூன்றாவது வரிசை, இந்துப் பெருங்கடலின் கிழக்குப் பகுதியில் அமெரிக்க இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு வகை செய்கிறது. தாய்லாந்து (சத்தாஹிப், உத்தப் பாவோ), பிலிப்பைன்ஸ் (சுபிக் பேய், கிளார்க் ஃபீல்ட்) மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள தளங்கள் இவற்றில் அடங்கும். ரீகன் வெள்ளை மாளிகைக்கு வந்த பின் ஆஸ்திரேலியாவுட னான அமெரிக்காவின் இராணுவத் தொடர்புகள் கணிசமாகத் தீவிரமடைந்துள்ளன. டார்வின்,

லிர்மோன்த் (இவையிரண்டிலும் "B-52" ரக குண்டுவீச்சு விமானங்கள் இறங்கலாம்), நார்த்வெஸ்ட் கேய்ப், கோக்பெர்ன் சவுன்ட் போன்ற ஆஸ்திரேலியக் கரையோர இராணு வத் தளங்களை வாஷிங்டன் பயன்படுத்து வதோடு கூட மேற்குக் கரையில் போர்ட் ஹேட்லென்ட் நகரின் அருகே அமெரிக்க கடற்படைக்கான புதிய இராணுவத் தளத் தைக் கட்டவும் ''ஸ்டெர்லிங்'' (கோக்பெர்ன் சவுன்ட்) கடற்படைத் தளத்தை நவீனப்படுத் தவும் திட்டமிடுகிறது. அணு என்ஜின்களையு டைய அமெரிக்க போர்க் கப்பல்கள் ஆஸ் திரேலியாவிற்கு முறையாக வருகின்றன.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி டியகோ கார் சியா தீவு இந்துப் பெருங்கடலில் வாஷிங் டனின் போர்த்தந்திரத்திற்குக் குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தது. சமீப காலத்தில் பெண்டகன் இதைப் பல நோக்கங்களை யுடைய, மிகப் பெரும் அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்கள் மற்றும் "B-52" ரக குண்டு வீச்சு விமானங்கள் இறங்க வல்ல ஒரு ஆதார இராணுவத் தளமாக மாற்றியுள்ளது. இத் தளம் தொடர்ந்து விரிவாக்கப்பட்டு வரு கிறது. விமானங்கள் ஏறி இறங்குவதற்கான ஓடுபாதைகள், விமான கோட்டங்கள், விமா னம் நிற்குமிடங்கள், கிடங்குகள், சாலைகள், கப்பல் துறைகள், சாதாரண போர்வீரர் களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமான வீடுகள், மற்ற வகையான அமைப்புகள் ஆகிய வற்றைக் கட்டுவது சம்பந்தமாக அமெரிக்க

கடற்படை 1981இல் ''ரேய்மன்ட்'', ''பிராவுன் அன்ட் ரூத்'', ''மோவுலெம்'' ஆகிய கம்பெனி களுக்கு கான்ட்ராக்ட் அளித்தது. கட்டு மானம் முழு வேகத்தில் நடந்து வருகிறது.

இந்துப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்கா தன் இராணுவப் பலத்தைப் பெருக்கி வரும் அதே சமயத்தில் கூட்டுகளையும் ஐக்கியங் களையும் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தன் இராஜதந்திரத்தையும் இப்பிர தேசத்தில் தீவிரப்படுத்தியுள்ளது. அமெரிக்க உதவி ஜனாதிபதி, அரசுத் துறை செயலர், பாதுகாப்பு அமைச்சர், இரு அமைச்சக அதி காரிகள் ஆகியோர் இப்பிரதேச நாடுகளுக்கு முறையாக வருகை தர ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இருதரப்பு உறவுகள் தொடர்பான பிரச்சி னைகளைத் தவிர இந்துப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்காவின் இராணுவ நடமாட்டத்தை அதிகப்படுத்துவது சம்பந்தமான பல பிரச் சினைகளும் விவாதிக்கப்பட்டன. இஸ்ரேல், ஜோர்டன், சவுதி அரேபியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் ''போர்த்தந்திர இணக் கத்தை'' அடைய முயற்சி செய்யப்பட்டது, இராணுவத் துறையில் அமெரிக்க-துருக்கி ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்காக கூட்டு உறுப்புகளை ஏற்படுத்துவதைப் பற்றி துருக்கி யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முயலப் பட்டது, இப்பிரதேசத்தில் அமெரிக்க இராணுவ நடமாட்டத்தின் அதிகரிப்பிற்கு இந்தோனே சியா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய

நாடுகளின் ஆதரவைப் பெற முயற்சிக்கப்பட்டது.

80ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலிருந்து இந்துப் பெருங்கடலில் அமெரிக்க இராணுவப் பயிற்சிகள் முறையாக நடக்கின்றன. 1981 நவம்பரிலும் டிசம்பரிலும் எகிப்து, சோமாலி, சூடான் நாடுகளின் பரப்பில் இந்நாடுகளின் இராணுவங்களுடன் கூட்டாகச் சேர்ந்து ''பிரைட் ஸ்டார்'' எனும் சங்கேதப் பெயருடைய பயிற்சிகள் நடைபெற்றன. இவற்றின் முதல் கட்டத்தில் எகிப்தில் 4,000 அமெரிக்கப் போர்வீரர்களும் இதே எண்ணிக்கையிலான எகிப்தியப் போர்வீரர்களும் பங்கேற்றனர். ஓமான் பரப்பில் பயிற்சிகள் முடிவடைந்தன. இதன் பின் ''பிரைட் ஸ்டார்'' பயிற்சிகள் முறையாக நடைபெறலாயின.

1982 டிசம்பரில் ஓமானில் நடைபெற்ற ''ஜெய்ட் டைகர்'' என்ற ஐந்து நாள் அமெரிக்க ஒத்திகைகளில் 2,500 பேர்கள் கலந்து கொண்டனர். இவற்றில் "B-52" ரக குண்டுவீச்சு விமானங்கள், "F-15" ரக சண்டை விமானங்கள், ''என்டர்பிரைஸ்'' விமானந்தாங்கிக் கப்பல் (இது படையிறக்க கப்பல்களிலிருந்து 1,000 கடற்படை வீரர்கள் ஓமான் கரையில் இறங்கியதற்கு உதவி ஆதரவளித்தது), சவுதி அரேபியாவில் உள்ள AWACS விமானங்கள் ஆகியவையும் பங்கேற்றன.

1982 நவம்பர் இறுதியிலும் டிசம்பர் ஆரம்பத்திலும் அமெரிக்க இராணுவம் சோமாலி இராணுவத்துடன் கூட்டாகச் சேர்ந்து போர்

பேராவிலும் மாகடிஷியோவிலும் இராணுவப் பயிற்சிகளை நடத்தியது. வான் சண்டை ஒத்திகைகளில் சவுதி அரேபியாவிற்குச் சொந்தமான "F-15" ரக விமானங்கள் பங்கேற்றன. இவற்றை பசிபிக் மற்றும் இந்துப் பெருங்கடல்களின் பகுதியில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி அட்மிரல் லோங்கும் "துரிதத் தாக்குதல் படைகளின்" தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிங்ஸ்டனும் மேற்பார்வையிட்டனர்.

1982ஆம் ஆண்டின் இறுதியில் சூடானில் அமெரிக்க இராணுவப் பயிற்சிகள் நடை பெற்றன.

1983 ஜனவரி இறுதியில் "தெற்கு கலங் கரை விளக்கம்" எனும் சங்கேதப் பெயரில் ஆஸ்திரேலியாவின் மேற்குக் கரைகளில் நடை பெற்ற இராணுவப் பயிற்சிகளில் "என்டர்பி ரைஸ்" என்ற விமானந்தாங்கிக் கப்பலின் தலைமையின் கீழ் 10 அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் கலந்து கொண்டன. இதுதான் சமீபத்திய 20 ஆண்டுகளில் இந்துப் பெருங் கடலின் இப்பகுதியில் பெண்டகனின் அணு ஆயுத இராணுவப் பலத்தின் பெரும் குவிப் பாகும். ஒத்திகைகள் ஆரம்பமாகும் வரை, 1982 நவம்பரில் கென்யா நாட்டு கடற்கரைத் துறைமுகமாகிய மொம்பாஸாவிலிருந்து வெளி யேறிய விமானந்தாங்கிக் கப்பல் திரட்டு இரண்டு மாதங்கள் இந்துப் பெருங்கடலில் ரோந்து புரிந்தது என்பதைக் குறிப்பிட வேண் டும்.

இந்துப் பெருங்கடல் பிரதேசத்தில் பதட்ட நிலையை அதிகப்படுத்திய இப்பயிற்சிகள் இந்துப் பெருங்கடலில் அமெரிக்க இராணுவத் தயாரிப்புகள் மும்முரமடைந்ததில் புதிய கட்டத்தின் துவக்கமாக அமைந்தன. 1983 ஜனவரி 1ஆம் தேதி அமெரிக்காவின் பிரதேச ''மத்திய படைத்தலைமை'' (சென்ட்கோம்) தோற்றுவிக்கப்பட்டது. தென்மேற்கு ஆசியா, வடகிழக்கு ஆப்பிரிக்கா, பாரசீக வளைகுடா, அராபிக் கடல், செங்கடல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 19 அரசுகள் இதன் செயல் வட்டத்தில் வந்தன.

''துரிதத் தாக்குதல் படைகள்'' சென்ட்கோமின் அடிப்படையாக விளங்கின. ''துரிதத் தாக்குதல் படைகள்'' என்றால் என்ன? இவை தோன்றக் காரணமாயிருந்தது எது? இவற்றின் கடமைகள் யாவை?

இப்படைப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டதானது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆபத்தான நடவடிக்கைகளும் பலத்தின் நிலையிலிருந்து நடத்துதல், அச்சுறுத்தல், அதிகாரம் செய்வது, செல்வாக்கு மண்டலங்களைப் பலப்படுத்துவது, சுதந்திரமான அரசுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கையும் தீவிரமடைந்துள்ளதற்கு இன்னுமொரு சான்றாகும். மற்ற நாடுகளின், குறிப்பாக வளர்முக நாடுகளின் விவகாரங்களில் ஆயுத பலம் கொண்டு தலையிடுவதுதான் இந்த ''துரிதத் தாக்குதல் படைகளின்'' முக்கிய நோக்க

மாகும். எப்படியாவது — இராணுவப் பலத்தைப் பயன்படுத்துவது உட்பட — இந்நாடுகளைத் தன் செல்வாக்கு மண்டலத்தில் வைத்திருக்க வாஷிங்டன் முயலுகிறது.

துரிதக்கதியில் இயங்க வல்ல தலையீட்டுச் சக்திகளைப் பற்றிய கருத்தமைப்பு 1977இல் ஏற்கப்பட்டது, அதாவது இரான் மற்றும் ஆப்கானிஸ்தான் சம்பவங்களுக்கு நீண்ட காலம் முன்னரே இது ஏற்கப்பட்டதேயன்றி இவற்றிற்குப் பதிலாக அல்ல. சர்வதேச நிலவரத்தைப் பகுப்பாய்வு செய்த வாஷிங்டன் போர்த் தந்திரவாதிகள், உலகில் நடைபெறும் ஏகாதிபத்திய எதிர்ப்பு மாற்றங்களுக்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெற்றிகரமாகப் பதிலளிக்க அமெரிக்காவால் முடியாது எனும் முடிவிற்கு வந்தனர். ஜனாதிபதியின் 18வது ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதில் அமெரிக்காவின் ''ஜீவாதார நலன்களைப் பாதுகாப்பது'' எனும் பொய்ச் சாக்கின் கீழ் விசேஷ படைப் பிரிவை ஏற்படுத்துவதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்படைப் பிரிவுதான் பின்னால் ''துரிதத் தாக்குதல் படை'' எனும் பெயரைப் பெற்றது.

இது போன்ற படைப் பிரிவுகளை ஏற்படுத்தும் கருத்து, ''ஒன்றரை யுத்தம்'', ''நெருக்கடி அரைவட்டம்'', ''போர்த்தந்திர இணக்கம்'', ''ஆசியாவிற்கான புதிய அமெரிக்கப் போர்த்தந்திரம்'' போன்ற பல்வேறு ஏகாதிபத்திய கருத்தமைப்புகளுடன் நெருக்கமாகத் தொடர்புடையது.

60ஆம் அண்டுகளில் தோன்றிய ''ஒன்றரை யுத்தம்'' எனும் கருத்தமைப்பு கார்ட்டர் நிர்வாகத்தின் போது புத்துயிர்ப்பு பெற்றது. அதாவது, ஒரே நேரத்தில் ஐரோப்பாவில் ஒரு பெரிய யுத்தத்தையும் ஏதாவதொரு வளர்முக நாட்டில் ஒரு சிறு யுத்தத்தையும் நடத்த அமெரிக்கா தயாராக இருக்க வேண் டும் என்பதுதான் இதன் சாரம். இப்படிப் பட்ட ஒரு யுத்தத்தை நடத்துவதற்காகத்தான் (குறிப்பாக இந்துப் பெருங்கடலில்) இன்றைய ''துரித்த தாக்குதல் படைகளின்'' முன்னோடி யாகிய முக்கியத் தாக்குதல் தலையீட்டுப் படைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டன.

''நெருக்கடி அரைவட்டம்'' எனும் கருத் தமைப்பு ''கார்ட்டர் சித்தாந்தத்தின்'' அடிப்ப டையாக விளங்கியது. இதன்படி பாரசீக வளை குடா மற்றும் தென்மேற்கு ஆசியாவை வாஷிங் டன் தன்னிச்சையாக ''அமெரிக்க ஜீவாதார நலன்களின் மண்டலமாக'' அறிவித்தது. கார்ட் டர் நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ''நெருக்கடி அரைவட்டம்'' என்ற இக்கருத்த மைப்பு, அமெரிக்க நலன்களை ஏதோ அச்சுறுத்தக் கூடிய அரசியல் மற்றும் சமூக-பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகள் இந்துப் பெருங்கடலின் சுற்று வட்டத்தில் உள்ள நாடுகளில் ஏற்படா மல் தடுக்க அமெரிக்கா சகல வழிகளையும் பின் பற்றும் என்று திட்டமிட்டது. தலையீட்டு, தாக்குதல் மற்றும் விரைந்து செயல்படும் படைப் பிரிவுகள்தான் இந்த ''வழிகளாகும்.''

''நெருக்கடி அரைவட்டத்திற்கும்'' ''போர்த்

தந்திர இணக்கத்திற்கும்'' இடையிலான தெட்டந்தெளிவான தொடர்ச்சி நன்கு தெரிகிறது. இது மத்திய கிழக்கு, பாரசீக வளைகுடா, தென்மேற்காசிய நாடுகளை எதிர்நோக்கியுள்ளதாகக் கூறப்படும் மாயையான ''சோவியத் அபாயத்திற்கு'' எதிராக உருவாக்கப்பட்டது. சாராம்சத்தில் இது, இந்தப் பரந்த பிரதேசத்தில், இஸ்ரேல் முதல் பாகிஸ்தான் வரையிலான (பழமைவாத அரபு ஆட்சிமுறைகளும் இதிலடங்கும்) பல நாடுகளுடன் அமெரிக்காவின் ''போர்த்தந்திர இணக்கம்'' என்றழைக்கப்படுவதைப் பயன்படுத்தி அமெரிக்காவின் இராணுவ-அரசியல் நடமாட்டத்தை அதிகப்படுத்துவதற்கான ஒரு கருவியாகும். வாஷிங்டனுடன் தொடர்புடைய ஆட்சிகளைப் பாதுகாத்து ஆதரவளிப்பது இதிலடங்கும், இதில் இராணுவப் பலம் கூட பயன்படுத்தப்படலாம். இதற்கோ விசேஷ துருப்புகள் தேவை.

அமெரிக்க ஆளும் வட்டங்களின் பேரரசு சிந்தனையின் விளைவான இக்கருத்தமைப்புகள் அனைத்திற்கும் ஒரு பொது அம்சம் உண்டு. வளர்முக நாடுகளில், குறிப்பாக இந்துப் பெருங்கடல் பகுதியில் மூலப் பொருள் கிடைக்குமிடங்களையும் விற்பனைச் சந்தைகளையும் தங்குதடையின்றி அடைய நவீன ஏகாதிபத்தியத்திற்குள்ள நாட்டம்தான் இந்தப் பொது அம்சமாகும். இந்நோக்கத்தை அடைய உதவுவதுதான் ''துரிதத் தாக்குதல் படைகளின்'' கடமையாகும்.

பெரும்பாலும் அமெரிக்கப் பரப்பில் நிலை

யாக உள்ள இப்படைகள் அமெரிக்க எல்லைகளுக்கு அப்பால் வெகு தொலைவில் உள்ள தளங்களில் கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றன. இன்றைய அமெரிக்க நிர்வாகம் இந்த ''துரிதத் தாக்குதல் படைகளின்'' மீது இராணுவ ஆக்கிரமிப்புப் பணிகளோடு கூட அந்தந்த இடத்தில் அமெரிக்க ஆதரவு ஒழுங்குமுறையை நிலைநாட்டும் போலீஸ்காரனுக்குரிய கடமைகளையும் திணிக்கிறது. ''ஆசியாவிற்கான அமெரிக்காவின் புதிய போர்த்தந்திரத்தைப்'' பகுப்பாய்வு செய்த ''நியூயார்க் டைம்ஸ்'' பத்திரிகை, இது, அவசியமேற்படும் போது, நட்பு அரசாங்கத்தின் அழைப்பிற்கு காத்திராமல், சொந்த முன் முயற்சியோடு இப்பிரதேசத்தில் தாக்கு நிலைகளை பிடிக்கத் தயாராயிருக்குமாறு அமெரிக்கப் படைகளுக்குக் கட்டளையிடுவதாக ஒளிவுமறைவின்றி எழுதியது.

முதலில் ''துரிதத் தாக்குதல் படைகளின்'' எண்ணிக்கை சுமாராக 1,00,000 நபர்களாக நிர்ணயிக்கப்பட்டது. இப்போது இவற்றில் 2,50,000 நபர்கள் உள்ளனர், சுமார் 1,00,000 பேர்கள் இராணுவ மற்றும் பின்னணி சேம இருப்பில் உள்ளனர். பெண்டகன் தரும் விவரங்களின்படி ''துரிதத் தாக்குதல் படைகளில்'' பின்வரும் பிரிவுகள் உள்ளன:

— மூன்று படையிறக்கு டிவிஷன்களையுடைய கடல் இறக்குப் படை கோர்ப்ஸ். இந்த டிவிஷன்கள் ஒவ்வொன்றிலும் 20,000 நபர்கள் உள்ளனர், ஒவ்வொன்றிற்கும் ஒரு விமான

ஸ்குவாட்ரன் உள்ளது. 30,000 பேர்களடங்கிய இன்னுமொரு டிவிஷனும் ஸ்குவாட்ரனும் சேம இருப்பில் உள்ளன. கடல் இறக்குப் படை கோர்ப்சின் வசம் 364 போர் விமானங்களும் 575 "M-60" ரக டாங்கிகளும் 438 ஹெலிகாப்டர்களும் மற்றும் பீரங்கிகளும் உள்ளன.* சாதாரணமாக ஒரு படையிறக்கு டிவிஷன் மத்தியதரைக் கடலிலும் இரண்டு டிவிஷன்கள் பசிபிக் பெருங்கடல் பகுதியிலும் இருக்கும்.

—விரைந்து தாக்கும் தரைப்படைத் துருப்புகளில் 82வது மற்றும் 101வது வான்-படையிறக்கு டிவிஷன்கள் உள்ளன. இவற்றில் முறையே 15,000 மற்றும் 18,000 நபர்கள் இருக்கின்றனர். இந்த டிவிஷன்கள் அமெரிக்காவில் வட கரோலைனா மற்றும் கென்தூக்கி மாநிலங்களில் நிற்கின்றன. இவற்றிற்கு ஒரு சில நடைமுறைத் தந்திர விமானப்படை ஸ்குவாட்ரன்களை அளிக்க பெண்டகன் திட்டமிடுகிறது; இவை ஒவ்வொன்றிலும் 100 விமானங்கள் வரை இருக்கும்.

—''துரிதத் தாக்குதல் படைகளை'' ஏற்றிச் செல்வதற்கான போக்குவரத்து விமானப்படையில் "C-54 கேலக்சி'' ரக 70 கன விமானங்களும் "C-141 ஸ்டார்லிப்டர்'' மற்றும் "C-130 ஹெர்குலிஸ்'' ரக விமானங்கள் தலா 234ம் உள்ளன. இவற்றோடு

---

* மெஷ்துநரோத்நயா ஷிஸ்ன், இதழ் 2, 1984, பக்கங்கள் 80—88. (ருஷ்ய மொழியில்.)

கூட 220 சிவில் விமானங்களும் சேர்க்கப் படலாம். ரீகன் நிர்வாகம் ''துரிதத் தாக் குதல் படைகளுக்கு'' ஒரு சில டஜன் "B-52" ரக குண்டுவீச்சு விமானங்களை வழங்கியுள்ளது. பெண்டகன் விமானந்தாங்கிக் கப்பல்கள், துணைக் கப்பல்கள், கடல் படையிறக்கு சாதனங்கள் ஆகியவற்றையும் அளிக்கிறது.

''துரிதத் தாக்குதல் படைகளின்'' செயல் வட்டம் கிட்டத்தட்ட மட்டற்றது என்றாலும் இது பெரும்பாலும் தென்மேற்கு ஆசியாவை, குறிப்பாக பாரசீக வளைகுடாவை ஒட்டியுள்ள நாடுகளை அடக்கியுள்ளது. அமெரிக்கப் படைத் தலைமையின் மதிப்பீட்டின்படி, இங்கே, அதாவது 10,000 கிலோமீட்டர்களுக்கு அப்பால் பெருமளவு துருப்புகளை விரைவாக அனுப்ப இப்போதுள்ள கடற்படை, விமானப்படைச் சாதனங்கள் போதாது. எனவே 1983 – 1987ஆம் ஆண்டுகளுக்கான ''துரிதத் தாக்குதல் படை களின்'' மேம்பாட்டு திட்டத்தில் விமான மற்றும் கடல் போக்குவரத்து சாதனங்களின் வாய்ப்புகளைக் கணிசமாக உயர்த்த திட்டமி டப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு வாக்கில் போர்க்கப்பல்களின் எண்ணிக்கையை 600 வரை உயர்த்த அமெரிக்கா திட்டமிட்டுள் ளது. ''துரிதத் தாக்குதல் படைகளுக்கான'' கனமான ஆயுதங்களை எடுத்துச் செல்வதற் காக நூற்றாண்டின் இறுதியில் 100 கப்பல்கள் அடங்கிய போக்குவரத்து கப்பற்படையை உருவாக்க பெண்டகன் திட்டமிட்டுள்ளது.

இது தவிர, ''துரிதத் தாக்குதல் படை

கள்'' செயல்படக் கூடிய பிரதேசங்களில் ஆயுதங்களையும் இயந்திரச் சாதனங்களையும் வைப்பதற்கான ஆதார மையங்களையும் அமெரிக்கா உருவாக்கி வருகிறது. இப்படைகளின் விரைந்து செயல்படும் தன்மை அதிகரித்து வருகிறது. எங்கு செயலில் இறங்க வேண்டுமோ அங்கே இப்படைப் பிரிவுகளையும் யூனிட்டுகளையும் இராணுவத் தயார் நிலைக்குக் கொண்டு வரத் தேவையான நேரம் குறைந்து வருகிறது. உதாரணமாக, நடைமுறைத் தந்திர விமானப்படை யூனிட் இந்துப் பெருங்கடலில் சம்பவ இடத்தை ஒரு சில மணி நேரங்களில் அடையும்; 1,800 கடல் இறக்குப் படையினரைக் கொண்ட படையிறக்க பட்டாலியன் 48 மணி நேரத்திலும் 3,000 பாரசூட் வீரர்களையுடைய இராணுவ வான் இறக்குப்படை பிரிகேடு நான்கு நாட்களிலும் இராணுவ டிவிஷனின் எஞ்சிய பிரிவுகளும் யூனிட்டுகளும் 2 வாரங்களிலும் இப்பிரதேசத்தை வந்தடையும் என்று சென்ட்கோம் படைத்தலைமை கூறுகிறது.

இப்பிரதேசத்தில் ''நெருக்கடி ஏற்பட்டால்'', ''துரிதத் தாக்குதல் படைகள்'' எப்படி இயங்கக் கூடும் என்பதை ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகை பின்வருமாறு வருணிக்கிறது. இதற்காக 20,000 பேர்களடங்கிய பாகிஸ்தானிய டிவிஷன் பயன்படுத்தப்படலாம். ''துரிதத் தாக்குதல் படைகளோடு'' பரஸ்பரம் ஒத்துழைப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட இந்த டிவிஷன் நவீன ஆயுதங்களையும் படைக்

கலங்களையும் பெற்றிருக்கும். 24 மணி நேரத்தில் இது சவுதி அரேபியாவிற்கு அனுப்பப்படும். இங்கே ''துரிதத் தாக்குதல் படைகளுக்கான'' போர்த் தளவாடங்களின் கிடங்குகள் இருக்கும், இந்நேரத்தில் இங்கே உயர் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளும் பொறியியலர்களும் துருப்புகளை எதிர்கொள்வதற்காக முன்னணித் தளங்களைத் தயார்படுத்துவதில் இறங்கியிருப்பார்கள். அதே நேரத்தில் அமெரிக்கத் ''துரிதத் தாக்குதல் படைகள்'' எகிப்து, இஸ்ரேல், சூடான், சோமாலியில் உள்ள தளங்களுக்கு அனுப்பப்படும்; டியகோ கார்சியா தீவில் நிற்கும், கனரக ஆயுதங்களை ஏந்திய அமெரிக்கப் படையிறக்க-போக்குவரத்துக் கப்பல்கள் பாரசீக வளைகுடாவில் உள்ள முன்னணித் தளங்களை நோக்கிச் செல்லும். இதற்கு இவற்றிற்கு இரண்டு நாட்களாகும். அடுத்த 24 மணி நேரத்தில் அமெரிக்கத் ''துரிதத் தாக்குதல் படைகளால்'' சென்ட்கோம் செயல் நடவடிக்கை மண்டலத்தில் உள்ள எந்த இடத்தை வேண்டுமானாலும் அடைய முடியும்.*

''துரிதத் தாக்குதல் படைகளை'' மேம்படுத்துவதில் குறிப்பிட்ட திட்டவட்டமான நாட்டிலும் இப்பிரதேச நாடுகளிலும் இவற்றை இராணுவ ரீதியாகப் பயன்படுத்தும் முறைகளை உருவாக்குவதன் மீது மேன்மேலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அமெரிக்கா

---

* இஸ்வேஸ்தியா, *24.01.84.* (ருஷ்ய மொழியில்.)

விலும் ''துரிதத் தாக்குதல் படைகள்'' செயல்படக் கூடிய இடங்களிலும் பரவலான தயாரிப்புகள் முறையாக நடைபெறுகின்றன. உதாரணமாக இந்துப் பெருங்கடலில் அமெரிக்கப் பங்கேற்புடன் நடைபெறும் ஒத்திகைகள் இதற்குப் பயன்படுகின்றன. இவை எதிர்கால சீர்குலைவு-பயங்கர நடவடிக்கைகளுக்கு ஒருவிதமான பெரும் பயிற்சிகளாகும். ''இராஜதந்திரம் தோல்வியுற்றால் அமெரிக்க இராணுவத்தின் கணிசமான பகுதியை நடவடிக்கையில் இறக்க நாம் தயார்''* என்று ஒத்திகைகளின் தலைவரும் ''துரிதத் தாக்குதல் படைகளின்'' தளபதியுமாகிய ஜெனரல் கிங்ஸ்டன் அறிவித்தார்.

''துரிதத் தாக்குதல் படைகள்'' — ஒரு விதமான தாக்குதல் பலமாகும். இதைப் பயன்படுத்தி தன் சித்தத்தைத் திணிக்க, அமெரிக்காவின் ஜீவாதார நலன்கள் என்றழைக்கப்படுவதன் பெயரால் மக்களினங்களின் உண்மையான ஜீவாதார நலன்களை அமெரிக்கா மிதித்து நாசம் செய்கிறது. கிரினாடா நிகழ்ச்சிகள் இதற்கு நல்ல சான்றாகும்.

சென்ட்கோம் என்பது நவீன காலனியாதிக்க நிர்ப்பந்த இயந்திரம். இந்தப் புதிய இராணுவ இயந்திரத்தின் கொடிய கரங்கள் ஃபிளோரிடா மாநிலத்தில் தாம்பா நகரில் உள்ள மாக்டில் விமானத் தளத்திலிருந்து

---

* மாஸ்கோவ்ஸ்கியே நோவஸ்தி, இதழ் 5, 1983. (ருஷ்ய மொழியில்.)

நீளுகின்றன. இங்குதான் ''மத்தியப் படைத் தலைமையின்'' தலைமையகம் உள்ளது. ''துரிதத் தாக்குதல் படைகளின்'' திட்டப் பிரிவும் இங்குதான் உள்ளது. சமாதான காலத்தில் **சென்ட்கோம்** தளபதி நேரடியாக அமெரிக்கப் படைத்தலைமையகத் தலைவர்களின் கமிட்டிக்குக் கீழ்ப்பட்டவர்.

''மத்தியப் படைத்தலைமை'' தோற்றுவிக்கப்பட்டதானது அதிகாரபூர்வமான வாஷிங்டனின் இராணுவ வெறி சிந்தனையின் ஆபத்தான விளைவாகும். இந்த ''சிந்தனா முறையின்படி'' உலகம் பல போர்க்களங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தனிப்பட்ட ''களங்களை'' உண்டாக்குவதிலிருந்து இவற்றைக் கூட்டாக ஒன்றிணைப்பதற்கு மேன்மேலும் வெளிப்படையாக மாறிச் செல்வதில்தான் மேற்கூறிய சிந்தனையின் உலகளாவிய தன்மை அடங்கியுள்ளது. **சென்ட்கோம்** தோற்றுவிக்கப்பட்டதே, தனிப்பட்ட இராணுவத் தளங்கள், ஆதார மையங்களை விடுத்து அதிகப் பரவலான ஆக்கிரமிப்புத் தாக்குமுனைகளை ஏற்படுத்துவதை நோக்கிய மாற்றத்தைக் குறிக்கிறது.

''துரிதத் தாக்குதல் படைகள்'' **சென்ட்கோம்** கட்டமைப்பால் உட்கொள்ளப்பட்டதானது வெறும் பெயர் மாற்றம் மட்டுமல்ல. கிட்டத்தட்ட உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஏகாதிபத்தியத்தின் ''தீயணைப்புப் படைகளை'' நிறுத்தும் நோக்கத்தோடான உலகந்தழுவிய மாற்றத்தைப் பற்றி இங்கே

பேசப்படுகிறது. ''ஃபோக்லென்ட் தீவுகளுக்குத் தம் படைகளை அனுப்ப வேண்டியதன் அவசியத்தைத் திடீரென உணர்ந்த'' ஆங்கிலேயர்களின் ''அனுபவம்'' செண்ட்கோமைத் தோற்றுவிப்பதைத் துரிதப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியது என்பது பெரிதும் குறிப்பிடத் தக்கது.

இந்தப் படைத்தலைமையைத் தோற்றுவித்த தானது வாஷிங்டனின் உலகளாவிய மேலாதிக்கக் கொள்கையின் ஒரு கட்டமாகும், தென் மேற்கு ஆசியா, கிழக்கு ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதிக்கத்தை நிலை நாட்டும் போர்த்தந்திரத் திட்டத்தின் முக்கிய அங்கமாகும். இப்போர்த்தந்திரத்தின் பின்னணியில்தான், சமுத்திரப் பகுதிகளில் இராணுவ மேன்மையை அடையும் வாஷிங்டனின் போக்கையும் புதிய போர்க் கப்பல்களைக் கட்டும் திட்டங்களையும் பார்க்க வேண்டும்.

எனவே ''நியூஜெர்சி'' போர்க் கப்பல், இயங்கும் கடற்படையில் மீண்டும் சேர்ந்ததையொட்டிய விழாவில் உரையாற்றிய போது சமுத்திர ஆதிக்கத்தைப் பற்றி ஜனாதிபதி ரீகன் பேசியதில் (இதை இந்த அத்தியாயத்தின் துவக்கத்தில் மேற்கோள் காட்டினோம்) ஆச்சரியம் எதுவுமில்லை.

1969இல் ''நியூஜெர்சி'' போர்க் கப்பல் கடற்படையிலிருந்து அகற்றப்பட்டு தரையில் நிறுத்தப்பட்ட போது இதன் தலைவன் தன் இறுதி உரையில், ''அமைதியாக உறங்கு அருமைக் கப்பலே! ஆனால் அயர்ந்து உறங்கி

விடாதே, சுதந்திரத்திற்காகப் போராடும்படி உன்னை மீண்டும் அழைக்கும் போது அந்த அழைப்பை நீ கேட்க வேண்டும்'' என்று கூறினார். இந்த ''நியூஜெர்சி'' போர்க் கப்பல் எப்படி ''சுதந்திரத்திற்காகப் போராடியது'' தெரியுமா? இது மிருகத்தனமாக கொரியா மீதும் வியட்நாம் மீதும் குண்டுமழை பொழிந்தது. நம் நாட்களில் இது லெப னானில் ''சுதந்திரத்திற்கான போராட்டத் தைத்'' தொடர்ந்தது.

அமெரிக்காவின் உதாரணத்தைப் பின் பற்றி இங்கிலாந்தும் பிரான்சும் தம் ''துரிதத் தாக்குதல் படைகளைத்'' தோற்றுவிக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். மேற்கத்தியப் பத்திரிகைகளின் செய்திகளின்படி இங்கிலாந்து இத்தகைய படைகளைத் தோற்றுவிக்கும் வேலையை முடித்து வருகிறது. இது வான் படையிறக்கத் துருப்புகளாகும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் அனுபவமுள்ள 5வது பிரி கேடு இவற்றின் அடிப்படையாகும். இது தான் 1983இல் ஃபோக்லென்ட் தீவுகளுக்காக ஆர்ஜென்டீனாவிற்கு எதிரான போரில் பங் கேற்றது.

பிரான்சில் 1982ஆம் ஆண்டிலேயே ஏற் கப்பட்ட திட்டத்தின்படி ''துரிதத் தாக்கு தல் படைகள்'' 5 டிவிஷன்களைக் கொண் டிருக்கும், இவற்றில் சுமார் 50,000 ஆட்கள் இருப்பார்கள்.

ஃபோக்லென்ட் தீவுகளில் இங்கிலாந்தின் அதிசாகசச் செயல், கிரினாடாவிற்கு எதிரா



7–898

யும் லெபனானிலும் அமெரிக்காவின் ஆக்கிர மிப்பு, 1984இல் சாத் நாட்டு நிகழ்ச்சிகளில் பிரான்சின் தலையீடு ஆகியன, நேட்டோ கூட்டின் ''துரிதத் தாக்குதல் படைகள்'' தோற்றுவிக்கப்பட்டுள்ளதோடு கூட இந்தக் கூட்டின் நடவடிக்கை வட்டத்திற்கு அப்பாற் பட்ட இடங்களிலும் செயல்படுகின்றன என் பதைக் காட்டுகின்றன.

''துரிதத் தாக்குதல் படைகளைத்'' தோற்று வித்ததானது சோஷலிசம் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு எதிராக பேரரசு வேட்கை மிக்க ''சிலுவைப் போரை'' நடத்து வதற்கான ஏகாதிபத்தியத்தின் தயாரிப்பில் ஒரு அங்கம் மட்டுமே. இவற்றின் தோற்றம் 80ஆம் ஆண்டுகளுக்கான அமெரிக்க இராணுவப் போர்த்தந்திரத்தின் ஒரு உட்பகுதியாகும்.

அமெரிக்காவும் மற்ற நேட்டோ நாடுகளும் உலகின் எல்லா பிரதேசங்களிலும் தம் இராணுவத்தைப் பயன்படுத்துவதற்கான சூழ் நிலைகளை ஏற்படுத்த முயலுகின்றன, போர்த் தந்திர அணு ஆயுத பலத்தைப் பெருக்குகின்றன, இடைத்தொலைவு அணு ஆயுதத் தாக்கு தல் சாதனங்களை நிறுத்துகின்றன, ''துரிதத் தாக்குதல் படைகளைப்'' பலப்படுத்துகின்றன, சாதாரணப் படைகளுக்கு புதிய, மிகத் துல்லிய மான ஆயுதங்களை வழங்குகின்றன, புதிய பிர தேச படைத்தலைமைகளை ஏற்படுத்துகின்றன. இந்நடவடிக்கைகள் அனைத்தும் தெள்ளத் தெளிவான ஆக்கிரமிப்புத் தன்மையை உடை யவை, உலக சமாதானத்திற்கு ஆபத்தானவை.

எனவே ‘‘துரிதத் தாக்குதல் படைகள்’’ ஏகாதிபத்திய அரசுகளின் ஆக்கிரமிப்புக் கொள் கையின் ஆயுதம், இவற்றின் சர்வதேச பயங் கரவாதம் மற்றும் கொள்ளையடிப்பதற்கான ஆயுதம் என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

வாஷிங்டனின் பேரரசு நாட்டங்கள் குறிப் பாக இந்துப் பெருங்கடலின் முக்கியப் பிரதே சமாகிய பாரசீக வளைகுடாவில் வெளிப்படு கின்றன. 80ஆம் ஆண்டுகளில் ஏகாதிபத்தியத் தின் உலகளாவிய போர்த்தந்திரத்தில் இப்பிர தேசத்தின் முக்கியத்துவம் கணிசமாக அதிகரித் துள்ளது. பாரசீக வளைகுடா மீதான அமெ ரிக்க ஆளும் வட்டங்களின் கவனம் அதிகரித் துள்ளதற்கு எண்ணெய் மட்டுமின்றி இன்னு மொரு காரணமும் உண்டு: இங்கிருந்து சோவியத் யூனியனை அச்சுறுத்துவதும் இப்பிரதேச அரசுகளின் மீது தன் சித்தத்தைத் திணிப்பதும் எளிது.

சமீப ஆண்டுகளில் பாரசீக வளைகுடா பகுதியில் வாஷிங்டனின் அரசியலில் இராணுவ-அரசியல் காரணிதான் தீர்மானகரமானதாக மாறி வருகிறது. இப்பிரதேசத்திலிருந்து வரும் எண்ணெய் சப்ளை குலைவதைப் பற்றி அமெ ரிக்கா கவலை கொள்கிறது எனும் வாதம் எடுபடாது. இது அமெரிக்க நிபுணர்களாலேயே மறுக்கப்படுகிறது. உதாரணமாக ‘‘இன்டர் நேஷனல் ஹெரல்ட் ட்ரிப்யூன்’’ பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டது: ‘‘சமீப ஆண்டு களில் பாரசீக வளைகுடாவிலிருந்து வரும் எண்ணெயை அமெரிக்கா சார்ந்திருப்பது

குறைந்து விட்டது, அமெரிக்காவிற்கு வரும் எண்ணெயில் 5 சதவிகிதம் மட்டுமே ஹோர்மூஸ் ஜலசந்தி வழியே வருகிறது.''*

70ஆம் ஆண்டுகளின் நடுவில் அமெரிக்கா, இப்பிரதேசத்தில் ஏகாதிபத்திய நிலைகளின் ''பாதுகாப்பிற்கு'' சவுதி அரேபியாவும் இரானும் வகை செய்யும் என்று கருதியது. 70ஆம் ஆண்டுகளின் இறுதியிலோ இங்கே நேரடியான அமெரிக்க இராணுவ நடமாட்டத்திற்கான தயாரிப்புகள் ஆரம்பமாயின. 1978—1979ஆம் ஆண்டுகளில் இரானில் நடைபெற்ற சம்பவங்கள் இதைத் துரிதப்படுத்தின. இவை, இப்பிரதேசத்தில் அமெரிக்காவின் நேரடி கண்காணிப்பை நிலைநாட்டும் கொள்கையை மேற்கொள்ள பலாத்கார முறைகளின் ஆதரவாளர்களுக்கு சாக்காக அமைந்தன.

ஆண்டுகள் செல்லச் செல்ல பாரசீக வளைகுடாவிலும் இந்துப் பெருங்கடல் பகுதியிலும் அமெரிக்க கடற்படைச் சக்திகளின் எண்ணிக்கையும் வளைகுடா பகுதிக்கு அனுப்பப்படுவதற்காக உள்ள ''துரிதத் தாக்குதல் படைகளின்'' எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன, இந்த ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கான புதிய தளங்களையும் ஆதார மையங்களையும் தேடும் முயற்சிகள் தீவிரமாகத் தொடர்ந்தன. ''நமக்கு உலகளாவிய கடமைகள் இருந்தாலும் முக்கியமாக பாரசீக வளைகுடாதான் நம்

---

* *International Herald Tribune,* March 26, 1984, p. 2.

நோக்கம்''* என்று ''துரிதத் தாக்குதல் படைகள்'' உருவாக்கப்பட்ட போது இவற்றின் தளபதி கிங்ஸ்டன் கூறினார்.

சோவியத் எதிர்ப்பின் அடிப்படையில் பழமைவாத அரசுகளின் கூட்டை ஏற்படுத்துவது என்பது இக்காலகட்டத்தில் பாரசீக வளைகுடா பகுதியில் வாஷிங்டனின் கொள்கையில் முக்கிய அம்சமாக இருந்தது. வளைகுடா பகுதியிலும் இதன் அருகேயும் இராணுவ நடமாட்டத்தை அதிகரிக்கும் அதே சமயம் அமெரிக்கா, ''சோவியத் அபாயத்தை'' முறியடிப்பதற்காக பரஸ்பரச் செயலாக்கத்திற்குத் தயாராகுமாறு இங்குள்ள அரசுகளின் மீது தீவிரமாக நிர்ப்பந்தம் செலுத்துகிறது.

தன் செல்வாக்கை அதிகமாக்கி, பாரசீக வளைகுடா பகுதியில் நுழைவதற்கு இரான்-இராக் யுத்தமும் அமெரிக்காவிற்கு ஒரு சாதனமாக மாறியுள்ளது. இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென வாஷிங்டனில் பேச்சளவில் மட்டுமே கூறுகின்றனர், உண்மையிலோ இந்த யுத்தத்தில் யாருமே வெற்றி பெறாமல் இருப்பதுதான் அமெரிக்காவிற்குப் பெரிதும் சிறந்தது எனும் நிலையிலிருந்து செயல்படுகின்றனர்.

மத்திய கிழக்கில் நெருக்கடியற்ற வளர்ச்சி என்பது வாஷிங்டனிற்கு ஏற்புடையதாக இல்லை, ஏனெனில் இது ஒத்துழைப்பை வளர்க்கவும் சமாதானமான சூழ்நிலைகளில் பரஸ்

---

* *Time,* September 22, 1980, p. 15.

பரம் இணைந்து செயல்படவும் இங்குள்ள அரசுகளுக்கு வாய்ப்பளிக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தன் இராணுவ-அரசியல் ஆதிக்கத்தைத் தக்க வைப்பது அமெரிக்காவிற்கு மிகக் கடினமானதாக இருக்கும். இராக்கிற்கும் இரானுக்கும் இடையிலான சச்சரவு வாஷிங்டனுக்குப் பல வாய்ப்புகளையளிக்கிறது. மத்திய கிழக்கு மக்களிடையே பிளவை ஏற்படுத்தி, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிலிருந்தும் லெபனான், மற்ற அராபிய அரசுகளின் விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டிலிருந்தும் இவர்களின் கவனத்தைத் திசை திருப்பி வாஷிங்டனும் இதன் நேட்டோ கூட்டாளிகளும் இரான்-இராக் யுத்தத்தை இப்பிரதேசத்தில் தம் இராணுவப் பலத்தைப் பெருக்கப் பயன் படுத்துகின்றன.

இச்சச்சரவை ஆழப்படுத்திய ஒவ்வொரு செயலும் அமெரிக்கா, மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளின் தலையீடு அதிகரிப்பதற்கு இட்டுச் சென்றது கவனிக்கத் தக்கது. உதாரணமாக, ஹோர்மூஸ் ஜலசந்தியில் ஒன்றிரண்டு பெரும் எண்ணெய் கப்பல்களை மூழ்கடித்து பாரசீக வளைகுடாவை முற்றுகையிடப் போவதாக இரான் அச்சுறுத்தியதற்குப் பதிலளிக்கும் முகமாக பெண்டகன் 1984 மார்ச்சில் இப்பிரதேசத்திற்கு ஏற்கெனவேயுள்ள கப்பல்கள் போதாதென்று ‘‘என்டர்பிரைஸ்’’ என்ற விமானந்தாங்கிக் கப்பலையும் 2,000 கடல் இறக்குப் படைவீரர்களையும் அனுப்பியது.

மற்ற நாடுகளும் எப்படி இச்சச்சரவினுள்

இழுக்கப்பட்டன என்று நினைவு கூரலாம். உதாரணமாக சவுதி அரேபியாவின் விமானப் படை இதில் ஈடுபடுத்தப்பட்டது. அங்குள்ள AWACS சாதனங்களைக் கொண்ட விமானங் களில் இருக்கும் அமெரிக்க எலெக்ட்ரானிக் வேவு சாதனங்களின் உதவியால் இரண்டு இரானிய சண்டை விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன. எண்ணெய் கப்பல்களின் நாடுகள் விருப்பந் தெரிவிக்காவிட்டாலும் அமெரிக்க போர்க் கப்பல்கள் இவற்றிற்குப் பாதுகாப் பாக வரலாயின.

1984 வசந்தத்தில் லண்டனில் நடைபெற்ற ஏழு முதலாளித்துவ அரசுகளின் கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரீகன் பாரசீக வளை குடா பகுதியில் உள்ள நிலவரத்தின் தொடர் பாய் இந்நாடுகளின் கூட்டு நடவடிக்கைத் திட்டத்தை முன்வைத்தது வரை விஷயம் சென்றது.

இரான்-இராக் சச்சரவில் இராணுவ-அரசியல் பதட்ட நிலையைத் தூண்டியுள்ள மேலைய நாடுகள் இப்பிரதேசத்தில் உள்ள அரசுகளை அயர்வுண்டாக்கும் ஆயுதப் போட் டியினுள் மேன்மேலும் ஆழமாக இழுக்கின்றன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இச்சச்சரவு, ஆயுத விற்பனையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க ஏகபோகங்களுக்கும் மற்ற நாடு களின் ஏகபோகங்களுக்கும் மிகவும் லாபகர மானதாக ஆகியுள்ளது.

பொதுவாக ஆயுத விற்பனை, வளர்முக நாடுகளில் விஸ்தரிப்பை அதிகப்படுத்துவதற்

காக அமெரிக்காவால் பரவலாகப் பயன்படுத் தப்படுகிறது. 1980இல் ஆயுத ஏற்றுமதியால் 17.5 பில்லியன் டாலர்கள் லாபம் கிடைத்தது என்றால் இது 1983இல் 22 பில்லியன் டாலர் களாக அதிகரித்தது. உதாரணமாக, ஆப்பி ரிக்க நாடுகளுக்கு அமெரிக்க ஏகபோகங்கள் ஆயுதங்களை விற்றதால் கிடைத்த லாபம் இந்நாடுகளுக்கான அமெரிக்க உதவியை விட மும்மடங்கு அதிகம்.

அதுவும் வாஷிங்டன் இந்நாடுகளுக்கு ஆயுதங்களை விற்க பல அரசியல் நிபந்தனை களை முன்வைக்கிறது. இவை இந்நாடுகளினுள் அமெரிக்கா நுழையவும் இவற்றை அமெரிக்க நலன்களுக்கு உட்படுத்தவும் இட்டுச் செல்கின் றன. வாஷிங்டனின் கொள்கையை ஆதரிக்கும் நாடுகளுக்குதான் முதலாவதாக ஆயுதம் வழங்கப்படுகிறது. இராணுவ உதவி உட்பட சகலவித அமெரிக்க ‘‘உதவியையும்’’ பெறும் முக்கிய நாடுகளாக இஸ்ரேலும் பாகிஸ்தானும் இருப்பது தற்செயல் அல்லவே.

வாஷிங்டன் ஆயுதங்களை, குறிப்பாக நவீன ஆயுதங்களை விற்பதோடு கூட இவற்றை வாங்கும் நாடுகளுக்கு அமெரிக்க இராணுவ நிபுணர்களையும் அனுப்புகிறது என்பது குறிப் பிடத் தக்கது. இவர்கள் அந்நாடுகளில் நடை முறை ரீதியாக இந்த ஆயுதங்களைப் பயன் படுத்துவதைப் பற்றித் தீர்மானிக்கின்றனர். இது வளர்முக நாடுகளின் இராணுவ அமைச் சகங்களில் பெண்டகனுக்கு உள்ள ஒருவித மான ‘‘கூடுதல் ஊன்றுகோலாகும்’’. இது

ஸ்தல இராணுவத்தின் மீது செல்வாக்கைச் செலுத்துகிறது, அமெரிக்காவிற்கு ஆதாயமான கொள்கையைப் பின்பற்றுமாறு இவற்றை அடிக்கடி கட்டாயப்படுத்துகிறது, சில சமயங் களில் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கு வழிகோலுகிறது. வளர்முக நாடுகளுக்கான இராணுவ நிபுணர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஒரு முக்கியப் பங்குண்டு. கடைசி பத்தாண்டில் மட்டும் சுமார் **2,00,000** இத்தகைய நிபுணர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மேற்கூறியவற்றைத் தொகுத்துப் பார்த் தால் ஒரேயொரு முடிவிற்குத்தான் வர முடியும். இப்பிரதேசத்தில் தன் கொள்கையின் புதிய கட்டத்தை அமெரிக்கா நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதுதான் அம்முடி வாகும். முன்னணி போர்த்தந்திர அணு ஆயுதச் சக்திகளை இந்துப் பெருங்கடலுக்குக் கொண்டு வந்தது, இவற்றை இங்கே நிரந் தரமாக நிறுத்தியது; நிரந்தர இராணுவ நடமாட்டத்தின் அளவையும் தரத்தையும் கணிசமாக உயர்த்தியது; ''நெருக்கடி நில வரங்கள்'' தோன்றினால் இப்பிரதேச அரசு களை நேரடியாக அச்சுறுத்துவதற்காக ''துரி தத் தாக்குதல் படைகளைப்'' பிரதேசத்தில் நிறுத்தியது; இறுதியாக, இப்பிரதேசத்திற்கென விசேஷமாக ஒரு புதிய இராணுவத் தலை மையை **(சென்ட்கோம்)** தோற்றுவித்தது — இவைதான் இந்தக் கட்டத்தில் இந்துப் பெருங் கடலில் அமெரிக்க இராணுவ-அரசியல் நட மாட்டத்தைப் பெருக்கிய குறிப்பிடத் தக்க

அம்சங்களாகும். இங்கே வாஷிங்டனின் கொள்கை, சோஷலிசத்துடன் மோதுவது, தேசிய விடுதலை இயக்கங்களை ஒடுக்குவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட அமெரிக்காவின் உலகளாவிய போர்த்தந்திரக் கொள்கையின் ஒரு அம்சம் மட்டுமே.

# அத்தியாயம் நான்கு

## இந்துப் பெருங்கடலில் ஒவ்வொருவரின் உண்மை நிலை

இந்துப் பெருங்கடலில் உள்ள நிலவரத்தை அமெரிக்காவின் உலகந்தழுவிய பொது கடற் படைப் போர்த்தந்திரத்தின் பின்னணியில் பார்க்க வேண்டும். இந்துப் பெருங்கடலின் வழி யாகச் செல்லும் மார்க்கங்கள் அட்லாண்டிக் பெருங்கடல், மத்தியதரைக் கடல் மற்றும் பசிபிக் பெருங்கடலில் உள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் இராணுவத் தளங்களுக்கு இடையிலான தொடர்பிற்கு வகை செய்கின்றன. இந்துப் பெருங்கடல் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடலின் எல்லைகளில் உள்ள போர்த்தந்திரப் பிரதேசங் களை சைமன்ஸ்டாவுனில் (தென்னாப்பிரிக்கா) உள்ள தளத்தைப் பயன்படுத்தும் இங்கிலாந்து கண்காணிக்கிறது. பசிபிக் பெருங்கடலுக்கும் இந்துப் பெருங்கடலுக்கும் இடையிலுள்ள நிலைகள் குவமிலும் பிலிப்பைன்சிலும் உள்ள அமெரிக்கத் தளங்களின் செயல் வட்டத்தில் உள்ளன. இவ்வாறாக இந்துப் பெருங்கடலின் பரந்த பிரதேசத்தை ''இழுத்து மூடலாம்'', அதாவது ''மூழ்கடிக்கப்பட முடியாத விமா

னந்தாங்கிக் கப்பலாகிய'' டியகோ கார்சியா தீவை மையத்தில் வைத்து ஏகாதிபத்திய இராணுவத் தளங்களின் ஐக்கிய சங்கிலித் தொடரை உருவாக்கலாம்.

இது தவிர, இந்துப் பெருங்கடலானது அமெரிக்காவின் உலகளாவிய விண்வெளி மற்றும் ராடார் கண்காணிப்பு முறையிலும் இதன் பெருங்கடல் ரோந்து முறையிலும் சேர்க்கப்பட்டுள்ளது. ''புதிய பல மையத்தை'' தோற்றுவிப்பதில் தன்னுடைய கூட்டாளி களை, முதலாவதாக நேட்டோ நாடுகளையும் ஜப்பானையும் அமெரிக்கா தீவிரமாக ஈடுபடுத்து கிறது, இவற்றிற்கு சில பணிகளை ஒதுக்கி, செலவுகளில் ஒரு பகுதியை இவற்றின் தலை யில் கட்ட முயலுகிறது. உதாரணமாக, ஜப்பானிலும் தென் கொரியாவிலும் அமெரிக்க இடைத்தொலைவு அணு ஆயுதங்களை நிறுவத் திட்டமிடப்படுகிறது. தன்னுடைய ஆக்கிர மிப்பு இராணுவ-அரசியல் போர்த்தந்திரத்தில் ஜப்பானையும் ஈடுபடுத்த முயலும் முகமாக அமெரிக்க-ஜப்பான் ''பாதுகாப்பு ஒப்பந்தத்தை'' வட அட்லாண்டிக் கூட்டுடன் இணைக்கவும் ஜப்பான் தீவுக் கூட்டத்தை நேட்டோவின் தொலை கிழக்கு பகுதியாக மாற்றவும் அமெரிக்கா பாடுபடுகிறது. ஜப்பானிலிருந்து 1,000 மைல் சுற்றுப் பரப்பில் கடல் போக்குவரத்து மார்க்கங்களுக்குப் ''பாதுகாப்பு'' அளிப்பதாக டோக்கியோ உறுதி மொழி ஏற்றுக் கொண் டுள்ளது இதற்குத் திட்டவட்டமான சான்று. அதே சமயம் அன்சூஸ், அன்சூக் ஆகிய

இராணுவ-அரசியல் கோஷ்டிகளைத் தீவிரப் படுத்தவும் ஆசியான் நாடுகளைத் தன் இரா ணுவ-அரசியல் வட்டத்திற்குள் இழுக்கவும் அமெரிக்கா முயலுகிறது.

இக்கொள்கை நிறைவேற்றத்தின் போது, குறிப்பாக இந்துப் பெருங்கடலின் பக்கவாட்டுப் பகுதிகளில் தென்னாப்பிரிக்கக் குடியரசு, ஆஸ்திரேலியாவின் பங்கு அதிகரித்தது, இந் நாடுகளுடன் அமெரிக்காவிற்கு உள்ள இரா ணுவ-அரசியல் தொடர்புகள் விரிவடைந்தன, ஆழமாயின. இரண்டாவது உலக யுத்தம் முடிவுற்றதுமே மேலைய வல்லரசுகள் தென் னாப்பிரிக்கக் குடியரசின் மீது தம் கவனத் தைச் செலுத்தின. நேட்டோ ஆக்கிரமிப்புக் கூட்டு தோற்றுவிக்கப்பட்ட பின் இக்கவனம் அதிகமாகியது. இரண்டு பெருங்கடல்கள் சந்திக்குமிடத்தில் இருந்த தென்னாப்பிரிக்கக் குடியரசின் போர்த்தந்திர ரீதியான நிலையின் முக்கியத்துவம் கவனத்தைக் கவர்ந்தது, மேலும், வளர்ந்து வந்த தேசிய விடுதலை இயக்கத்திற்கெதிரான போராட்டத்திற்கு ஆதார மையங்களைத் தேட வேண்டியிருந்தது.

1955ஆம் ஆண்டு சைமன்ஸ்டாவுன் உடன்ப டிக்கையின்படி தென்னாப்பிரிக்காவிற்கு பிரிட் டிஷ் ஆயுதமும் போர்த் தளவாடங்களும் அனுப்பப்படலாயின. இதற்குப் பதிலாக தென் னாப்பிரிக்கக் குடியரசின் பரப்பில் உள்ள கடற்படை மற்றும் விமானப்படைத் தளங் களைப் பயன்படுத்தும் உரிமையை கிரேட் பிரிட்டனும் எனவே மற்ற நேட்டோ நாடு

களும் பெற்றன. இது தவிர, நேட்டோவின் உறுப்பு நாடாகிய போர்த்துகலுக்கு அங்கோலா மற்றும் மொசாம்பிக் நாடுகளில் துருப்புகளும் இராணுவத் தளங்களும் மற்ற இராணுவ அமைப்புகளும் இருந்தன.

போர்த்துகல் காலனியாதிக்கப் பேரரசு வீழ்ந்த பின் நேட்டோவின் போர்த்தந்திரத் திட்டங்களில் தென்னாப்பிரிக்கக் குடியரசின் பங்கு அதிகரித்தது. நிறவெறியர்களுக்கு ஆயுதம் வழங்குவதன் மீது ஐ. நா. சபையின் தீர்மானங்கள் 1977இலிருந்து தடை விதித்த போதிலும் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் நிற வெறியர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பு தொடர்ந்தது.

மேலைய வல்லரசுகளின் உதவியால் தென் னாப்பிரிக்கா தனது சொந்த இராணுவத் தொழில்துறையை ஏற்படுத்தியது. இது கிட்டத் தட்ட எல்லா வகையான ஆயுதங்களையும் உற்பத்தி செய்கிறது. இன்று உலக ஆயுத உற்பத்தியில் இந்த நிறவெறி அரசு 10வது இடத்தை வகிக்கிறது. கடந்த இருபது ஆண்டு களில் தென்னாப்பிரிக்காவின் இராணுவ பட்ஜெட் 60 மடங்கிற்கும் கூடுதலாகவும் இராணுவம் 15 மடங்கும் அதிகரித்துள்ளன.*

ரீகன் நிர்வாகம் வெள்ளை மாளிகையில் ஆட்சிக்கு வந்த பின் தென்னாப்பிரிக்காவிற் கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவு களில் புதிய கட்டம் துவங்கியது. அமெரிக்க

---

* பிராவ்தா, 2.10.84. (ருஷ்ய மொழியில்.)

ஜனாதிபதி தென்னாப்பிரிக்காவை ‘‘நட்பு அரசு’’ என்று கூட அறிவித்தார். நிறவெறி ஆட்சியுடன் நேட்டோவின் மற்ற உறுப்பு நாடு களுக்கு இருந்த தொடர்புகளை இவை அறி விக்க இதுவே போதுமானதாயிருந்தது. 1981 நவம்பரில் தென்னாப்பிரிக்க அயல் விவகாரத் துறை அமைச்சர் போதா நேட்டோவின் அன் றைய பொதுச் செயலாளர் லூன்சை சென்று சந்தித்தார். ஆப்பிரிக்கப் பத்திரிகைகளின் செய்திகளின்படி, நேட்டோவின் செல்வாக்கு மண்டலத்தை அட்லாண்டிக் மற்றும் இந்துப் பெருங்கடல்களின் தென் பகுதிக்குப் பரப்பு வதைப் பற்றியும் மேலைய நாடுகளிலிருந்து தென்னாப்பிரிக்காவிற்கு ஆயுதம் அனுப்புவதன் மீதுள்ள தடையை ஓரளவு அகற்றுவது குறித் தும் இச்சந்திப்பில் பேசப்பட்டது.

உலகின் இப்பகுதியில் நிறவெறி ஆட்சிதான் நேட்டோவின் முக்கிய ஆதார மையமாக மாறி யுள்ளது. நேட்டோ வல்லரசுகளின் உதவியோடு உருவாக்கப்பட்ட தென்னாப்பிரிக்காவின் பலம் மிகு இராணுவக் கட்டமைவை நேட்டோ கூட்டு பயன்படுத்தத் துவங்கியது. 1980ஆம் ஆண்டிலேயே தென்னாப்பிரிக்காவின் தேவை களை மட்டுமின்றி மற்ற தேவைகளையும் கணக்கில் கொண்டு சைமன்ஸ்டாவுனில் உள்ள இராணுவத் தளம் நவீனப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டது. பிரிட்டோரியா ஆட்சி யாளர்களின் கூற்றுப்படி இது ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையில் உள்ள எல்லா தளங்களிலும் மிக நவீனமயமானது. நன்னம்பிக்கை முனை

யில் முக்கியமானதொரு இடத்தில் இருக்கும் இத்தளத்தில் கப்பல்களைப் பழுது பார்க்கவும் மற்ற சர்வீஸ் வசதிகளுக்குமான மிக நவீன உபகரணங்கள் உள்ளன: இங்கே நீர்மூழ்கிக் கப்பல்களுக்கான ஒரு கப்பல் துறை உட்பட மூன்று கப்பல் துறைகள் இருக்கின்றன; இங்கே நடுத்தர அளவுடைய 40 கப்பல்கள் நிற்கலாம், ஒரே நேரத்தில் ஆறு அல்லது ஏழு கப்பல்களைப் பழுது பார்க்க வசதிகள் உள்ளன; இங்கே நவீன தொழில்துறை கட்டமைப்பு நிலவுகிறது. சர்வதேச விமான நிலையமும் சில்வெர்மைனில் எலெக்ட்ரானிக் தகவல் தொடர்பு மையமும் இருக்கின்றன.

1972இல் திறக்கப்பட்ட இந்தத் தகவல் தொடர்பு மையம் மேற்கொண்டு நவீனப்படுத்தப்பட்டது. அட்லாண்டிக் மற்றும் இந்துப் பெருங்கடல்களிலும் அன்டார்க்டிக் பிரதேசத்திலும் செல்லும் எல்லாக் கப்பல்களுடனும் இது தொடர்பு கொண்டு இவற்றின் செய்திகளை உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்ப வல்லது. ''அட்வகாட்'' என்ற தென்னாப்பிரிக்க கண்காணிப்பு முறையில் சில்வெர்மைனில் உள்ள கடற்படையின் மத்திய முறையும் டர்பனிலும் நமீபியாவில் உள்ள வோல்ஃபிஷ் பேயிலும் இருக்கும் பிரதேசக் கிளைகளும் அடங்கும். எலெக்ட்ரானிக் சாதனங்கள் தென் துருவத்திலிருந்து கடக ரேகை வரையிலான கடல் மற்றும் வான் பரப்பைக் கண்காணிக்கின்றன, பல நாடுகளை வேவு பார்க்கின்றன.

இவ்வாறாக, போர்த்தந்திர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தென்னாப்பிரிக்கக் குடியரசு ஏகாதிபத்தியக் கோட்டையாக மாற்றப்பட்டுள்ளது. இங்கே "மேலைய பொருளாதார நலன்களைப்" பாதுகாக்கும் பொறுப்பும் இதன் மீதே சுமத்தப்பட்டுள்ளது. தென்னாப்பிரிக்கக் குடியரசு மற்றும் நமீபியாவின் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கும் பன்னாட்டு கார்ப்பொரேஷன்கள் தெற்கு ஆப்பிரிக்காவின் இயற்கைச் செல்வங்களைச் சுரண்டுவதன் மூலம் கொள்ளை லாபம் அடிக்கின்றன. "டெய்லி நேஷன்" என்ற நைஜீரிய பத்திரிகையின் செய்திகளின்படி தென்னாப்பிரிக்கக் குடியரசில் 700 பிரிட்டிஷ், 540 அமெரிக்க, 465 மேற்கு ஜெர்மானிய கார்ப்பொரேஷன்கள் ஆழமாக வேரூன்றியுள்ளன. அமெரிக்க வங்கிகள் மட்டுமே தென்னாப்பிரிக்காவில் 2 பில்லியன் டாலர்களை முதலீடு செய்துள்ளன. இது உஷ்ண மண்டல ஆப்பிரிக்காவில் உள்ள அமெரிக்க முதலீடுகளில் பாதியாகும்.

விடுதலைக்கான நமீபிய மக்களின் போராட்டமும் தென்னாப்பிரிக்காவின் உள்ளே மக்கள் நடத்தும் போராட்டமும் வலுத்து வரும் போது தன் "நலன்களைக்" காப்பாற்றிக் கொள்வதற்காக அமெரிக்காவும் இதன் நேட்டோ கூட்டாளிகளும் நிறவெறி ஆட்சியை வலுப்படுத்த, முதலாவதாக இதன் இராணுவப் பலத்தைப் பெருக்க முயலுகின்றன. ஐ. நா. சபையின் எல்லாத் தீர்மானங்களையும் மீறி இவை

நிறவெறியர்களுக்கு ஆயுதங்களையும் போர்த் தளவாடங்களையும் தொடர்ந்து சப்ளை செய்கின்றன.

சமீப ஆண்டுகளின் அனுபவம் காட்டும்படி மேலைய நாடுகளின், முதலாவதாக அமெரிக்காவின் மௌனமான ஆதரவைப் பயன்படுத்தி தென்னாப்பிரிக்கக் குடியரசு தென்னாப்பிரிக்க பிரதேசத்திலும் இந்துப் பெருங்கடல் பகுதியிலும் தன் ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி வருகிறது. நிறவெறியர்களும் இவர்களின் கூலியாட்களும் சட்டவிரோதமாக நமீபியாவை ஆக்கிரமித்துள்ளனர், அங்கோலாவின் கணிசமான பரப்பைப் பிடித்து வைத்துள்ளனர், எல்லையோர அரசுகளுக்கு எதிராகச் செயல்படும் குண்டர் கும்பல்களை உருவாக்கி அனுப்புகின்றனர் என்பனவற்றை நினைவு கூர்வதே போதுமானது. தென்னாப்பிரிக்க உளவு ஸ்தாபனங்கள்தான் சி. ஐ. ஏ. வுடன் சேர்ந்து 1981இல் சேய்ஷெல் தீவுகளில் அரசைக் கவிழ்த்து அ. ரேனேயின் முற்போக்கு அரசாங்கத்தை முறியடிக்க முயன்றன.

ஆப்பிரிக்காவின் தெற்கேயும் அட்லாண்டிக் மற்றும் இந்துப் பெருங்கடல்களின் தெற்குப் பகுதியிலும் மேலைய நாடுகளின், குறிப்பாக அமெரிக்க நலன்களைப் பாதுகாக்கும் முக்கிய சக்தியாக பிரிட்டோரியா விளங்குகிறது.

தென்கிழக்கு ஆசியாவில் என்ன நடக்கிறது தெரியுமா?

இங்கே ஒரு சில ஆசியான் அரசுகளின் மீது ஆயுத சப்ளை உடன்படிக்கைகளைத் திணிப்பதிலும் உடனடியாக மறு ஆயுதந்தரித்து, இராணுவத்தை நவீனப்படுத்துவதன் ''அவசியத்தை'' இவை நம்புமாறு செய்வதிலும் வாஷிங்டன் வெற்றி பெற்றது.

அணு ஆயுதத்தை ஏந்திச் செல்ல வல்ல "F-16" ரக விமானங்களை அளிப்பதற்காக மொத்தம் 10 பில்லியன் டாலர் ஒப்பந்தம் சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் மீது திணிக்கப்படுகிறது.

போர்த்தந்திர முக்கியத்துவம் உடைய மலாக்க ஜலசந்தியைக் கண்காணிக்கும் சிங்கப்பூர் AWACS சாதனங்களுடன் கூடிய வேவு விமானங்களையும் தரை ஆதரவு நிலையங்களையும் "F-16" ரக நவீன போர் விமானங்களையும் அமெரிக்காவிடம் வாங்குகிறது.

தாய்லாந்திடம் ஏற்கெனவேயுள்ள 60 டாங்கிகளுடன் சேர்ந்து 40 "M-48" ரக அமெரிக்க டாங்கிகள் வழங்கப்படும். 1987 இலிருந்து 16 "F-16" ரக விமானங்கள் வழங்கப்படலாம். "F-16" ரக விமானங்களை வாங்குவதில் இந்தோனேசியாவும் அக்கறை கொண்டுள்ளது.

மலேசியாவும் தன் விமானப்படையை நவீனப்படுத்த திட்டமிடுகிறது.

இப்பகுதியில் பிலிப்பைன்ஸ் மீது அமெரிக்கா

தனிக் கவனம் செலுத்துகிறது. இங்கே 16 அமெரிக்க இராணுவத் தளங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு தளங்கள் (சுபிக் பேயில் உள்ள கடற்படைத் தளமும் கிளார்க் ஃபீல் டில் உள்ள விமானப்படைத் தளமும்) போர்த் தந்திர முக்கியத்துவமுடையவை. 13வது விமா னப்படை டிவிஷனும் பசிபிக் பெருங்கடலில் ஹவாய்த் தீவுகளில் உள்ள அமெரிக்க விமானப்படைத் தலைமைக்குக் கட்டுப்பட்ட ஒரு சில சண்டை விமான யூனிட்டுகளும் கிளார்க் ஃபீல்டில் உள்ளன. சுபிக் பேய் — சப்ளை மையம், அமெரிக்காவின் 7வது கப்பற்படை கப்பல்களைப் பழுது பார்க்கு மிடம். இங்கே 7,500 அமெரிக்கப் போர் வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் உள்ள னர்.

**ஆசியான்** நாடுகளுக்கு ஆயுதங்களை விற் பதன் மூலம் இவற்றை தன் இராணுவ வட் டத்தினுள் இழுக்கவும் இந்தக் கூட்டிலுள்ள நாடுகளின் ஆயுதங்களை ஒருவகைப்படுத்தவும் அமெரிக்கா விரும்புகிறது. இது தவிர, கிளார்க் ஃபீல்டில் உள்ள அமெரிக்க விமானப்படைத் தளத்தில் **ஆசியான்** நாடுகளின் விமானப்படை விமானிகளைப் பயிற்றுவிக்கவும் நடவடிக் கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்படுகின்றன.

**ஆசியான்** நாடுகளில் அமெரிக்கப் போர்த் தளவாட உற்பத்தியை ஒழுங்கமைக்கவும் அமெரிக்கா முயலுகிறது. உதாரணமாக, சிங்கப் பூரில் “C-130” ரக அமெரிக்க நவீன போக்குவரத்து விமானத்தைக் கட்டும் தொழிற்

சாலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. உத்தப்பா வோவில் உள்ள தாய்லாந்து விமானப்படைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ள அமெரிக்க வேவு விமானங்களைப் பழுது பார்ப்பதும் இவற்றைப் பராமரிப்பதும் இங்கேயே நிறைவேற்றப் படுகின்றன. இவ்வாறாக இப்பிரதேசத்தில் அமெரிக்க ஆதரவு இராணுவக் கூட்டை முடுக்கி விடுவதற்கான அனுகூலமான சூழ்நி லைகளை ஏற்படுத்த வாஷிங்டன் சகல விதங் களிலும் முயலுகிறது.

அமெரிக்க அணு ஆயுதத்தையும் இதை ஏந்திச் செல்லும் சாதனங்களையும் (உலாவு ராக்கெட்டுகள் உட்பட) தென் கிழக்கு ஆசியாவில் வைக்கத் திட்டமிடப்படு கிறது.

பெண்டகனின் ஏராளமான இராணுவ நூதுவர்கள் **ஆசியான்** நாடுகளின் அரசாங் கங்களின் மீது நிரந்தரமான, செயல் முனைப்பான நிர்ப்பந்தம் செலுத்து கின்றனர்.

சுதந்திரமடைந்த புரூனை 1984 ஜனவரி துவக்கத்திலிருந்து இக்கூட்டின் 6வது உறுப்பு நாடாகியது. ஸ்ரீலங்கா இதில் சேரும் தன் முயற்சிகளைக் கைவிடவில்லை. ஸ்ரீலங்காவில் உள்ள திரிகோணமலை துறைமுகம் பெண் டகனைக் கவருகிறது, இங்கேயுள்ள வசதி யான குறுங்குடாவில் ஒரு முழு கப்பற்படையே நிற்கலாம். இதுதான் இந்துப் பெருங்கடலிலேயே மிகச் சிறந்த இயற்கைக் கப்பல் துறையாகும். இதைப் பெற அமெரிக்கா நீண்ட காலமாக

முயன்று வந்துள்ளது. ஆனால் பொதுமக்களின் நிர்ப்பந்தத்தால் இங்குள்ள 99 எண்ணெய் வைக்குமிடங்கள் உட்பட (இவை ஒவ்வொன்றின் அளவும் 10,000 கன மீட்டர்கள்) திரிகோணமலையை சர்வதேச குழுமத்திற்கு ஸ்ரீலங்கா வழங்கியுள்ளது. ஆனால் இதற்கு, திரிகோணமலையின் மீதான தன் கோரிக்கைகளை வாஷிங்டன் விட்டுக் கொடுத்து விட்டது என்று பொருளாகாது. இந்தியப் பத்திரிகைகளின் செய்திகளின்படி இக்குழுமத்தின் கம்பெனிகளில் ஒன்றாகிய, சிங்கப்பூரைச் சேர்ந்த ''அரோலெயும்'' அமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளது, ''கோஸ்டல் கார்ப்பொரேஷன் ஆப் பெர்மூட்'' என்ற அமெரிக்கக் கம்பெனியின் ஏஜெண்டாகும்; இன்னொரு கம்பெனியாகிய, ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த ''திரதிநாப்த்'' பாகிஸ்தானின் கப்பல் பணமுதலையுடன் நெருக்கமாகத் தொடர்புடையதாகும். மேற்கூறிய குழுமத்தின் மூன்றாவது உறுப்பாகிய மேற்கு ஜெர்மனி கம்பெனி கடல் வழியே எண்ணெய் எடுத்துச் செல்கிறது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது திரிகோணமலை துறைமுகம் இந்துப் பெருங்கடலின் வழியாக தொலை கிழக்கிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் சென்ற முக்கியக் கடல் மார்க்கங்களில் பிரிட்டிஷ் கடற்படைத் தளமாகப் பயன்படுத்தப்பட்டது என்பது தெரிந்ததே. திரிகோணமலை துறைமுகத்தை நவீன

மயமாக்கும் திட்டங்கள் உள்ளன. இதன் பின் இங்கே விமானந்தாங்கிக் கப்பல்கள் வரலாம்.

இந்தியப் பத்திரிகைகளின் செய்திகளின்படி ஸ்ரீலங்காவில் எரிபொருள் சேமிப்புகளை வைத்திருக்க பெண்டகன் ஏற்கெனவே உரிமையைப் பெற்று விட்டது, அமெரிக்கப் போர்க்கப்பல்களின் மாலுமிகள் தீவின் துறைமுக உபகரணங்களைப் பயன்படுத்த அனுமதியைப் பெற்றுள்ளனர்.

இப்பிரதேசத்தில் வாஷிங்டன் சீர்குலைவு நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. இங்கே (சிங்கப்பூரில் உள்ள நியூஜிலாந்து இராணுவ பட்டாலியனின் படைத் தலைமையகத்தில்) ஆஸ்திரேலிய-நியூஜிலாந்து இராணுவ வேவு இலாக்கா என்றழைக்கப்படும் வேவு ஸ்தாபனம் உள்ளது. இது சேகரிக்கும் தகவல்கள் ஆஸ்திரேலியாவின் வழியாக சி. ஐ. ஏ.யை அடைகின்றன. கிளார்க் ஃபீல்ட் தளத்தில் சி. ஐ. ஏ.யின் பிரதேசத் தலைமையகம் உள்ளது.*

அன்சூஸ் என்ற இராணுவ-அரசியல் கூட்டு (இதில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகள் உள்ளன) 30 ஆண்டுகளுக்கும் முன்னதாகத் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வளவு காலமாக இது ஆசியாவில் அமெரிக்கக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் சாதனமாக இருந்து வந்துள்

---

* பிராவ்தா, *26.04.84.* (ருஷ்ய மொழியில்.)

ளது. ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து மக்களின் தேசிய நலன்களுக்கு மாறாக இந்நாடுகள் வியட்நாமில் நடந்த கீழ்த்தரமான யுத்தத்தில் இழுக்கப்பட்டன என்பதை நினைவு கூர்வதே போதுமானது. ஆக்கிரமிப்பு நோக்குடைய சீட்டோ இராணுவ-அரசியல் கூட்டை ஏற்படுத்துவதில் அன்சூஸ் கணிசமான பங்காற்றியது.

ஆஸ்திரேலியாவில் சுமாராக 30 அமெரிக்க இராணுவ அமைப்புகள் உள்ளன. நார்த் வெஸ்ட் கேய்ப், பைன் கேப், நூர் ருன்சார் ஆகியவை இவற்றில் மிகப் பெரியவை. இவை எலெக்ட்ராணிக் வேவுத் தளங்களும் தகவல் தொடர்புத் தளங்களுமாகும். இவை பசிபிக் பெருங்கடலிலும் இந்துப் பெருங்கடலிலும் உள்ள அணு ஆயுதத்துடன் கூடிய அமெரிக்கக் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், தளங்களுடன் தொடர்பு கொள்கின்றன.

அன்சூஸ் கூட்டில் ஆஸ்திரேலியாவின் பங்கேற்பு இதில் மட்டும் அடங்கியிருக்கவில்லை. அணு ஆயுதமேந்திய "B-52" ரக அமெரிக்கக் குண்டுவீச்சு விமானங்களுக்கும் இவற்றிற்கு பெட்ரோல் அளிக்கும் விமானங்களுக்கும் (இவை இந்துப் பெருங்கடலின் மேல் பயிற்சிப் பறத்தல்களையும் கண்காணிப்புப் பறத்தல்களையும் நடத்துகின்றன) டார்வினில் இறங்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் போர்க்கப்பல்கள் ஆஸ்திரேலியத் துறைமுகங்களுக்கு முறையாக வருகின்றன.

இது பழுது பார்க்கும் வேலைகளை முடித்துக் கொள்ளவும் சேமிப்புகளைப் பெறவும் மாலுமி களின் ஓய்விற்கும் வாய்ப்பளிக்கிறது. எதிர் காலத்தில், அமெரிக்கத் ''துரிதத் தாக்குதல் படைகளுக்குத்'' தேவையான தளவாடங்களை சேமித்து வைக்கவும் இந்துப் பெருங்கடலில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் படையிறக்க, மற்ற வகையான பயிற்சிகளுக் கான தளமாகவும் மேற்கு ஆஸ்திரேலியத் துறைமுகங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப் படுகிறது.

ரீகன் நிர்வாகம் வெள்ளை மாளிகைக்கு வந்ததையடுத்து அமெரிக்க-ஆஸ்திரேலியத் தொ டர்புகள் மேற்கொண்டு வளர்ந்தன. ஆஸ்தி ரேலியாவின் வடக்கு மற்றும் மேற்குக் கரை யில் உள்ள டார்வின், லிர்மோன்த், நார்த் வெஸ்ட் கேய்ப், கோக்பெர்ன் சவுன்ட் போன்ற இராணுவத் தளங்களை அமெரிக்கா பயன்படுத்துவதோடு கூட மேற்குக் கரையில் புதிய அமெரிக்க கடற்படைத் தளத்தைக் கட்டுவது குறித்தும் மற்றும் இப்பிரதேசத்தில் உள்ள இராணுவ அமைப்புகளை விரிவுபடுத்து வது பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது. உதார ணமாக, ''ஸ்டெர்லிங்'' (கோக்பெர்ன் சவுன்ட்) கடற்படைத் தளத்தை நவீனப்படுத்த 30 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர்கள் ஒதுக்கப் படுகின்றன. இது புனரமைக்கப்பட்ட பின் இங்கே 10,000 அமெரிக்கப் போர்வீரர்கள் தங்கலாம். இத்தளத்திற்கு மாதந்தோறும் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் வருகின்றன,

மேற்குக் கரையில் ஆஸ்திரேலிய, அமெரிக்கக் கடற்படைகளின் கூட்டுப் பயிற்சிகள் முறை யாக நடக்கின்றன.

இப்பிரதேச இராணுவங்களுக்கான பயிற்சி மையம் என்ற வகையிலும் ஆஸ்திரேலியாவின் பங்கு பெரியது. ஆண்டுதோறும் 1,300 பேர்கள் ஆஸ்திரேலிய இராணுவக் கல்லூரிகளில் இராணுவக் கல்வி பெற சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர், இவர்களில் நான்கில் மூன்று பங்கினர் **ஆசியான்** நாடுகளைச் சேர்ந்தவர் கள். இப்பிரதேச நாடுகளின் இராணுவங்களை நவீன இராணுவத் தொழில்நுட்பத்தின் சராசரி மட்டம் வரை உயர்த்தும் கடமை முன்வைக்கப்படுகிறது. பல ஆஸ்திரேலிய ஆயுத தளவாடங்கள் சில ஆசிய நாடு களின் இராணுவங்களால் பயன்படுத்தப்படு கின்றன.

**அன்சூஸ்** கூட்டின் நடவடிக்கையை சகல விதங்களிலும் தீவிரப்படுத்த ரீகன் நிர்வாகம் முடிவெடுத்தது. இந்த விஷயத்தில், 1983 கோடையில் வாஷிங்டனில் நடந்த **அன்சூஸ்** அமர்வு குறிப்பிடத் தக்கது. இந்த அமர்வின் இறுதி ஆவணத்தில், பிரதேச விவகாரங்களில் ஜப்பானின் பங்கை மேற்கொண்டு அதிகப்படுத் தவும் **ஆசியான்** நாடுகளின் அரசியல் மீது **அன்சூசின்** செல்வாக்கை அதிகப்படுத்தவும் கோரும் அறைகூவல்கள் அடங்கியுள்ளன, இந்துப் பெருங்கடலில் ''ஜீவாதார முக்கியத் துவம் வாய்ந்த'' பொருளாதார நலன்கள் மற்றும் ''பாதுகாப்பு'' நலன்கள் சம்பந்தமான

அமெரிக்கக் கோரிக்கைகள் திரும்பக் கூறப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியாவையும் நியூஜிலாந்தையும் தன் இராணுவத் தயாரிப்பு வட்டத்தினுள் மேலும் இழுப்பதற்காக வாஷிங்டன் இந்த அமர்வைப் பயன்படுத்திக் கொண்டது. **அன்சூஸ்** நாடுகள் ஒவ்வொன்றும் தன் வசமுள்ள மூலாதாரங்கள் அனுமதியளிக்கும் வரம்புகளில் தன் பாதுகாப்பிற்கு வகை செய்து கொள்ள வேண்டும் எனும் பத்தியை அமர்வின் இறுதி அறிக்கையின் வாசகத்தில் சேர்ப்பதில் அமெரிக்கா வெற்றி பெற்றது. அதாவது, ஆஸ்திரேலியாவும் நியூஜிலாந்தும் ஆயுதங்களை உற்பத்தி செய்யவும் வாங்கவும் அதிகபட்சம் நிதிகளை ஒதுக்க வேண்டும், அமெரிக்காவின் இராணுவத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தீவிர உதவியளிக்க வேண்டும் என்று இதற்குப் பொருள்.

இதற்கு கான்பெர்ராவில் எப்படிப் பதில் சொன்னார்கள்? **அன்சூஸ்** மகாநாட்டிலிருந்து திரும்புகையில் ஆஸ்திரேலிய அயல் விவகாரத் துறை அமைச்சர் ஹேய்டன் ஹாங்காங்கில் தங்கிய போது பின்வருமாறு அறிவித்தார்: "... இப்பிரதேசத்தில் (அதாவது இந்துப் பெருங்கடலில்) எமது நடமாட்டத்தை எம்மால் விரிவுபடுத்த இயலும். கடல் மார்க்கங்களையோ எண்ணெய் இருப்புகளையோ பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட எதையும் நாங்கள் முன்மொழியவில்லை. அமெரிக்கர்களைச் சாராமலேயே சுயமதிப்பு மற்றும் சுதந்திர உணர்வைப் பேணிக்காக்க நாங்கள்

விரும்புகின்றோம்.''*

அமெரிக்காவைச் சாராத இந்த ''சுய மதிப்பு மற்றும் சுதந்திரம்'' என்பது உண்மையில் எதைக் குறிக்கிறது? பின்னால் ஹேய்டன் இக்கருத்து நிலையை விரிவுபடுத்தினார். இந்துப் பெருங்கடலில் ஆஸ்திரேலியாவின் இராணுவ நடமாட்டத்தைப் பலப்படுத்தும் திட்டங்களைப் பற்றி பேசப்படுகிறது எனத் தெரிகிறது. அனேகமாக அமெரிக்காவில் ஆஸ்திரேலியாவின் இத்தகைய ''சுதந்திரத்தைக்'' கண்டு திருப்தியடைந்திருக்க வேண்டும். ஏனெனில் ஹேய்டனின் வார்த்தைகளின்படி ஆஸ்திரேலியா இந்துப் பெருங்கடலில் தன் இராணுவ நடமாட்டத்தை, இப்பிரதேசத்தின் வழியாகச் செல்லும் பெரும் அமெரிக்க கடற்படை யூனிட்டுகளின் பின் மெதுவாக நகரும் ஒரு வித இழுவைக் கலமாக சிந்திக்கவில்லை.

அதாவது சம்பிரதாயப்படி ''சுதந்திரமாக'' இயங்கப் போகும் ஆஸ்திரேலிய கடற்படைக்கு அமெரிக்கக் கடற்படையின் சில பணிகள் அளிக்கப்படுகின்றன. சாராம்சத்தில் அமெரிக்காவின் உலகளாவிய போர்த்தந்திர நிறைவேற்றத்திற்கு ஆஸ்திரேலியா தன் பங்கையளிக்கிறது.

அன்சூசின் நடவடிக்கை மண்டலத்தை இப்படி விரிவுபடுத்துவது என்பது இராணுவத் தேவைகளுக்கான கூடுதல் நிதி ஒதுக்கீடுகளுக்கு

---

* *Far Eastern Economic Review*, 22.03.84.

வழிகோலும், அமெரிக்காவின் விருப்பப்படி ஏதாவதொரு பிரதேச சச்சரவில் இழுக்கப் படும் வாய்ப்பை ஏற்படுத்தும், அன்சூஸை ஆசியா, இந்துப் பெருங்கடல் மற்றும் பசிபிக் பெருங்கடலில் அமெரிக்காவின் இராணுவ-அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதை நோக்க மாகக் கொண்ட அமெரிக்கப் போர்த்தந் திரத்தின் ஆயுதமாக மாற்றும்.

அமெரிக்காவும் ஜப்பானும் உருவாக்கத் திட்டமிட்டுள்ள பசிபிக் பெருங்கடல் கூட் டமைப்பில் **அன்சூஸ்** கூட்டிற்கு முக்கியப் பங்கு அளிக்கப்படுகிறது. இக்கூட்டமைப்பில் இந்நாடுகளைத் தவிர கானடா, ஆஸ்திரே லியா, நியூஜிலாந்து, ஒரு சில லத்தீன் அமெ ரிக்க நாடுகள், **ஆசியான்** நாடுகள் மற்றும் தென் கொரியா, ஒருவேளை தைவான் ஆகி யனவும் இடம் பெறும்.

அமெரிக்காவின் இத்தகைய கொள்கையின் மீதான இப்பிரதேச மக்களின் அதிருப்தி அதிகரித்து வருகிறது. அமெரிக்காவின் மேலா திக்க நாட்டங்களுக்கு இணங்கிப் போவது என்பது தம் ஜீவாதார நலன்களுக்கு உகந் ததாக இல்லை என்பது மட்டுமின்றி இவற் றிற்கு நேரடியாக முரண்படுகிறது, பிரதேச சமாதானத்தையும் ஸ்திர நிலையையும் அச்சு றுத்துகிறது என்பதையும் இம்மக்கள் மேன் மேலும் தெளிவாகப் புரிந்து வருகின்றனர். அதாவது, இப்பிரதேசத்தில் அமெரிக்காவின் கொள்கைக்கு அதன் கூட்டாளிகள் மத்தியில் கூட முன்பிருந்ததைப் போன்ற நிபந்தனையற்ற

ஆதரவு இல்லை. இதற்கான சான்றுகள் பல உள்ளன.

உதாரணமாக, 1984 செப்டெம்பரில் நடைபெற்ற நியூஜிலாந்தின் ஆளும் கட்சியாகிய லேபர் கட்சியின் தேசிய மகாநாடு அணு ஆயுத வல்லரசுகளுடனான எல்லா இராணுவக் கூட்டுகளில் இருந்தும், முதலாவதாக அன்சூஸ் கூட்டிலிருந்து வெளியேறுமாறு கோரியது. அமெரிக்காவின் முன்முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட இக்கூட்டு முற்றிலும் இதன் நலன்களுக்கு மட்டுமே உகந்ததாக உள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. கிராய்ஸ்ட் சேர்ச் நகரில் உள்ள விமானத் தளத்தை அகற்றுமாறும் அணு ஆயுத வல்லரசுகளுடனான (அதாவது அமெரிக்கா, பிரிட்டனுடன் நடக்கும்) இராணுவ ஒத்திகைகளில் பங்கேற்காதிருக்குமாறும் மகாநாடு கோரியது.

1984 கோடையில் ஆட்சிக்கு வந்ததும் நியூஜிலாந்தின் லேபர் அரசாங்கம் அணு ஆயுத மேந்திய அமெரிக்கப் போர்க் கப்பல்கள் தன் துறைமுகங்களுக்கு வருவதையும் நாட்டின் நீர்பரப்பினுள் நுழைவதையும் உடனடியாகத் தடை செய்தது என்பதை நினைவு கூர்ந்தால் நாட்டின் சமுதாய உணர்வில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டு வருவது கண்கூடு.

இம்மாற்றங்கள் ஆஸ்திரேலியாவிலும் நடைபெறுகின்றன. அணு ஆயுதமேந்திய கப்பல்கள் நாட்டின் நீர்பரப்பிற்குள் வருவதைத் தடை செய்யும் சட்ட நகல் இந்நாட்டின் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

பசிபிக் பெருங்கடலின் தென் பகுதியில் உள்ள தீவு அரசுகளின் கூட்டம் 1984 இலையுதிர்க் காலத்தில் இங்கே அணு ஆயுதமில்லா மண்டலத்தை ஏற்படுத்தும் ஆலோசனையை ஆதரித்ததும் குறிப்பிடத் தக்கது.

இக்கூட்டம் முடிவடைந்ததுமே **ஆசியான்** நாடுகள் தென்கிழக்கு ஆசியாவை அணு ஆயுதமற்ற மண்டலமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று கோரியது குறிப்பிடத் தக்கது, அடையாளச் சிறப்புடையது. அமெரிக்கப் போர்த்தந்திரத்தில் இந்துப் பெருங்கடலின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளதுடன் இது நிச்சயமாக தொடர்புடையது.

அதாவது, இப்பிரதேசத்தை ஒருவிதமான பரம்பரைச் சொத்தாக மாற்றவும் இங்குள்ள நாடுகளை பெண்டகனின் இராணுவ வட்டத்தினுள் இழுக்கவும் வாஷிங்டன் செய்யும் முயற்சிகளுக்கு நேர் எதிரான போக்கு கண்கூடு. இப்போக்கு அணு ஆயுத யுத்தத்திற்கான தயாரிப்பு சம்பந்தமான அமெரிக்க நிர்வாகத்தின் கொள்கை குறித்த பொதுமக்களின், இந்நாடுகளிலுள்ள ஒரு சில அரசாங்கங்களின் கவலைக்கான சான்றாகும். இந்த யுத்தத்தில் அமெரிக்க போர்த்தந்திரவாதிகள் இந்நாடுகளை அணு ஆயுத பணயக் கைதிகளாக மாற்றி இவற்றை இராணுவ நடவடிக்கைக் களங்களாக ஆக்குகின்றனர். இப்போக்கு அதிகாரபூர்வமான வாஷிங்டனுக்கு ஏற்புடையதாக இல்லை என்பது தெளிவு. இது நிர்ப்பந்தத்தையும் அச்சுறுத்தலையும் பதிலாகத்

தருகிறது. சில இடங்களில் உரக்க கூச்சலிட்டும் சில இடங்களில் வாக்குறுதிகளைத் தந்தும் இது முன்போன்றே தன் கூட்டாளிகள் தன் கொள்கைக்குக் கட்டுப்பட்டு இதைப் பின்பற்றுபவர்களாக இருப்பதைக் காணவும் இந்துப் பெருங்கடலின் இப்பகுதியில் நம்பகரமான துணை நாடுகளைப் பெறவும் முயலுகிறது.

ரீகன் நிர்வாகம் மேற்கொண்டுள்ள ''புதிய அணு ஆயுதப் போர்த்தந்திரம்'' பசிபிக் மற்றும் இந்துப் பெருங்கடல்களில் அமெரிக்காவின் இராணுவ-தொழில்நுட்ப வாய்ப்புகளின் கூட்டுச் செயலாக்கத்தை முன்னனுமானிக்கிறது. உதாரணமாக, ஆசிய-பசிபிக் பெருங்கடல் பிரதேசத்தில் உள்ள சக்திகளைக் கொண்டு (அமெரிக்காவின் 7வது கப்பற்படைக் கப்பல்களின் பங்கேற்புடன்) இந்துப் பெருங்கடலில் இராணுவ நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப வசதிகளை அளிப்பதை இது குறிக்கிறது. எனவே அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் பிரதேச முக்கியத்துவ அளவுகோலில் இரண்டு பெருங்கடல்கள் சந்திக்கும் இடத்தில் உள்ள தென்கிழக்கு ஆசியாவின் முக்கியத்துவம் கூடியுள்ளது. கடல் மற்றும் வான்படை யூனிட்டுகளைத் தங்கு தடையின்றி அனுப்புவதில் இப்பிரதேசத்தில் உள்ள ஜலசந்திகளின் (எனவே இவற்றைக் கண்காணிக்கும் இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின்) பங்கும் இந்துப் பெருங்கடலுக்குத் ''துரிதத் தாக்குதல் படைகளை'' அனுப்பும் இடைநிலை மையங்களாகப்

புதிதாகப் பயன்படுத்தப்படும் பிலிப்பைன்ஸ் இராணுவத் தளங்களின் பங்கும் அதிகரித்தன. எனவேதான் ரீகன் நிர்வாகம், பசிபிக் மற்றும் இந்துப் பெருங்கடல் பகுதிகளில் அமெரிக்கா வின் இராணுவப் போர்த்தந்திரத்தை நிறை வேற்றுவதில் **ஆசியான்** நாடுகளை ஈடுபடுத்து வதற்காக தென்கிழக்கு ஆசியாவில் தன் இராணுவக் கொள்கையைப் பல வழிகளில் தீவிரப்படுத்தியது. இதில் ''சோவியத் அபா யம்'' என்ற பொய்யான கருத்து தீவிரமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கை யில் தென்படும் நடுநிலைப் போக்குகள் (இவை ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு அளவிலும் வடிவத்திலும் இருந்து வந்துள்ளன) 1971ஆம் ஆண்டிலேயே பிரகடனப்படுத்தப்பட்ட ''தென் கிழக்கு ஆசியாவில் சமாதானம், விடுதலை, நடுநிலைமை மண்டல'' கருத்தமைப்பில் பிரதிபலித்தன. ஆனால் இப்போக்குகள், ஏகாதிபத்தியத்துடனான இராணுவ-அரசியல் தொடர்புகள் பலப்படுத்தப்பட்டதால் படிப் படியாக வெளியேற்றப்பட்டன. தென்கிழக்கு ஆசியாவிலும் இந்துப் பெருங்கடலிலும் என்றா வது எதிர்காலத்தில் ''சமாதான மண் டலத்தை'' ஏற்படுத்துவதை சம்பிரதாயமாக ஆதரிக்கும் **ஆசியான்** நாடுகள் உண்மையில் இதற்கு வழிகோலும் கொள்கையை எப்போ துமே பின்பற்றுவதில்லை.

உதாரணமாக, இந்தோனேசியா அமெரிக்கா வுடனான இராணுவ-அரசியல் தொடர்பு

களைத் தீவிரமாக வளர்க்கிறது, அமெரிக்கச் சந்தையில் ஆயுதங்களை வாங்குகிறது. ஆசியான் அரசுகள் குறிப்பிட்ட அளவு ''தேசிய மற்றும் பிரதேச எதிர்ப்புச் சக்தியை'' அடையும் வரை இந்நாடுகளின் பரப்பில் அமெரிக்கத் தளங்கள் இருக்க வேண்டுமென இது நடைமுறையில் கோருகிறது.

தென்கிழக்கு ஆசியாவில் ''சமாதான மண்டலம்'' என்ற கருத்தை முன்மொழிந்த மலேசியா, அமெரிக்க இராணுவ நடமாட்டம் பற்றிய பிரச்சினை சார்பான அணுகுமுறையில் இந்தோனேசியாவைப் போன்ற பாதையைக் கடந்து வந்து இந்நாட்டின் கருத்தையொத்த நிலையை மேற்கொள்கிறது என்றால், சிங்கப்பூர் முற்றிலும் வேறுவிதமாக நிலவரத்தை மதிப்பிடுகிறது. இது ''சரிசம நிலையான நடமாட்டம்'' அல்லது பிரதேசத்தில் வல்லரசுகளின் ''பன்முக நுழைவுரிமை'' என்ற கருத்தமைப்பை முன்வைத்தது. நடைமுறையில் இது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையின் பக்கமான தெட்டத்தெளிவான சாய்தலைக் குறிக்கிறது. இந்தோனேசியா மற்றும் மலேசியாவிற்கு மாறாக சிங்கப்பூர் ''சமாதான மண்டலம்'' எனும் கருத்தை சம்பிரதாயமாக அங்கீகரித்தாலும் 70ஆம் ஆண்டுகளின் துவக்கத்திலேயே, தென்கிழக்கு ஆசியாவில் அமெரிக்க இராணுவத் தளங்களை அப்படியே வைத்திருக்க வேண்டும் என்பதற்கு ஆதரவாகக் கருத்துரைத்தது, இந்நிலையை இன்றும் அது பின்பற்றுகிறது. இராணுவ-

அரசியல் துறையில் அமெரிக்காவுடன் உள்ள தீவிர ஒத்துழைப்பை சிங்கப்பூர் வளர்க்கிறது: இது அமெரிக்கக் கடற்படையுடன் ஒத்திகைகளில் பங்கேற்கிறது, இந்துப் பெருங்கடலின் மீது வேவு பறத்தல்களை நடத்த தேன்கா எனும் இடத்தில் உள்ள விமானப்படைத் தளத்தை அமெரிக்க விமானப்படைக்கு அளித்துள்ளது, புதிய, 5வது அமெரிக்கக் கப்பற்படையைத் தோற்றுவிப்பதற்கு ஆதரவாகக் கருத்துரைக்கிறது.

அமெரிக்க இராணுவ உதவியையும் (இது 1981இல் 50 மில்லியன் டாலர்களாகவும் 1982இல் 79.2 மில்லியன் டாலர்களாகவும் இருந்ததெனில் 1983இல் 93 மில்லியன் டாலர்களாகியது) அமெரிக்காவின் ‘‘கர்ப்பூன்’’ ராக்கெட் சாதனங்களின் சப்ளையையும் பயன்படுத்தி தாய்லாந்து அமெரிக்காவுடனான உறவுகளைப் பலப்படுத்துகிறது, இராணுவ ஒத்துழைப்பைப் பெருக்குகிறது. தென் சீனக் கடலில் கூட்டு கடற்படை ஒத்திகைகள் முன்னை விட அடிக்கடி நடைபெறுகின்றன, இவை அளவில் பெரியவையாகியுள்ளன. மேலைய நாட்டுப் பத்திரிகைகளின்படி, டியகோ கார்சியா தீவில் உள்ள தளத்துடன் செயல்முறை தகவல் தொடர்புகளை நிறைவேற்றுவதற்காக அந்தமான் கடலின் கரையில் ஒரு புதிய பெரும் கடற்படைத் தளக் கட்டுமானம் ஆரம்பமாகியுள்ளது.

இந்துப் பெருங்கடலின் பக்கவாட்டுப் பகுதிகளில் நிலவரம் இம்மாதிரியாக உள்ளது.

சரி, இந்துப் பெருங்கடலில் நிலவரம் எப்படி யுள்ளது? இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக ஆக்கும் போராட்டத்தில் இங்குள்ள நாடுகளின் நிலை என்ன? இவற்றின் பிரகடனங்களும் நோக்கங்களும் யதார்த்த நடவடிக்கைகளும் எப்படிப்பட்டவை?

இப்பகுதி முழுவதன் ஒருவித மையமாகிய பாரசீக வளைகுடாவையும் மற்றும் செங் கடலையும் எடுத்துக் கொண்டால் இங்கே நாடுகளின் நிலை ஒரே மாதிரியானதல்ல. உதாரணமாக, ஓமான் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்க சம்பிரதாய ரீதியாக ஆதரவளிக்கிறது. ஆனால் உண்மையில் இது அமெரிக்க இராணுவ நடமாட்டம் அதிகரிப்பதை ஒப்புக் கொள்வது மட்டுமின்றி இதற்கு உதவவும் செய்கிறது: தளங்கள், போர்க் கப்பல்கள் நிற்பதற்கான துறைகள், கிடங்குகள் போன்றவற்றை அளிக்கிறது, அமெரிக்காவுடன் கூட்டாக இராணுவ ஒத்திகைகளில் பங்கேற்கிறது.

இது மேலைய நாடுகளை நிதி ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் சார்ந்திருப்பதானது சர்வதேச அரங்கங்களில் மேலைய நாடுகளுக்கு ஆதரவான ‘‘லாபியாக’’ இருக்கும்படி கூட சில சமயங்களில் இதைக் கட்டாயப்படுத்துகிறது. உதாரணமாக, 1983 மார்ச்சில் டெல்லியில் நடைபெற்ற கூட்டுச் சேரா அரசுகளின் தலைவர்களுடைய 7வது மகாநாட்டில் ஓமான் மற்றும் சில நாடுகளின் வற்புறுத்தலால், மகாநாட்டின் இறுதி ஆவணத்தில் பிரதேசப்

பாதுகாப்பின் உடனடியான, மிகக் கடும் பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிட்ட பகுதியில் இந்துப் பெருங்கடலில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகாதிபத்தியக் கொள்கையைப் பற்றி முற்றிலுமாகக் குறிப்பிடப்படவேயில்லை.

சவுதி அரேபியா, பஹ்ரேய்ன், ஐக்கிய அரபு எமிரேட்டுகள், கட்டார் போன்ற நாடுகள் நிதி ரீதியாக (இராணுவ ரீதியாக இல்லை) மேலைய நாடுகளைக் குறைவாகவே சார்ந்திருப்பதால் பிரதேசக் கொள்கை பற்றிய பிரச்சினைகளில் அதிகச் சுதந்திரம் உடையவையாக உள்ளன. ஆனால் இங்கும், குறிப்பாக உலகளாவிய மட்டத்திலும் பல சமயங்களில் இந்நாடுகளின் கொள்கை அமெரிக்கப் போர்த் தந்திரத்திற்கு முரண்பாடானதாக இல்லை.

1981 வசந்தத்தில், பாரசீக வளைகுடா அரபு நாடுகளின் ஒத்துழைப்புக் கவுன்சில் தோற்றுவிக்கப்பட்ட போது முக்கிய சர்வதேச பிரச்சினைகளில் இவற்றின் நிலைகளை ஓரளவு சமப்படுத்த முடிந்தது. ஆனால் இதுவும் கூட தனிப்பட்ட பிரச்சினைகளில், குறிப்பாக அமெரிக்காவுடன் நெருங்கி வரும் விஷயத்தில் கருத்து மாறுபாடுகளை அகற்றவில்லை. ஓமான் நாடு மேற்கூறிய கவுன்சிலின் விதிமுறைகளுக்கு மாறாக, 1979இல் அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட இருதரப்பு இராணுவ உடன்படிக்கையைப் பின்பற்றுகிறது என்றால், அமெரிக்கா ''எல்லைக்கு அப்பால்'' இருக்க வேண்டுமென சவுதி அரேபியா கோரு

கிறது. பஹ்ரேய்ன், கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்டுகள் போன்ற மற்ற நாடுகள் சவுதி அரேபியாவின் நிலையை ஆதரிக்கின்றன.

குவெய்த் ஒரு தனி நிலையை வகிக்கிறது. இது ''சம அளவில் விலகியிருக்கும்'' கொள்கையைக் கடைப்பிடிக்கும் முகமாயும் ஆயுதங்களைப் பெறும் இடங்களைப் பல்வேறாக ஆக்க முயலும் முகமாயும் சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளுடன் ஒத்துழைப்பை வளர்க்கிறது, இவ்வாறு செய்யுமாறு வளைகுடாவின் மற்ற நாடுகளுக்கு அறைகூவல் விடுக்கிறது.

பாரசீக வளைகுடா அரபு நாடுகளின் ஒத்துழைப்புக் கவுன்சிலைச் சேர்ந்த நாடுகள் ''கவுன்சிலின் துரிதத் தாக்குதல் படைகள்'' என்றழைக்கப்படுவதைத் தோற்றுவிப்பது சம்பந்தமான உடன்படிக்கைக்கு வந்தன. 1983 அக்டோபரில் இப்படைகளின் முதல் ஒத்திகைகள் நடைபெற்றன. இக்கவுன்சிலின் நாடுகள் பிரதேசத்தில் பாதுகாப்பிற்கு வகை செய்ய சொந்தச் சக்திகளை வளர்ப்பதன் மீது அதிக கவனம் செலுத்தியதானது இங்கே நேரடியான அமெரிக்க இராணுவ நடமாட்டத்தை அனுமதிக்காமலிருக்கும் நாட்டத்தைப் பிரதிபலிக்கிறது.

ஏமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு, இந்துப் பெருங்கடலைச் ''சமாதான மண்டலமாக்கும்'' கருத்தை அதிகாரபூர்வமாக ஆமோதிக்கிறது. இப்பிரதேசத்தின் பாதுகாப்பிற்கான முக்கிய அபாயம் அமெரிக்காவின் ஏகாதிபத்தியக்

கொள்கையில்தான் இருக்கிறது என்று இது கருதுகிறது, இப்பிரதேசத்தை இராணுவ கலைப்பிற்குள்ளாக்க வேண்டும், இந்துப் பெருங்கடல் சம்பந்தமான சர்வதேச மகா நாட்டை விரைவில் கூட்ட வேண்டும் என்ற சோவியத் முன்மொழிவுகளை ஆதரிக்கிறது.

தெற்கு ஆசியாவை எடுத்துக் கொண்டால் நிச்சயமாக கூட்டுச் சேரா இயக்கத்தின் தலைவனாகிய இந்தியா, சர்வபொது வான, முழுமையான ஆயுதக்கலைப்பை நிறை வேற்ற வேண்டும், இந்துப் பெருங்கடலை இராணுவ கலைப்பிற்குள்ளாக்க வேண்டும், இந்துப் பெருங்கடல் சம்பந்தமாக சர்வ தேச மகாநாட்டை உடனடியாகக் கூட்ட வேண்டும் என்பதற்காக மிகத் தொடர்ச்சி யாகப் போராடும் நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது.

உலகம் முழுவதிலும், குறிப்பாக ஆசியாவி லும் சமாதானம், பாதுகாப்பிற்கான போராட் டத்தில் இந்தியா ஒரு முக்கியக் காரணியாகும். ஆசியாவில் பதட்ட நிலை அதிகரித்து வருவது இந்தியாவிற்குப் பெரும் கவலையை ஏற்படுத்து கிறது. உலக மேலாதிக்க நோக்கங்களைக் கொண்டுள்ள ஏகாதிபத்திய வட்டங்கள்தான் பதட்ட நிலைக்குக் காரணமாகும். ‘‘புதிய இராணுவத் தளங்களின் தேட்டம், ‘துரிதத் தாக்குதல் படைகள்’ தோற்றுவிக்கப்பட்டது, தென்மேற்கு ஆசியாவிலும் மத்திய கிழக் கிலும் போர்த்தந்திர இணக்கம் என்றழைக்கப்

படுவதைத் தோற்றுவித்தது'' ஆகியன தான் ஆசியாவில் பதட்ட நிலை அதிகமான தற்கான முக்கியக் காரணங்கள் என்று 1981—1982 நிதியாண்டிற்கான அறிக்கையிலேயே இந்திய அயல்விவகாரத் துறை அமைச்சகம் கூறியிருந்தது* குறிப்பிடத் தக்கது. அதாவது, எவையெல்லாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெளிவிவகாரக் கொள்கையின் பிரிக்க இயலா அம்சமாக உள்ளனவோ அவைதான் பதட்ட நிலைக்கு முக்கியக் காரணங்களாகும்.

ஆசியா கண்டத்தில் பொது நிலவரம் கணிசமான அளவு சிக்கலடைந்துள்ள போது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு பதட்ட நிலைத் தணிவின் அவசியத்தோடும் நேரடியாக இந்தியாவின் எல்லையோரமாயும் மொத்தமாக ஆசியா முழுவதிலும் சமாதானத்தையும் ஸ்திர நிலையையும் ஏற்படுத்துவதுடனும் நெருக்க மாகத் தொடர்புடையது. தென் ஆசியப் பிரதேசத்தில் பதட்ட நிலை தூண்டி விடப்படு வதற்கும் இந்துப் பெருங்கடல் பகுதியை இராணுவமயமாக்குவதற்கும் எதிராகச் செயல் படுதல், தென்கிழக்காசியா, தென்மேற்காசியா, மத்திய கிழக்கு ஆகிய பிரதேசங்களில் அர சியல் தீர்வை அடையத் தீவிரமாகப் பாடுபடு வது ஆகியவற்றைத்தான் இந்தியத் தலைவர் கள் இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியக் கடமைகளாக முன்வைக்கின்றனர்.

---

* *Ministry of External Affairs. Government of India. Annual Report 1981-82*. N. D., 1982, p. IV.

இந்திய உபகண்டத்தில் உருவாகியுள்ள சக்திகளின் சமன்நிலையைக் குலைத்து இப்பிர தேச நாடுகளின் மீது ஆயுதப் போட்டியின் புதிய சுற்றைத் திணிக்க வாஷிங்டன் செய்யும் முயற்சிகள் இந்திய அரசியல், சமூக வட்டங் களில் ஏற்படுத்தியுள்ள கவலை முற்றிலும் இயற்கையானதும் நியாயமானதுமாகும். பாகிஸ் தானிற்கு அமெரிக்கா ஏராளமான ஆயுதங் களை இந்த நோக்கங்களுடன் வழங்குகிறது. சமீப காலமாக இந்தியா மீதான ஏகாதிபத் திய நிர்ப்பந்தம் கடுமையாக அதிகரித்துள் ளது. இந்தியாவைச் சுற்றி பகைமை வட் டத்தை ஏற்படுத்தவும் அண்டை நாடுகளுட னான இதன் உறவைக் கெடுக்கவும் வாஷிங் டன் முயலுகிறது, நாட்டின் உள்ளே பிரிவி னைவாதச் சக்திகளைத் தீவிரமாக ஆதரிக் கிறது, நாட்டின் ஒற்றுமை, பிரதேச முழு மைக்கு ஆபத்தேற்படுத்துகிறது.

நிச்சயமாக இதனால் நாட்டை அதன் சுதந்திரமான, சமாதான நாட்டமுள்ள கொள் கையிலிருந்து திசைதிருப்ப முடியாது. இந்தி யாவின் இக்கொள்கை இந்திய தேசிய நலன் களுக்கும் உலக சமாதானத்திற்கும் உகந்த தாயுள்ளது.

நவீன உலகின் முக்கிய பிரச்சினைகளில் இந்தியாவின் நிலை, வளர்முக நாடுகள் இருப்பதும் பொதுவாக உலக வாழ்வும் இன் றைய சூழ்நிலைகளில் சமாதானத்தைப் பேணிக் காப்பதை எப்படி நேரடியாகச் சார்ந்துள் ளன என்பதைப் புரிந்து கொள்வதால் நிர்ண

யிக்கப்படுகிறது. ''வளர்ச்சி, சுதந்திரம், ஆயுதக் கலைப்பு, சமாதானம் ஆகியவை ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க இயலாதவை'' என்று திருமதி இந்திரா காந்தி கூட்டுச் சேரா இயக்க நாடுகளின் 7வது மகாநாட்டில் கூறினார்.* சமாதானம் எவ்வளவுக்கெவ்வளவு உறுதியானதோ, சர்வதேச பதட்ட நிலைத் தணிவு எவ்வளவுக் கெவ்வளவு ஆழமானதோ காலனியாதிக்கப் பழமையை அகற்றவும் வளர்முக நாடுகளின் கடும் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அவ்வளவுக்கவ்வளவு அனுகூலமான சூழ்நிலைகள் உருவாகும் என்ற நம்பிக்கை தான் ஆயுதப் போட்டிக்கு எதிராயும் யுத்த அபாயத்தை அகற்றுவதற்காகவும் இந்திய அரசாங்கம் பின்பற்றும் கொள்கையின் முக்கிய உந்து சக்தியாகும். சர்வதேச பதட்ட நிலையை அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்காவின் இராணுவ வெறி கொண்ட, வெளிப்படையான ஆக்கிரமிப்புக் கொள்கை சோவியத் யூனியனை விடவும் மொத்தமாக சோஷலிச முகாம் நாடுகளை விடவும் இராணுவ மேன்மையை அடைவதை மட்டும் தன் லட்சியமாகக் கொண்டிருக்கவில்லை, இது சுதந்திர, முன்னேற்றப் பாதையில் வளர்முக நாடுகளின் முன்னேற்றத்திற்குத் தடை போடு வதையும் தன் லட்சியமாகக் கொள்கிறது

---

* *Address by Shrimathi Indira Gandhi, Prime Minister of India at the Session of the 7th Conference of Heads of State or Government of Non-Aligned Countries,* N. D., March 1983, p. 8.

என்பது இந்தியாவில் மேன்மேலும் அதிக மக்களுக்குப் புரிய ஆரம்பித்துள்ளது.

இந்துப் பெருங்கடலை மேன்மேலும் இராணுவமயப்படுத்தி வருவதானது இந்தியாவில் நியாயமான கவலையை ஏற்படுத்தியுள்ளது என்பது புரிகிறது. ஏனெனில் இது நாட்டின் தேசியப் பாதுகாப்பை நேரடியாகப் பாதிக்கிறது. இந்தியாவை மற்ற பிரதேசங்களுடனும் கண்டங்களுடனும் இணைக்கும் முக்கிய கடல், வான் மார்க்கங்கள் இந்துப் பெருங்கடலின் வழியே செல்லுகின்றன. இம் மார்க்கங்களின் பாதுகாப்பு இந்தியாவிற்கு ஜீவாதார முக்கியத்துவமுடைய ஒரு பிரச்சினையாகும். இது நாட்டின் கடல் எல்லைகளுக்கும் (இவற்றின் மொத்த நீளம் 6,000 கிலோமீட்டர்களுக்கும் கூடுதலானது), நாட்டின் முக்கிய தொழில்துறை, துறைமுக, கலாச்சார மையங்களுக்கும் முற்றிலுமாகப் பொருந்தும். ஏனெனில் இவை நேரடியாக கடற்கரையிலோ கரைக்கு வெகு அருகாமையிலோ உள்ளன. எண்ணெய் எடுத்தல், மற்ற கனிப் பொருட்களின் தேட்டம், மீன்பிடித்தல் சம்பந்தமான பரவலான திட்டங்களை இந்தியர்கள் பெருங்கடலுடன் தொடர்புபடுத்துகின்றனர். இவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் பொருளாயத நிலையை மேம்படுத்தவும் தீட்டப்பட்ட சமாதான திட்டங்கள் என்பது தெளிவு. இந்துப் பெருங்கடலை அமெரிக்கா இராணுவமயமாக்கி வருவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது

என்பது தெளிவு. ''டியகோ கார்சியா தளத்திலிருந்து ஏவப்படும் அணு ஆயுதமேந்திய ராக்கெட்டுகள் ஒரு சில நிமிடங்களிலேயே நியூடெல்லியை அடையும்'' என்று இந்திய விஞ்ஞானியும் பத்திரிகையாளருமான இமாம் ''பேட்ரியாட்'' பத்திரிகையில் எழுதுகிறார்.*

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக மாற்றவும் இப்பிரச்சினை சம்பந்தமாக சர்வதேச மகாநாட்டைக் கூட்டவும் இந்தியா உறுதியாகவும் அயராதும் போராடுகிறது. இதன் குரல் ஓங்கியொலிகிறது.

ஸ்ரீலங்காவைப் பொறுத்தமட்டில், இந்துப் பெருங்கடலைச் ''சமாதான மண்டலமாக்கும்'' தீர்மானம் 1971இல் இதன் முன்மொழிவின் படி ஐ.நா.சங்கப் பொதுச் சபையில் ஏற்கப்பட்டதிலிருந்து இது இந்துப் பெருங்கடல் பற்றிய ஐ.நா. சங்க விசேஷக் கமிட்டியிலும் கூட்டுச் சேரா இயக்க அரங்கங்களிலும் இக்கருத்தை மிகவும் தீவிரமாக ஆதரித்தது.

ஆனால் சமீப ஆண்டுகளில், கூட்டுச் சேரா இயக்கக் கோட்பாடுகளை ஆதரிப்பதாக அதிகாரபூர்வமாக அறிவித்துக் கொண்டே ஸ்ரீலங்கா 1981 அக்டோபரில், இப்பிரதேசத்திலுள்ள அமெரிக்கக் கடற்படைச் சக்திகளுக்கு ''ஓய்வு தளங்களை'' அளிக்கப் போவதாக அறிவித்தது. டியகோ கார்சியாவில் உள்ள அமெரிக்கப் போர்க் கப்பல்களின் அதிகரித்து வரும் எரிபொருள் தேவைகளைப் பூர்த்தி

---

* *Patriot,* March 25, 1984.

செய்வதற்காக திரிகோணமலையின் அருகே ஒரு பெரும் எண்ணெய் கிடங்கை ஏற்படுத்தும் திட்டங்களை இந்த நோக்கில்தான் அணுக வேண்டும். இதன் தொடர்பில், டியகோ கார்சியா தீவை மொரீஷியசிற்குத் திருப்பித் தரும் பிரச்சினையை இந்துப் பெருங்கடலை இராணுவ கலைப்பிற்குள்ளாக்கும் முக்கியப் பிரச்சினைகளிலிருந்து பிரித்து பார்க்கும் ஆலோசனையை இது (பாகிஸ்தானோடு சேர்ந்து) 1983 மார்ச்சில் டெல்லியில் நடை பெற்ற கூட்டுச் சேரா இயக்க நாடுகளின் 7வது மகாநாட்டில் முன்வைத்ததை இங்கே நினைவு கூரலாம்.

இந்துப் பெருங்கடலில் ''சமாதான மண் டலம்'' பற்றிய கருத்தமைப்பில் வங்கதேசத் தின் நிலை மொத்தத்திலும் பொதுவாகவும் ஸ்ரீலங்காவின் நிலையை ஒத்தது. அமெரிக்கா வுடனான இராணுவத் தொடர்புகளை வங்க தேசம் விரிவுபடுத்தி வருகிறது. ஆயுதத்திற்குப் பதிலாக வங்கதேசம் 1980இல் இராணுவத் தளத்தை ஏற்படுத்துவதற்காக அமெரிக்கா விற்கு செயின்ட் மார்ட்டின் தீவை அளித்தது; இரண்டு வருடங்களுக்குப் பின் அமெரிக்க நிபுணர்கள் இத்தீவு இதற்கு ஏற்றதல்ல என் பதைக் கண்டுபிடித்த பின் மன்பூர் என்ற இன்னொரு தீவை அளித்தது.

பாகிஸ்தானைப் பற்றி ஏற்கெனவே பார்த் தோம். ஆனால் இது என்றாவது எதிர்காலத் தில் ''சமாதான மண்டலம்'' பற்றிய கருத் தைத் தான் அதிகாரபூர்வமாக (இந்துப் பெருங்

கடல் பற்றிய ஐ. நா. சங்க விசேஷக் கமிட்டி யின் வரம்புகளுக்குள்) ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டே நடைமுறையில் வெளிப்படையாக இதற்கெதிரான கொள்கையைப் பின்பற்று கிறது, ஆப்கானிஸ்தானிற்கு எதிரான ''பிரகட னப்படுத்தாத யுத்தத்தின்'' ஆரம்பத்திலிருந்து அமெரிக்காவுடன் இராணுவ-அரசியல் உடன் படிக்கையைச் செய்து கொண்டது என்பதைக் குறிப்பிட வேண்டும். இதற்கு வழங்கப்படும் பெரும் அமெரிக்க இராணுவ உதவியின் போக் கில் இந்நாட்டின் பரப்பில் அமெரிக்கா ஏற் கெனவே 5 எலெக்ட்ரானிக் வேவு நிலையங் களைப் பெற்றுள்ளது, இந்நாட்டின் துறை முகங்களுக்குள் விமானந்தாங்கிக் கப்பல்கள் நுழையவும் பின் இங்கேயே நிற்கவும் உரிமை யைப் பெற முயலுகிறது.

அடுத்த சில ஆண்டுகளில் பாகிஸ்தானிற்கு அமெரிக்கா AWACS சாதனங்களை அளிக் கும், இதன் தரைப்படைகளுக்கு அதி நவீன ஆயுதங்களை வழங்கும். தரைப்படையில் ஐந்தில் நான்கு பகுதி இந்திய எல்லையில் நிறுத்தப்பட்டுள்ளது. இங்கே அதே சமயத்தில் தீவிரமாக விமானத் தளங்கள் கட்டப்படு கின்றன, போர்த்தந்திர முக்கியத்துவமுடைய சாலைகள் போடப்படுகின்றன.

இந்த இராணுவத் தயாரிப்புகள் (அமெ ரிக்கத் திட்டங்களின்படி இவற்றின் முக்கிய லட்சியங்களில் ஒன்று பாகிஸ்தான், துருக்கி, சவுதி அரேபியா ஆகிய மூன்று ''அரண்கள்'' என்றழைக்கப்படுவதைக் கொண்டு பாரசீக

வளைகுடாவைச் சுற்றி போர்த்தந்திர வளையத்தை ஏற்படுத்துவதாகும்) தெற்காசியாவில் நிலவரத்தைக் கணிசமான அளவு மாற்றக் கூடும், ஆசியாவில் அமெரிக்கக் கொள்கையின் கோட்டையாக பாகிஸ்தான் இருப்பதை இந்தியா தன் பாதுகாப்பிற்கான உண்மையான அபாயமாகக் கருதுகிறது. பாகிஸ்தான் தன் சொந்தத் ''துரிதத் தாக்குதல் படைகளைத்'' தோற்றுவித்துள்ளதையடுத்து இக் கவலைகள் அதிகமாகின்றன. இந்தத் ''துரிதத் தாக்குதல் படைகள்'' அமெரிக்கத் ''துரிதத் தாக்குதல் படைகளுடன்'' நெருக்கமாகத் தொடர்பு கொண்டு செயல்படும். இதற்காகத் தான் பாகிஸ்தானின் இராணுவ அதிகாரிகள் குழு டியகோ கார்சியா தீவில் பயிற்சி பெற்றது.

அமெரிக்காவுடன் இன்னமும் நெருக்கமான இராணுவக் கூட்டை வைத்துக் கொள்ள பாகிஸ்தான் முயலுகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஆனால் அனேகமாக இங்கும் குறிப்பிட்ட எல்லைகள் நிலவ வேண்டும். உதாரணமாக, இந்துப் பெருங்கடல் பற்றிய ஐ.நா. சங்க விசேஷக் கமிட்டியில், இந்துப் பெருங்கடல் சம்பந்தமான சர்வதேச மகாநாட்டைக் கூட்டும் தீர்மானத்தைக் குலைக்கும் அமெரிக்காவின் முட்டுக்கட்டைக் கொள்கைக்கு நேரடியாக ஆதரவு தெரிவிக்க பாகிஸ்தான் தயாராயில்லை; இந்த எதிர்கால மகாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரலின் முக்கிய பிரச்சினைகளை 1981இல் முன்மொழிந்த

கூட்டுச் சேரா நாடுகளில் ஒன்றாக பாகிஸ்தான் விளங்கியது.

அதே சமயம் பாகிஸ்தான், ''சமாதான மண்டலக்'' கருத்தமைப்பை நிறைவேற்றுவதை ஆப்கானிஸ்தானில் உள்ள மட்டான அளவு சோவியத் துருப்புகள் வெளியேறுவதுடன் பன்முறை இணைத்தது. தெற்காசியாவில் ''அணு ஆயுதமற்ற மண்டலம்'' குறித்த தன் சொந்தக் கருத்தமைப்பை பாகிஸ்தான் முன்வைக்கிறது. சீன மற்றும் பாகிஸ்தான் தரப்பிலிருந்து அணு ஆயுத யுத்த அபாயம் இருக்கையில் இக்கருத்தமைப்பு இந்தியாவிற்கும் தெற்காசிய துணைக் கண்டத்தின் மற்ற நாடுகளுக்கும் ஏற்புடையதாக இல்லை.

இந்துப் பெருங்கடலில் அமெரிக்காவின் நேட்டோ கூட்டாளிகளின் இராணுவ நடமாட்டமும் நிலவரத்தைக் கணிசமாக சிக்கலாக்குகிறது.

இங்கிலாந்து, அதிகாரபூர்வமாயும் நடைமுறையிலும் நிபந்தனையின்றி அமெரிக்காவை ஆதரிக்கிறது. ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இத்தாலி, இன்னும் சில நேட்டோ நாடுகள் ஊசலாட்டங்களுக்குப் பின் இப்பிரதேசத்தில் வாஷிங்டனின் இராணுவ நடவடிக்கைகளை ஆதரித்தன. பிரான்சிற்கோ, இங்கே நிரந்தரப் படையும் தளங்களும் உள்ளன. 1984இல் சாத் நாட்டு சம்பவங்களில் இதன் பங்கேற்பு, பாரசீக வளைகுடாவில் உள்ள ஒரு சில நாடுகளுடன் ''பாலங்களை அமைக்கும்'' கொள்கையைத் தீவிரப்படுத்தியது, இப்பிரதேச நாடு

கள் சிலவற்றுடன் அணு ஆராய்ச்சித் துறையில் இதன் ஒத்துழைப்பு, இப்பிரதேச நாடுகள் சிலவற்றுக்கு ஆயுத சப்ளைகளின் அதிகரிப்பு, 1981ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்குப் பின் ''சமாதான மண்டலக்'' கருத்தமைப்பு சம்பந்தமாக ஆக்கபூர்வமான நிலையிலிருந்து பின்வாங்கியது ஆகியவற்றைக் கொண்டு பார்த்தால் பிரான்ஸ் மேற்கொண்டும் இங்கே தன் இராணுவ நிலைகளை விரிவுபடுத்தும், இந்துப் பெருங்கடலில் அமெரிக்க இராணுவ-அரசியல் கொள்கையுடன் அதிக ஒருங்கிணைப்பை நாடும் என்று எதிர்பார்க்கலாம்.

சீனாவையும் கவனத்திலிருந்து தப்பவிடக் கூடாது, அதுவும் குறிப்பாக இந்துப் பெருங்கடலின் தனிப்பட்ட சில பகுதிகளில் (பெரும்பாலும் தென்கிழக்காசியா, தெற்காசியா, தென் சீனக் கடலில் இந்துப் பெருங்கடலின் நுழைவாயில்கள்) இது முக்கியமானது. பிரான்சைப் போன்றே சீனாவிடமும் ராக்கெட்டுகளை ஏந்திச் செல்லும் அணு நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன. இப்பிரதேசத்தில் சக்திகளின் பொதுச் சமன்நிலையில் இவற்றையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் ஐந்து

### சமாதான மண்டலத்திற்காக

60ஆம் ஆண்டுகளின் இறுதியில் மற்றும் 70ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் இந்துப் பெருங்கடலில் நிலவரம் ஒப்பீட்டளவில் அனுகூலமானதாயிருந்தது. முந்தைய காலனியாதிக்க வல்லரசுகளின் இராணுவ நடமாட்டம் குறைய ஆரம்பித்தது. புதிய சுரண்டலாளர்கள் இன்னமும் இங்கு ஸ்திரமடையவில்லை. இது இப்பிரதேசத்தில் நிலையான சமாதானம், ஒத்துழைப்பு, நல்லண்டை உறவுகளை ஏற்படுத்துவதற்கான முன்நிபந்தனைகளைத் தோற்றுவித்தது.

சமீபத்தில் அரசியல் சுதந்திரத்தைப் பெற்ற இப்பிரதேசத்தின் இளம் அரசுகளுக்கு இது தான் தேவையாக இருந்தது. சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தம் முயற்சிகளையும் மூலாதாரங்களையும் ஒன்று திரட்டுவதில் இந்நாடுகள் ஜீவாதார அக்கறை கொண்டிருந்தன. பெருங்கடலை இராணுவமயப்படுத்துவதும் இந்த அரசுகளை இராணுவக் கூட்டுகளினுள் சேர்ப்பதும் இந்நாடுகளை

வீணான ஆயுதப் போட்டியினுள் இழுக்கும், இவற்றின் மூலாதாரங்களை ஆக்கபூர்வமான நோக்கங்களிலிருந்து திசை திருப்பும்.

கூட்டுகள் சம்பந்தமான அரசியலில் கலந்து கொள்ளாதிருப்பது, அந்நிய இராணுவ நடமாட்டத்தை அகற்றுவது, இப்பிரதேச நாடுகளின் சமாதான வளர்ச்சிக்கு வகை செய்வது பற்றிய கருத்து இக்காலகட்டத்தில்தான் தோன்றியது.

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் பிரச்சினைக்கென ஒரு வரலாறே உண்டு. இப்பெருங்கடலை "சமாதானம் மற்றும் அமைதி" மண்டலமாகப் பிரகடனப்படுத்தும் ஒரு சர்வதேச உடன்படிக்கையைச் செய்து கொள்ளும் கருத்து 1964இல் கெய்ரோவில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் 2வது மகாநாட்டில் ஸ்ரீலங்காவால் முன்வைக்கப்பட்டது. இந்த முன்முயற்சியை ஆசியா, ஆப்பிரிக்காவைச் சேர்ந்த கூட்டுச் சேரா நாடுகள் ஆதரித்தன. முடிவில், எந்தப் பெருங்கடல் பகுதிகளினுள் இன்னமும் அணு ஆயுதம் புகவில்லையோ அவற்றை முதலாவதாக அணு ஆயுதமற்ற மண்டலங்களாக அறிவிக்கும் சிபாரிசு கெய்ரோ மகாநாட்டு தீர்மானத்தில் இடம் பெற்றது. இந்துப் பெருங்கடலில் இராணுவத் தளங்களைத் தோற்றுவிக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் திட்டத்தை மகாநாடு கண்டித்தது.

60ஆம் ஆண்டுகளின் கடைசியிலும் 70ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் இந்துப் பெருங்

கடலை அணு ஆயுதமற்ற மண்டலமாக அறிவிக்கும் கருத்தமைப்பு பெரும்பாலான கரையோர நாடுகளைத் திருப்திபடுத்தவில்லை. பெருங்கடலில் அணு ஆயுதங்களை அனுமதிக் காததோடு கூட பொதுவாக ஏகாதிபத்திய வல்லரசுகளின் இராணுவ நடமாட்டத்தையும் அனுமதிக்கக் கூடாது என்பதை இந்நாடுகள் நோக்கமாகக் கொண்டன. இக்கருத்தமைப்பு மேற்கொண்டு வளர்க்கப் பெற்று இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக அறி விக்கும் பிரச்சினை மேன்மேலும் தீவிரமாக முன்வைக்கப்படுகிறது.

1970இல் லுசாக்காவில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் அரசு, அரசாங்கத் தலைவர் களின் 3வது மகாநாட்டில் ஸ்ரீலங்கா, இந்துப் பெருங்கடலில் சமாதான மண்டலத்தைத் தோற்றுவிக்கும் கருத்தை ஐ.நா. சபையில் முன்வைக்க வேண்டும் என்று முன்மொழிந் தது. இம்மகாநாடு ஏற்ற ‘‘ஐ.நா. சபை பற்றிய தீர்மானத்தில்’’, இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாகக் கருதும்படி எல்லா நாடுகளுக்கும் அறைகூவல் விடுக்கும் ஒரு பிரகடனத்தைத் தயார்படுத்த இம்மகாநாடு முடிவெடுத்தது. இதன்படி இந்துப் பெருங் கடலில் அந்நிய தரைப்படை, கடற்படை, விமானப்படைத் தளங்களுக்கு இடம் கிடை யாது. அதே சமயம் இப்பிரதேசத்தில் எவ்வி தமான அணு ஆயுதமும் இருக்கக் கூடாது.

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண் டலமாக அறிவிக்கும் பிரகடனம் 1971 டிசம்பர்

16இல் ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 26வது அமர்வில் நிறைவேற்றப்பட்டது (№ 2832). புருண்டி, ஜாம்பியா, இந்தியா, இரான், இராக், ஏமன், கென்யா, ஸ்வாசிலாந்து, சோமாலி, டன்சானியா, உகாண்டா, ஸ்ரீலங்கா, யுகோஸ்லாவியா ஆகிய 13 நாடுகள் இந்த நகலை உருவாக்கின. ஒரு பரந்த பிரதேசத்தில் சமாதான மண்டலத்தை ஏற்படுத்துவதானது, ஐ.நா. சங்க லட்சியங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கேற்ப சமத்துவம், நீதி ஆகியவற்றின் அடிப்படையிலான சர்வபொது சமாதானத்தை ஏற்படுத்த அனுகூலமான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று உறுதியாக நம்பும் ஐ.நா. சங்கப் பொதுச் சபை பின்வருமாறு அறிவிப்பதாக அந்த ஆவணத்தில் கூறப்பட்டிருந்தது:

1. ''இந்துப் பெருங்கடலும் (இதன் எல்லைகள் வரையறுக்கப்படவிருக்கின்றன) இதன் மீதான வான் பரப்பும் கடலடிப் பகுதியும் இனி என்றென்றைக்குமாக சமாதான மண்டலமாகும் என்று இதன் மூலம் பிரகடனப் படுத்தப்படுகிறது.''*

இந்துப் பெருங்கடலில் வல்லரசுகளின் இராணுவ நடமாட்ட விஸ்தரிப்பை நிறுத்தவும் இங்குள்ள அவற்றின் சகலவிதமான இராணுவத் தளங்கள், இராணுவ அமைப்புகள், பின்னணி சேவையிடங்கள், அணு ஆயுத அமைப்பு

---

* *The United Nations and Disarmament, 1970-75,* N.Y., 1976, p. 191.

கள், பேரழிவு ஆயுதங்கள் ஆகியவற்றை ஒழித்துக் கட்டவும் இங்கே அவற்றின் இராணுவ மிரட்டல்களை நிறுத்தவும் கரையோர நாடுகளுடன் உடனடியாகப் பேச்சு வார்த்தைகளைத் துவக்குமாறு இப்பிரகடனம் வல்லரசுகளுக்கு அறைகூவல் விடுத்தது. இந்துப் பெருங்கடல் பகுதியில் போர்க் கப்பல்களும் விமானப்படைகளும் பலத்தைப் பிரயோகிக்கும் அபாயத்தை ஏற்படுத்தாமலிருக்கவும் கரை யோர அரசுகள் மற்றும் இந்துப் பெருங்கட லின் அருகேயுள்ள அரசுகளின் அரசுரிமை, பிரதேச முழுமை, சுதந்திரத்தை அச்சுறுத் தாமலிருக்கவும் தேவையான உத்திரவாதங் களைத் தருமாறு இது கரையோர நாடு களுக்கும் இந்துப் பெருங்கடலை ஒட்டியுள்ள நாடுகளுக்கும் பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பு நாடுகளுக்கும் இப்பெருங்கடலைப் பயன்படுத்தும் மற்ற நாடுகளுக்கும் அறைகூவல் விடுத்தது.

ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 26வது அமர்வில் 61 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதர வாக வாக்களித்தன, 55 நாடுகள் நடுநிலை வகித்தன, யாரும் எதிராக வாக்களிக்கவில்லை.

ஒரு சில தூதுக்குழுக்கள் நடுநிலை வகிக்கக் காரணம், இது சர்வதேச கடல் சட்ட முறை யின் வரையளவுகளுடன் முரண்படுவதாகக் கருதியதேயாகும். கோட்பாட்டு ரீதியாக பிரகடனத்தை ஆதரித்த சோவியத் யூனியன், ''பிரதேசத்தில் இரண்டு வல்லரசுகளுக்கு இடையிலான போட்டி'' குறித்த கருத்தை

ஒப்புக் கொள்ளவில்லை. முற்புனைவான, உண்மைக்குப் புறம்பான இது சோவியத் யூனியனையும் அமெரிக்காவையும் ஒரே தட்டில் வைக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடு, மற்ற மேலைய நாடுகளுக்கு இந்துப் பெருங்கடலில் உள்ள ஏராளமான படைக்கலங்கள், இப்பிரதேசத்தில் உள்ள அமெரிக்கத் தளங்கள், ஆதார மையங்கள் ஆகியவற்றைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட புள்ளிவிவரங்களை ஒப்பிட்டாலே "போட்டி" குறித்த கருத்து எவ்வளவு பொய்யானது என்பது விளங்கும். இந்துப் பெருங்கடலில் சோவியத் யூனியனுக்கு இராணுவத் தளங்கள் இல்லை, இவற்றைப் பெறும் எண்ணமும் இதற்குக் கிடையாது. சோவியத் யூனியன் இப்பகுதிக்குத் தன் போர்த்தந்திரச் சக்திகளைக் கொண்டு வரவில்லை. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கான பதிலாக இந்துப் பெருங்கடலில் 1971 முதல் நிலவும் சோவியத் யூனியனின் இராணுவ நடமாட்டம் குறைந்த பட்சமானது மட்டுமே. அமெரிக்காவும் கரையோரமில்லா மற்ற நாடுகளும் தம் இராணுவ நடமாட்டத்தைக் குறைத்தால் சோவியத் யூனியனும் இதை அடிப்படை ரீதியாகக் குறைக்கத் தயார். சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் இதன் தெற்கு எல்லையருகே சமாதான மண்டலத்தை ஏற்படுத்துவதென்பது இதன் பாதுகாப்பிற்கே பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

சோவியத் யூனியன் இவ்வழி நின்று இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவது குறித்து திட்டவட்டமான ஆலோசனைகளை முன்வைக்கிறது. சோவியத் யூனியன் பின்வருமாறு முன்மொழிகிறது:

—எல்லா அந்நிய இராணுவத் தளங்களும் அகற்றப்பட வேண்டும்;

—அணு ஆயுதமோ வேறு விதமான பேரழிவு ஆயுதங்களோ வைக்கப்படக் கூடாது;

—கரையோர மற்றும் கண்டப் பரப்பிலுள்ள நாடுகளுக்கு எதிராக அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படக் கூடாது, அணு ஆயுத வல்லரசுகள் இதற்கேற்ற உறுதி மொழிகளை ஏற்க வேண்டும்;

—இப்பிரதேச நாடுகளின் அரசுரிமை, பிரதேச முழுமை மற்றும் சுதந்திரத்தை அச்சுறுத்தும் இராணுவங்களையும் ஆயுதங்களையும் நிறுத்தக் கூடாது.

இக்கருத்து நிலைகள் நிறைவேற்றப்பட்டால் அது உண்மையிலேயே இந்துப் பெருங்கடலில் சமாதான மண்டலத்தை ஏற்படுத்தும்.

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக மாற்றும் பிரகடனம் 1971இல் ஏற்கப்பட்டபின் அடுத்த ஆண்டு இந்துப் பெருங்கடலைப் பற்றிய ஐ.நா. சங்க விசேஷ கமிட்டி (முதலில் இதில் 15 நாடுகள் உறுப்பு நாடுகளாயிருந்தன, இப்போது 47 நாடுகள் உள்ளன) தோற்றுவிக்கப்பட்டது. இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக மாற்றுவதற்கான நடைமுறை நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும்

கடமையும் பின்னர் இப்பிரச்சினை தொடர் பாக சர்வதேச மகாநாட்டைக் கூட்டும் கடமையும் இதற்கு வழங்கப்பட்டது. இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் கருத்து பல சர்வதேச மற்றும் பிரதேச மகாநாடுகளில் விவாதிக்கப்பட்டது.*

கூட்டுச் சேரா இயக்கத்தின் உள்ளே பிறந்த இக்கருத்து இந்த இயக்கத்தின் மகாநாடுகளின் பணியிலும் ஆவணங்களிலும் மேன்மேலும் கணிசமான இடத்தை வகித்து வந்துள்ளது.

1973இல் அல்ஜீரியாவில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் அரசு, அரசாங்கத் தலைவர்களின் மகாநாடு தன் அரசியல் பிரகடனத்தில், இந்துப் பெருங்கடலைச் சமா தான மண்டலமாக்கும் கருத்தை நிறைவேற்ற ஒத்துழைக்குமாறு எல்லா நாடுகளுக்கும் அறை கூவல் விடுத்தது.

அதே ஆண்டு ஐ.நா. சங்கப் பொதுச் சபை யின் 28வது அமர்வில் சமாதான மண்டலத் தீர்மானத்திற்கு ஆதரவாக 95 வாக்குகள் கிடைத்தன (35 நாடுகள் நடுநிலை வகித்தன), அடுத்த ஆண்டில் 29வது பொதுச் சபை அமர்வில் 103 நாடுகள் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன (26 நாடுகள் நடு நிலை வகித்தன).

லீமாவில் (1975 ஆகஸ்டு) நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் அயல்விவகாரத் துறை அமைச்சர்களின் மகாநாட்டில் இந்துப்

---

* இஸ்வேஸ்தியா, 17.03.84. (ருஷ்ய மொழியில்.)

பெருங்கடலைச் சமாதான மண்டலமாக அறிவிப்பது பற்றிய ஒரு விசேஷ தீர்மானம் ஏற்கப்பட்டது. டியகோ கார்சியாவில் இராணுவத் தளம் விரிவுபடுத்தப்படுவதைப் பற்றி அதில் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டிருந்தது. பல் தரப்பு இராணுவக் கூட்டுகளிலிருந்து (அதாவது ஏகாதிபத்திய வல்லரசுகள் பங்கேற்கும் இராணுவக் கூட்டுகளிலிருந்து) வெளியேறி, இக்கூட்டுகளுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட சகலவித அன்னிய இராணுவத் தளங்களையும் ஒழிக்க வழிகோலுமாறு கரையோர நாடுகளுக்கு அறைகூவல் விடப்பட்டது. இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக அறிவித்த பிரகடனக் கருத்துக்களுடன் ஒத்து வராத சகலவித நடவடிக்கைகளையும் கைவிடுமாறு தீர்மானம் கோரியது.

1975இல் கொழும்பில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் அரசு, அரசாங்கத் தலைவர்களின் 5வது மகாநாட்டிலும் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக அறிவிப்பது பற்றிய தீர்மானம் ஏற்கப்பட்டது. இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் பிரச்சினை சம்பந்தமான சர்வதேச மகாநாட்டைக் கூட்ட ஐ. நா. சங்க விசேஷ கமிட்டியுடன் கூட்டாகச் சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதென மகாநாடு முடிவெடுத்தது. அதே ஆண்டு நடைபெற்ற ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 30வது அமர்வில் இந்த சர்வதேச மகாநாட்டின் கடமைகள் திட்டவட்டமாக்கப்பட்டன. மகாநாட்டின் லட்சியங்கள்,

நேரம், இடம், காலம், நிகழ்ச்சி நிரல், பங்கேற்பாளர்களின் அந்தஸ்து ஆகிய பிரச்சினைகள் மீது முக்கியக் கவனத்தைச் செலுத்த முடிவு செய்யப்பட்டது.

பிந்தைய ஆண்டுகளில் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக மாற்றும் பிரச்சினைகள் தொடர்பான விவாதம் பெரும்பாலும் ஐ. நா. சங்க விசேஷ கமிட்டியிலேயே நடந்தது. ஆனால் இது ஆக்கபூர்வமானதாக இருக்கவில்லை. இப்பிரதேசத்தில் பதட்ட நிலைக்கு யார் பொறுப்பு என்பது பற்றிய திட்டவட்டமான வரையறை இல்லாததும் சோவியத் யூனியனையும் அமெரிக்காவையும் ஒரே தட்டில் நிறுத்தும் முயற்சிகளும் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தன.

அதே நேரத்தில் சோவியத் யூனியன், இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவது பற்றிய கூட்டுச் சேரா நாடுகளின் முன்மொழிவை ஆதரித்து, 1977இல் ஐ. நா. சங்க விசேஷ கமிட்டியுடன் ஆலோசனைகளைத் துவக்கியது, மற்ற நாடுகளுடன் கூட்டாகச் சேர்ந்து பரஸ்பர அடிப்படையில் இப்பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளைக் குறைக்கும் வழிகளையும் சாதனங்களையும் தேடத் தயாரென அறிவித்தது. ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 32வது அமர்வில், இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் தீர்மானத்திற்கு ஆதரவாக சோவியத் யூனியன் வாக்களித்தது (இதற்கு ஆதரவாக மொத்தம் 123 வாக்குகள் கிடைத்தன, அமெரிக்கா,

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இன்னும் சில மேலைய நாடுகள் உட்பட 13 நாடுகள் நடுநிலை வகித்தன). இதற்குப் பல சாக்குபோக்குகள் கூறப்பட்டிருந்தாலும், இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் பிரச்சினை குறித்து மகாநாட்டைக் கூட்ட விடாமல் தடுப்பதும் பொதுவாக இக்கருத்தை நிறைவேற விடாமல் செய்வதும்தான் ''நடுநிலை வகித்தவர்களின்'' ஒரே லட்சியமாக இருந்தது.

இப்பிரதேசத்தில் இராணுவ நடமாட்டத்தை மட்டுப்படுத்தி குறைப்பதைப் பற்றி 1977-78ஆம் ஆண்டுகளில், அதாவது பதட்ட நிலைத் தணிவுக் கட்டத்தில் நடைபெற்ற சோவியத்-அமெரிக்கப் பேச்சுவார்த்தைகள் இந்துப் பெருங்கடலில் சமாதான மண்டலத்தை ஏற்படுத்துவதில் பெரும் பங்காற்றியிருக்கக் கூடும். ஆனால் காலம் காட்டியபடி இப்பேச்சுவார்த்தைகள், இப்பிரதேசத்தில் தன் இராணுவப் பலத்தை மேற்கொண்டு அதிகப்படுத்துவதற்கான ஒருவித மூடுதிரையாக மட்டுமே அமெரிக்காவிற்குத் தேவைப்பட்டன. பேச்சுவார்த்தைகளை முறித்த அமெரிக்கா இந்துப் பெருங்கடலில் தன் இராணுவ நடமாட்டத்தைப் பெரிதும் பெருக்கத் துவங்கியது.

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் கருத்தின் நிறைவேற்றத்தில் கரையோர மற்றும் உட்கண்ட நாடுகளின் கூட்டம் விசேஷ இடம் வகித்தது. இக்கூட்டம் (பிரகடனம் ஏற்கப்பட்ட பின் இதுதான்

இப்பிரதேச நாடுகள் அனைத்தின் முதல் சந்திப்பாகும்) 1979 ஜூலையில் நியூயார்க்கில் நடந்தது. இதில் இந்துப் பெருங்கடலின் எல்லாக் கரையோர, உட்கண்ட நாடுகளும் கலந்து கொண்டன; பாதுகாப்புக் கவுன்சிலின் உறுப்பு நாடுகளும் மற்றும் இந்துப் பெருங்கடலின் நீர்ப்பரப்பைப் பரவலாகப் பயன்படுத்தும் ஒரு சில நாடுகளும் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டிருந்தன.

விவாதங்களின் போது பெரும்பாலான தூதுக்குழுக்கள் அந்நிய இராணுவத் தளங்கள் அகற்றப்பட வேண்டுமென்றும் இப்பிரதேசத்தைச் சமாதான, ஸ்திர மண்டலமாக மாற்ற வேண்டுமென்றும் கோரின, ஆயுதப் போட்டியை எதிர்த்தன, இங்கே அணு ஆயுதங்கள் வைக்கப்படுவதை எதிர்த்தன. கூட்டத்தின் இறுதி ஆவணத்தில் இடம் பெற்ற இந்த முக்கியக் கருத்து நிலைகளை சோவியத் யூனியன் ஆதரித்தது.

அதே சமயம் அமெரிக்கப் பிரதிநிதி, இப்பிரதேசத்தில் தன் தளங்களை வைத்துக் கொள்ளவும் இங்கே போர்க் கப்பல்களையும் விமானங்க்ளையும் (அணு ஆயுதம் ஏந்தியவை உட்பட) அனுப்பவும் அமெரிக்காவிற்கு உரிமையுண்டு என்று அறிவித்தார். இக்கொள்கை, இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் கருத்தை மட்டுமின்றி, இங்கே ஸ்திர நிலையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சகலவித நடவடிக்கைகளையும் குலைத்தது.

துரதிர்ஷ்டவசமாக, இப்பிரதேசத்தில் நிலவும் பதட்ட நிலையின் உண்மையான காரணங்களையும் இவற்றை அகற்றும் வழிகளையும் புரிந்து கொள்வதில் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவவில்லை. ஒரு சில தூதுக்குழுக்கள் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளதை, உதாரணமாக இந்துப் பெருங்கடலில் செயல்படுவதற்கென விசேஷமாக அமெரிக்க 5வது கடற்படையைத் தோற்றுவிக்கும் திட்டங்களையும் டியகோ கார்சியாவில் அமெரிக்கத் தளம் விரிவுபடுத்தப்படுவதையும் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டின என்றால் மற்ற தூதுக்குழுக்கள், அந்நிய வல்லரசுகளின் நடமாட்டமும் இவற்றின் ''போட்டியும்'' தான் பதட்ட நிலைக்கான காரணமெனக் கருதின. இதன் விளைவாய், இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக அறிவிக்கவிருந்த உடன்படிக்கையின் 7 முக்கியக் கோட்பாடுகளை விளக்கும் இறுதி ஆவணம் ஏற்கப்படவில்லை.

அதே சமயம், இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் பிரச்சினை சம்பந்தமான சர்வதேச மகாநாட்டைக் கூட்டும் காலக்கெடுவை முடிவு செய்யுமாறும் பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்களை விசேஷ கமிட்டியில் சேர்த்து அதை விரிவுபடுத்துமாறும் இம்மகாநாட்டிற்குத் தயாராகும் கடமையை அதற்களிக்குமாறும் இக் கூட்டம் ஐ. நா. சங்கப் பொதுச் சபையின்

34வது அமர்விற்கு சிபாரிசு செய்தது குறிப்பிடத் தக்கது.

மேற்கூறிய கூட்டம் முடிந்து இரண்டு மாதங்கள் கழித்து நியூயார்க்கில் கூடிய ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 34வது அமர்வு ஏற்ற தீர்மானங்களின் அடிப்படையில் இச்சிபாரிசுகள் இருந்தன. இந்துப் பெருங் கடலைச் சமாதான மண்டலமாக அறிவிக்கும் பிரகடனத்தை நிறைவேற்றுவது குறித்து இந்த அமர்வு இரண்டு தீர்மானங்களை ஏற்றது.

இவற்றில் ஒன்று (№ 34/80/A) இந்துப் பெருங்கடல் பிரதேசத்தில் இராணுவ-அரசியல் நிலவரத்தைக் குறித்த மதிப்பீட்டை உள்ளடக்கியிருந்தது. இதில் பிரதேசத்தில் நிலவரம் மோசமானது குறித்து கவலை தெரிவிக்கப் பட்டிருந்தது, இந்துப் பெருங்கடலில் இராணுவ நடவடிக்கையை மட்டுப்படுத்தி குறைப்பது சம்பந்தமான சோவியத்-அமெரிக்கப் பேச்சுவார்த்தைகள் நின்று போனது வருத்தத்துடன் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இந்துப் பெருங்கடலில் பதட்ட நிலை அதிகமானதற்கு யார் பொறுப்பு என்று மீண்டும் இந்த ஆவணத்தில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்நேரத்தில் அமெரிக்கா இதுவரையில்லா அளவு இங்கு தன் இராணுவப் பலத்தைப் பெருக்க ஆரம்பித்தது. இந்துப் பெருங்கடலில் தன் இராணுவ வெறி கொள்கையின் நிறைவேற்றத்திற்கு சோவியத் யூனியனுடனான பேச்சுவார்த்தைகள் தடையாக இருக்குமெனக்

கருதி அமெரிக்காதான் இப்பேச்சுவார்த்தை களை ஒருதலைப்பட்சமாக முறித்துக் கொண் டது எனும் அம்சமும் இதில் குறிப்பிடப்பட வில்லை.

இக்காரணங்களால், இத்தீர்மானம் வாக் கெடுப்பிற்கு விடப்பட்ட போது சோவியத் யூனியன் நடுநிலை வகிக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டது.

இன்னொரு ஆவணத்தில் (№ 34/80/B) இந்துப் பெருங்கடலைப் பற்றிய சர்வதேச மகாநாட்டை 1981இல் கூட்டும்படி பொதுச் சபை தீர்மானித்து, இதைக் கூட்டுவதற்கான தயாரிப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு விசேஷ கமிட்டிக்குக் கட்டளையிட்டது. சோவியத் யூனியன் இத்தீர்மானத்திற்கு ஆதர வாக வாக்களித்து விசேஷ கமிட்டியில் இடம் பெற விருப்பம் தெரிவித்தது. இரண்டு தீர் மானங்களின் வாக்கெடுப்பின் போதும் அமெரிக்க ஐக்கிய நாடு, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் இவற்றின் கூட்டு நாடுகள் நடுநிலை வகித்தன.

இவ்வாறாக கரையோர மற்றும் உட்கண்ட நாடுகளின் கூட்டம், ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 34வது அமர்வு ஆகியவற்றிற்குப் பின் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் பிரச்சினை நடைமுறை பிரச் சினையாகியது. இது இந்துப் பெருங்கடல் பற்றிய விசேஷ கமிட்டியின் பணியில் எதி ரொலித்தது.

இக்கமிட்டியின் உள்ளடக்கம் கணிசமான

அளவு விரிவடைந்தது. இதில் சோவியத் யூனியன், பிரான்ஸ் மற்றும் இந்துப் பெருங் கடலைப் பரவலாகப் பயன்படுத்தும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இத்தாலி, கானடா, லைபீரியா, ஹாலந்து, நார்வே ஆகிய 6 நாடுகள் இடம் பெற்றிருந்தன. சிறிது காலத் திற்குப் பின் அமெரிக்க ஐக்கிய நாடும் இங்கி லாந்தும் இக்கமிட்டியில் இடம் பெற விருப் பம் தெரிவித்தன. பின்னர் பல்கேரியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, போலந்து, ருமேனியா, யுகோஸ்லாவியா ஆகிய சோஷ லிச நாடுகளும் இக்கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 1980ஆம் ஆண்டின் துவக் கத்திலிருந்து ஜிபூட்டி, எகிப்து, பனாமா, சேய்ஷெல் தீவுகள், சிங்கப்பூர், சூடான், மாலத் தீவுகள் ஆகிய நாடுகளும் இக்கமிட்டி யின் பணியில் பங்கேற்கின்றன.

விரிவுபடுத்தப்பட்ட கமிட்டி 1980ஆம் ஆண்டு மூன்று முறை கூடியது. இந்துப் பெருங்கடலில் சமாதான மண்டலத்தை ஏற்படுத்த அமெரிக் காவும் இதன் கூட்டு நாடுகளும் விரும்பவில்லை என்பதை இந்தக் கூட்டங்கள் தெட்டத்தெளி வாகக் காட்டின.

பிந்தைய ஆண்டுகளில் விசேஷ கமிட்டியின் பணி என்பது இரு எதிர் எதிரான கொள் கைகளின் மோதலாக இருந்தது. கூட்டுச் சேரா நாடுகளும் சோஷலிச நாடுகளும் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் பிரச்சினை சம்பந்தமாக சர்வதேச மகாநாடு ஒன்றைக் கூட்ட முயற்சித்தன என்றால்



11–898

அமெரிக்காவும் இதன் கூட்டு நாடுகளும் இதை அனுமதிக்காமலிருக்க முயலுகின்றன.

பல்வேறுவிதமான சாக்குபோக்குகளைக் கூறி பல கோரிக்கைகளை முன்வைத்து அமெரிக்கா இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டல மாக்கும் கருத்திற்கு இடையூறு செய்து வரு கிறது, இதன் மூலம் இப்பிரதேசத்தில் தன் இராணுவ நடமாட்டத்தைப் பெருக்குவதற் காக காலத்தைக் கடத்துகிறது, முன்னணிப் படைகளுக்கான போர்த்தந்திரத் தாக்குமுனை யையும் சோவியத் யூனியன் மீது அணு ஆயுதத் தாக்குதல் உட்பட முதல் தாக்குதலைத் தொடுப்பதற்காகவும் இப்பிரதேச நாடுகளின் மீது நிர்ப்பந்தம் செலுத்தவும் அடித்தளத் தையும் தோற்றுவித்து வருகிறது.

இந்த ஆண்டுகளில், இங்கே அமெரிக்காவின் இராணுவ நடமாட்டத்தை மேற்கொண்டு பெருக்குவதற்கான புதிய வாய்ப்புகளைப் பெறும் பொருட்டு அமெரிக்க விருந்தினர்கள் இந்துப் பெருங்கடல் பகுதி நாடுகளுக்கு அடிக் கடி வரத் துவங்கினர், அமெரிக்கத் துருப்புகள் மற்றும் இதன் கூட்டாளிகளின் பெரும் கடற் படை, விமானப்படைப் பயிற்சிகள் மேன் மேலும் முறையாக நடக்கலாயின. ஐ. நா. சபை யின் விசேஷ கமிட்டியிலோ அமெரிக்கா, இப் பிரதேசத்தில் தன் விஸ்தரிப்பு நாட்டங் களிலிருந்து கவனத்தைத் திருப்பி, இங்கே பதட்ட நிலை அதிகரித்து வருவதற்கான பொறுப்பை மற்ற நாடுகள் மீது, முதலாவ தாக சோவியத் யூனியன் மீது திணிக்க

முயலும் முகமாக இராஜதந்திர விளையாட்டை நடத்தி வருகிறது.

பல்வேறுவிதமான ''வாதங்கள்'' கூறப்பட்டாலும் இவை ஒரே மாதிரியாகப் பொய்யானவை.

உதாரணமாக, ''இந்துப் பெருங்கடலில் வல்லரசுகளின் போட்டி'' பற்றிய கருத்தை ''நிரூபிப்பதற்காகவும்'' இப்பிரதேசத்தில் உள்ள சோவியத் கப்பல்களைப் பற்றிய விவரங்களைத் திரித்து உரைப்பதற்காகவும் ''கப்பல்-நாட்கள்'' என்றழைக்கப்படும் குறியீட்டை கணக்கிடும் மதிப்பீடுகள் பரவலாகப் பிரச்சாரம் செய்யப்பட்டன. கப்பல்களின் எண்ணிக்கையை இவை இப்பிரதேசத்தில் கழித்த நாட்களின் எண்ணிக்கையால் பெருக்குவதால் இக்குறியீடு பெறப்படுகிறது.

கடற்படை நடமாட்டத்தை நிர்ணயிப்பதில் இந்த அணுகுமுறை முற்றிலும் பிரச்சார நோக்குடையது. ஏனெனில் இந்த முறையில் கப்பல்களின் வகைகள், இவற்றின் அளவு, ஆயுதப் பலம் போன்றவற்றிற்கு இடையே எவ்வித வேறுபாடும் கிடையாது. போர்க்கப்பல்கள், ஆதரவுக் கப்பல்கள், துணைக் கப்பல்கள் ஆகிய பலவித கப்பல்களின் ''கப்பல்-நாட்களும்'' ஒட்டுமொத்தமாகக் கணக்கிடப்படுகின்றன. ஆனால் உதாரணமாக, விமானந் தாங்கிக் கப்பல் மற்றும் இழுவைக் கப்பலின் போர்த்தந்திர-இயந்திர நுட்ப விவரங்களை ஒப்பிடுவது சரியில்லை என்பது தெட்டத் தெளிவு.

எனவே இதன் விளைவாய் எரிபொருள் வழங்கும் க்ப்பல்கள் போன்ற துணைக் கப்பல் கள் போர்க் கப்பல்களுடன் சேர்க்கப்படு கின்றன. சகல விதமான கப்பல்களின் ‘‘கப்பல்-நாட்களையும்’’ கூட்டுவதன் மூலம் அமெரிக்க இராணுவ நிபுணர்கள் சோவியத் யூனியனுக்கு இங்கே கணிசமான அளவு கடற்படைச் சக்தி கள் இருப்பதாகக் காட்டவும் இதன் மூலம் இந்துப் பெருங்கடலில் அமெரிக்க மற்றும் சோவியத் கடற்படைச் சக்திகளின் உண்மை விகிதத்தைத் திரித்துரைக்கவும் முயன்றனர்.

‘‘ஆப்கானிய பிரச்சினை’’ என்றழைக் கப்படுவதும் எழுப்பப்பட்டது. ஆப்கானிஸ் தானில் சோவியத் துருப்புகள் இருப்பதானது இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டல மாக்கும் பிரச்சினை சம்பந்தமான சர்வதேச மகாநாட்டைக் கூட்டுவதை இயலாததாக ஆக்குவதாக ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இன்னும் சில நாடுகளின் ஆதரவோடு அமெரிக்கா அறிவித்தது. இது சோவியத் யூனியனால் மட்டுமின்றி கூட்டுச் சேரா நாடுகளாலும் நிராகரிக்கப்பட்டது. ஆப்கானிய ஜனநாயகக் குடியரசின் சட்டபூர்வமான அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி அங்கே மட்டான சோவியத் துருப்புகள் இருப்பதானது இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் கருத்திற்கோ இது சம்பந்தமாக சர்வதேச மகாநாட்டைக் கூட்டுவதற்கோ எவ்விதத் திலும் முரண்பாடாக இல்லை என்று இந் நாடுகள் அறிவித்தன.

இது தவிர, பூகோள ரீதியாக இந்துப் பெருங்கடலின் எதிர்கால சமாதான மண்டலத்தில் சோவியத் நாட்டின் பரப்பில் கணிசமான பகுதியும் அடங்கியிருக்க வேண்டும் என்ற கருத்தையும் அமெரிக்கப் பிரதிநிதிகள் இலை மறைவு காய் மறைவாக முன்வைத்தனர். ஆனால் இதனால் சுதந்திரமான ஒரு அரசின் அரசுரிமையும் பிரதேச முழுமையும் முரட்டுத்தனமாக மீறப்படும்.

அமெரிக்காவின் இப்போக்கை ''இழுத்தடிப்புத் தந்திரம்'' என்று கூட்டுச் சேரா நாடுகளின் சில தூதுக்குழுக்கள் சித்தரித்தன. இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவது சம்பந்தமான சர்வதேச மகாநாட்டைக் கூட்டுவது ஐ. நா. சங்க விசேஷ கமிட்டியின் கடமையாகும் என்று சோவியத் யூனியன் மற்றும் கூட்டுச்சேரா நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தினார்கள்.

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் பிரச்சினை குறித்த மகாநாட்டை 1981இல் கொழும்புவில் கூட்டுவதன் அவசியத்தை ஊர்ஜிதப்படுத்திய ஒரு தீர்மானம் (№ 35/150) ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 35வது அமர்வில் ஏற்கப்பட்டது. இதில் ''இந்துப் பெருங்கடலில் இரண்டு வல்லரசுகளின் போட்டியைப்'' பற்றிக் கூறப்படாமல் இவற்றின் ''எதிரெதிர் நிலையைப்'' பற்றி மட்டுமே கூறப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

1981இல் கமிட்டியின் மூன்று அமர்வுகளின் போது, இந்துப் பெருங்கடலைச் சமா

தான மண்டலமாக்குவதை எதிர்த்தவர்கள் ''ஆப்கானிய பிரச்சினை'' என்றழைக்கப்பட்டதைப் பயன்படுத்தியதோடு கூட நடைமுறை ரீதியான இழுத்தடிப்புகளையும் பயன்படுத்தினர். சமாதான மண்டலத்தின் சாரத்தைப் பற்றிக் கருத்தொற்றுமை நிலவாததால் இது பற்றிய சர்வதேச மகாநாட்டைக் கூட்டுவது பொருளற்றது என்று அமெரிக்க ஐக்கிய நாடு, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் கூறின. ஆனால் இந்த வாதமும் கூட்டுச் சேரா நாடுகளால் நிராகரிக்கப்பட்டது. இவை விசேஷ கமிட்டியின் மார்ச் மாத அமர்வில் எதிர்கால மகாநாட்டின் ''நிகழ்ச்சி நிரலின் அடிப்படைகளை'' முன்வைத்தன.

1981 ஜூனில் நடைபெற்ற விசேஷ கமிட்டியின் அடுத்த அமர்வில் அமெரிக்கா நடைமுறை இழுத்தடிப்பிலிருந்து மகாநாட்டைக் குலைப்பதை நோக்கமாகக் கொண்ட நேரடி மிரட்டலுக்கு மாறியது. சமாதான மண்டலம் பற்றிய கருத்து முழுவதும் பழமையாகிப் போய்விட்டதாக அமெரிக்கா அறிவித்தது. அமெரிக்காவின் கருத்துப்படி, இந்துப் பெருங் கடலில் குவிக்கப்படும் பெரும் அமெரிக்க விமானப்படைச் சக்திகளோ இங்கே தோற்றுவிக்கப்படும் அமெரிக்க இராணுவத் தளங்களோ அல்ல, மாறாக காக்கஸஸிலும் மத்திய ஆசியாவிலும் மேற்கு சைபீரியாவிலும் (அதாவது சோவியத் பரப்பில்) சோவியத் இராணுவம் இருப்பதுதான் இந்துப் பெருங்கடல் பகுதி நாடுகளின் பாதுகாப்பை அச்சுறுத்து

கிறது என்பதை ஆதாரமாகக் கொண்டு புதிய ஒரு கருத்தமைப்பு செயல்பட வேண்டுமாம்.

இந்தத் தெட்டத்தெளிவான ஆத்திரமூட்டும் கருத்தை முன்வைத்த அமெரிக்கா இந்துப் பெருங்கடல் பகுதியின் வளர்முக நாடுகளை சோவியத் யூனியனுக்கு எதிராகத் திருப்ப முயன்றது. சமாதான மண்டலம் பற்றிய அமெரிக்கக் ''கருத்தமைப்பு'' ஏற்கப்படும் வரை மகாநாட்டிற்கான தயாரிப்புப் பணிகளில் கமிட்டி இறங்கக் கூடாதென அமெரிக்கா காலக்கெடுவைக் கூட நிர்ணயித்தது. கமிட்டியில் உறுப்பினர்களாயிருந்த சோஷலிச நாடுகள் அமெரிக்க அரசியல் சீர்குலைவிற்குத் தக்கப் பதிலடி தந்தன; கூட்டுச் சேரா நாடுகளும் இதை ஆதரிக்கவில்லை; அமெரிக்காவின் கூட்டாளிகள் கூட அனைவரும் இதை வெளிப்படையாக ஆதரிக்கத் துணியவில்லை. என்றாலும், பொதுக் கருத்தொற்றுமையின் அடிப்படையில்தான் கமிட்டியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன எனும் அம்சத்தைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்கா, 1981இல் மகாநாட்டைக் கூட்டுவதைப் பற்றிய ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் முடிவைக் குலைத்தது.

1981இல் நடந்த ஆகஸ்டு மாத அமர்வில் கூட்டுச் சேரா நாடுகள், 1983ஆம் ஆண்டு முதல் பாதிக்குள் மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென முன்மொழிந்து ஓரளவு சமரசமான நகலை முன்வைத்தன.

இதற்கேற்ற தீர்மான நகல் பின்னால்

ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 36வது அமர்வால் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் 1982இல் அமெரிக்க ஐக்கிய நாடும் சில மேலைய நாடுகளும் மற்ற நாடுகளும் மேற் கூறிய காலக்கெடுவில் மகாநாடு கூட்டப்படுவ தைக் குலைக்கும் கொள்கையை ஐ. நா. சங்க விசேஷ கமிட்டியில் பின்பற்றின. 1982 மார்ச்சில் நடைபெற்ற விசேஷ கமிட்டியின் முதல் அமர்வில் ஒரு சில மேலைய நாட்டு தூதுக்குழுக்கள், இந்துப் பெருங்கடலில் சமா தான மண்டலத்தை ஏற்படுத்துவது சம்பந்த மாக ''கோட்பாட்டுத் தொகுப்பை'' ஏற்படுத்து மாறு முன்மொழிந்தன. இவற்றில் சில, உதாரணமாக, கப்பல் போக்குவரத்து சுதந் திரம், பொருளாதார ஒத்துழைப்பின் வளர்ச்சி, உணவுப் பொருட்களை உதவியாக வழங்கு தல், அணு ஆயுதத்தைப் பரப்பாமல் இருக்கும் கோட்பாட்டை இப்பிரதேசத்திலும் பின்பற்று வது போன்றவை பொதுவில் சமாதான மண்டலக் கருத்தமைப்பிற்கு ஏற்றவையாக இருந்த போதிலும் மொத்தத்தில் இக் ''கோட் பாடுகள்'' பிரதேசத்தில் அமெரிக்க இராணுவ நடமாட்டத்தை நிரந்தரமாக்குவதை நோக்க மாகக் கொண்டிருந்தன.

மகாநாட்டைப் பற்றிய பிரச்சினையை நடைமுறை ரீதியாக அணுகும் முகமாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும் பல்கேரி யாவும் ''இந்துப் பெருங்கடல் பற்றிய மகா நாட்டின் சாத்தியமான கட்டமைப்பு மற்றும் நடைமுறைகள் சம்பந்தமான பூர்வாங்கக்

கருத்துக்கள்'' எனும் ஆவணத்தை விசேஷ கமிட்டியின் அமர்விற்கு முன் வைத்தன. இது கூட்டுச் சேரா நாடுகளின் நூதுக்குழுக்களால் வரவேற்கப்பட்டது.

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டல மாக்குவதை எதிர்த்தவர்களுக்கு இது ஏற்புடை யதாயில்லை. இவர்கள் கமிட்டியின் அடுத்த, மே மாத அமர்வில் கமிட்டியின் அத்தாட்சி யையும் சமாதான மண்டலக் கருத்தமைப்பை யும் குலைக்க மீண்டும் முயன்றனர். 1983ஆம் ஆண் டின் முதல் பாதியில் இந்த மகாநாட்டை நடக்கவிடாதபடி செய்யவும் இதைக் கால வரையின்றி ஒத்திப் போடவும் (பொதுவாக இதைக் குழிதோண்டிப் புதைக்காவிட்டாலும்), உதாரணமாக 1985க்கு பின்னால் தள்ளிப் போடவும் (அப்போது இந்துப் பெருங்கடலில் அமெரிக்கப் போர்த்தந்திரத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டிருக்கும்) இவ்வாறு முயற்சிக்கப் பட்டது. 1984 மே மாத இறுதியில் ஒரு சில மேலைய நாடுகளின் பிரதிநிதிகள் ''சமாதான மண்டலம் என்ற வகையில் இந்துப் பெருங்கடல் சம்பந்தமான கோட்பாடுகளின் தொகுப்பு'' என்ற ஆவணத்தை முன்வைத்தனர். இது அரசியல் பிரிவு, பாதுகாப்பு பற்றிய பிரிவு, பொருளாதாரப் பிரிவு என்ற மூன்று பிரிவு களை உள்ளடக்கியிருந்தது.

ஆஸ்திரேலியப் பிரதிநிதி இந்த நகலை முன்வைத்தார். ஒரே கருத்துடைய அரசுகளின் சார்பில் இவர், இந்துப் பெருங்கடலில் சமா தான மண்டலம் பற்றிய பிரச்சினைகளில் முழு

கருத்தொற்றுமை வரும் வரை கொழும்பு மகாநாடு கூட்டப்படக் கூடாது என்று தெளிவு படுத்தினார்.

அமெரிக்கப் பிரதிநிதியோ ''கோட்பாடு களின் தொகுப்பின்'' விவாதம் கமிட்டியின் பணிக்கு அடிப்படையாக இருக்க வேண்டு மென வற்புறுத்தினார். இந்தக் ''கோட்பாடு களின் தொகுப்பை'' அடிப்படையாக கொண்டு மட்டுமே மகாநாட்டில் அமெரிக்கத் தூதுக்குழு கலந்து கொள்ளத் தயார் என்று இவர் அறிவித்தார். இந்துப் பெருங்கடல் பகுதி நாடுகளுக்கான அபாயம் கடலிலிருந்து வர வில்லை, தரைப் பகுதியிலிருந்துதான் வருகிறது என்று கூறிய இவர் இப்பிரதேசத்தின் பதட்ட நிலைக்கான பொறுப்பை சோவியத் யூனியன் மீது சுமத்த முயன்றார். இக்கருத்து ஏற் கெனவே கூட்டுச் சேரா நாடுகளால் நிராகரிக் கப்பட்டிருந்தது.

இம்முறையும் கூட்டுச் சேரா நாடுகள் தம்மைக் குழப்ப அனுமதிக்கவில்லை. இந்நாடு களின் கருத்தைப் பிரதிபலித்த இந்தியப் பிர திநிதியின் கூற்று குறிப்பிடத் தக்கது.

'''கோட்பாடுகளின் தொகுப்பு' எனும் போர்வையின் கீழ் விஷயத்திற்கு சம்பந்தமில் லாத பல பிரச்சினைகளைக் கமிட்டியின் பணியில் சேர்க்கும் பொருட்டு குறிப்பிட்ட சில தூதுக்குழுக்கள் முயற்சிகளை மேற்கொள் ளும் ஒரு சோக நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் இவற்றைக் கமிட்டியின் அத்தாட்சியை மாற்ற முயலும்

ஒரு தெளிவான முயற்சியாகக் கருதுகிறோம்... இந்துப் பெருங்கடல் சம்பந்தமான மகா நாட்டை கொழும்புவில் கூட்டுவதற்கான தயாரிப்புப் பணிகளை மேற்கொள்வதுதான் இந்த அத்தாட்சியாகும்'' என்று அவர் குறிப்பிட்டார், ''அந்நிய இராணுவத் தளங்கள், மற்ற அமைப்புகளைக் கலைப்பதும் அந்நிய இராணுவ நடமாட்டத்தைக் குறைப்பதும் பிரகடனத்தின் முக்கிய அம்சங்களாகும்... பொதுக் கோட்பாடுகளைப் பற்றி விவாதிப்பது கமிட்டியின் அத்தாட்சிக்கு அப்பாற்பட்டது, இந்தக் கமிட்டியில் இது முற்றிலும் நியாயப்படுத்த முடியாதது. 'கோட்பாடுகளின்' ஆசிரியர்கள் இந்நோக்கத்திற்காக தனிக் கமிட்டியை ஏற்படுத்த முயலட்டும், இக்கமிட்டியில் சேருவதா, வேண்டாமா என்பதைப் பற்றி நாங்கள் யோசிப்போம். இந்துப் பெருங்கடல் சம்பந்தமான ஐ. நா. சங்க விசேஷ கமிட்டியைப் பொறுத்தமட்டில் பொதுச் சபை அளித்த கடமையை நிறைவேற்றுவோம் வாருங்கள். கமிட்டியின் பணிக்குத் திட்டவட்டமான பங்காற்ற அரசுகளின் அரசியல் சித்தம் தேவை''* என்றும் இந்தியப் பிரதிநிதி தொடர்ந்து குறிப்பிட்டார்.

இந்துப் பெருங்கடல் பற்றிய பிரச்சினை 1983 மார்ச்சில் டெல்லியில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் அரசு, அரசாங்கத்

---

* நோவயே விரேமியா, இதழ் 31, 1982, பக்கம் 11. (ருஷ்ய மொழியில்.)

தலைவர்களின் 7வது மகாநாட்டிலும் கணிசமான இடத்தை வகித்தது. இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவது குறித்த மகாநாட்டை 1983இல் கூட்டுவது இயலாதது என்பது இந்நேரத்தில் தெளிவாயிற்று, இதை 1984ஆம் ஆண்டு முதல் பாதிக்கு ஒத்திப் போட முடிவு செய்யப்பட்டது. இந்துப் பெருங்கடல் சம்பந்தமாக 1984ஆம் ஆண்டு ஸ்ரீலங்காவில் நடைபெறும் மகாநாட்டின் வெற்றிக்காகப் பாடுபடுவதென கூட்டுச் சேரா நாடுகள் உறுதி கொண்டுள்ளதாக டெல்லி மகாநாட்டின் அரசியல் பிரகடனம் அறிவித்தது. குறிப்பிட்ட காலத்திற்குள் மகாநாட்டின் தயாரிப்புப் பணிகளை முடிக்குமாறு இவை ஐ. நா. சங்க விசேஷ கமிட்டிக்கு அறைகூவல் விடுத்தன.

ஆனால் அமெரிக்கா மீண்டும் நிர்ப்பந்தத்தையும் மிரட்டலையும் நாடி, கூட்டுச் சேரா நாடுகளின் மத்தியில் உறுதியான கருத்தொற்றுமை இல்லாததைப் பயன்படுத்திக் கொண்டு 1984இல் மகாநாடு நடைபெறாமல் செய்தது.

1985ஆம் ஆண்டின் முதல் பாதியில் மகாநாட்டை நடத்துவதற்காக 1984ஆம் ஆண்டில் இதற்கான தயாரிப்புகளை முடிக்குமாறு 1983இல் நடந்த ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் அமர்வு விசேஷ கமிட்டிக்குக் கட்டளையிட்டது. 1984 மார்ச்சில் நடந்த விசேஷ கமிட்டியின் அமர்வில் ஒரு கணிசமான முன் அடி எடுத்து வைக்கப்பட்டது. கமிட்டியின் பணிக்கு இடையூறு விளைவிக்க அமெரிக்காவும்

இதன் கூட்டு நாடுகளும் முயன்ற போதிலும் கமிட்டியின் அமர்வு, நடைபெறவிருந்த சர்வ தேச மகாநாட்டின் நிகழ்ச்சி நிரலைப் பரிசீலிக்க ஆரம்பித்தது. இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவது குறித்த ஐ. நா. சங்கப் பிரகடனத்தை நிறைவேற்றுவதற்கான நடைமுறை நடவடிக்கைகளைத் தீட்டும் ஆலோசனைதான் இதன் முக்கிய அம்சமாகும்.

இந்துப் பெருங்கடல் சம்பந்தமாக 1984 ஜூலையில் நடைபெற்ற விசேஷ கமிட்டியின் அமர்வு மார்ச் மாத அமர்வின் போக்கைத் தொடர்ந்தது. நடைபெறவிருந்த மகாநாட்டின் நடைமுறை விதிகளின் நகலையும் நிகழ்ச்சி நிரலையும் தயாரிக்குமாறு விசேஷ கமிட்டியின் தலைமைச் செயலகத்தைக் கேட்டுக் கொள்வதென மார்ச் மாத அமர்விலேயே முடிவு செய்யப்பட்டது. இத்தகைய நகல்கள் தயாரிக்கப்பட்டன. இம்முறை மேலைய நாடுகள் இந்த ஆவணங்களுக்கு எதிராக வெளிப்படையாகப் போராட துணியவில்லை, இவை இவற்றின் விவாதத்தில் இழுக்கப்பட்டன.

இந்த இரு நகல்களைப் பற்றி இரண்டு வாரங்கள் தீவிர விவாதம் நடைபெற்றது. இந்துப் பெருங்கடலில் இராணுவ நடவடிக்கையை மட்டுப்படுத்தும் நடைமுறை நடவடிக்கைகளை உருவாக்குவதன் மீது மகாநாட்டில் முக்கியக் கவனம் செலுத்துவது எனும் முடிவு பரவலான நல்ல எதிரொலியை ஏற்படுத்தியது. இதுதான் நடைபெறவிருந்த மகாநாட்டு

நிகழ்ச்சி நிரலினுடைய நகலின் முக்கிய உள்ளடக்கமாகும்.

காலப் போக்கில், இந்துப் பெருங்கடல் பகுதியில் பதட்ட நிலைக்கான உண்மைக் காரணங்கள் மேன்மேலும் தெளிவாயின. அணு ஆயுதமேந்திய அமெரிக்க கப்பல்கள் தன் துறைமுகங்களுக்கு வரக் கூடாது என்று 1985இல் நியூஜிலாந்தின் அரசாங்கம் தடை விதித்தது. இது இந்துப் பெருங்கடல் பகுதி நாடுகளிலும் உலகிலும் பெரும் எதிரொலிப்பை ஏற்படுத்தியது. இந்த முடிவு அன்சூஸ் கூட்டில் பிளவை ஏற்படுத்தியது.

வாஷிங்டன் நிர்ப்பந்தத்தையும் அரசியல் மற்றும் பொருளாதார அச்சுறுத்தல்களையும் இதற்குப் பதிலாக அளித்தது. வாஷிங்டனில் எதைக் கண்டு பயப்படுகின்றனர்? நியூஜிலாந்தின் இந்த நடவடிக்கை ஒரு உதாரணமாக அமைந்து, எங்கே மற்ற நாடுகளும் இதே போல் முடிவு செய்து விடுமோ என்று பயப்படுகின்றனர். இப்படி நடந்தால் அது இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவதற்கான நடைமுறை நடவடிக்கையாக இருக்கும். நியூஜிலாந்தின் முடிவை இந்தியா வரவேற்றது—நியூஜிலாந்து பிரதமர் டே. லோங்கி இந்தியாவிற்கு வருகை தந்த போது இது குறிப்பாக வெளிப்பட்டது.

மொரீஷியஸ் பிரதமர் அ. ஜக்னோத் 1985 ஏப்ரலில் டெல்லிக்கு வந்த போது, இந்துப் பெருங்கடலிலுள்ள நிலவரம் குறித்து மீண்டும் கவலை தெரிவிக்கப்பட்டது, இதைச்

சமாதான மண்டலமாக மாற்றும் கோரிக்கையும் டியகோ கார்சியா உட்பட சாகோஸ் தீவுக் கூட்டத்தை மொரீஷியசிற்குத் திருப்பித் தரும் கோரிக்கையும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டன. இது தொடர்பாக ''டைம்ஸ் ஆப் இந்தியா'' பத்திரிகை தன் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியது: பெண்டகன் டியகோ கார்சியாவை இந்துப் பெருங்கடலில் ஒரு மிக முக்கியமான அமெரிக்கப் போர்த்தந்திர இராணுவத் தளமாக மாற்றியுள்ளது. இப்பிரதேசத்தில் வாஷிங்டன் விமானந்தாங்கிக் கப்பல்கள், ஆதரவுக் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், போர் விமானங்கள் உட்பட பெரும் முக்கியத் தாக்குதல் சக்திகளைக் கொண்டு நிறுத்தியுள்ளது. இத்தீவு அமெரிக்கத் ''துரிதத் தாக்குதல் படைகளின்'' நடவடிக்கைக்கு வழி கோலுவதும் டியகோ கார்சியா அமெரிக்காவிற்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க இன்னுமொரு காரணமாகும்.*

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சோவியத் யூனியனுக்கு வருகை தந்தது 1985ஆம் ஆண்டின் முக்கிய ஒரு நிகழ்ச்சியாகும். இப்பயணம் இரு நாடுகளின் உயர்வான பரஸ்பர நம்பிக்கையையும் உலகப் பிரச்சினைகளிலும் பிரதேசப் பிரச்சினைகளிலும் இரு நாடுகளின் நிலைகளில் உள்ள ஒற்றுமை அல்லது நெருக்கத்தையும் ஊர்ஜிதப்படுத்தியது. உயர்மட்ட சோவியத்-இந்திய பேச்சுவார்த்தைகளின் முடி

* *Times of India*, 4.04.85.

வில் வெளியான கூட்டறிக்கையில் பின்வரு மாறு கூறப்பட்டிருந்தது: ''இந்துப் பெருங் கடலில் நிலவரம் மேற்கொண்டு சீர்கேட டைந்து வருவது குறித்து சோவியத் யூனி யனும் இந்தியாவும் கவலை தெரிவிக்கின்றன, இங்குள்ள எல்லா அன்னிய இராணுவத் தளங்களையும் அகற்ற வேண்டும், புதியவற்றைத் தோற்றுவிக்கக் கூடாதென அறைகூவல் விடுக்கின்றன. இந்துப் பெருங்கடல் பகுதியில் அன்னிய இராணுவ நடமாட்டத்தை அதிகரிக்க செய்யப்படும் எந்த ஒரு முயற்சியையும் இரண்டு நாடுகளும் எதிர்க்கின்றன. இந்துப் பெருங் கடலைச் சமாதான மண்டலமாக மாற்ற வேண்டும் என்ற ஐ. நா. பிரகடனத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்பதற் காக இரு தரப்பும் போராடுகின்றன, இதற் காக இந்துப் பெருங்கடல் சம்பந்தமான சர்வ தேச மகாநாட்டை தாமதமின்றி கூட்ட வேண்டும் என்ற ஐ. நா. சங்க பொதுச் சபை யின் தீர்மானத்தை ஆதரிக்கின்றன. இந்த நோக்கத்தை அடைவதற்காக இந்தியாவும் மற்ற கூட்டுச் சேரா நாடுகளும் பாடுபடு வதற்கு சோவியத் யூனியன் உறுதியான ஆதரவை அளிக்கிறது.

''ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 39வது அமர்வு தீர்மானித்தபடி 1986ஆம் ஆண்டு முதல் பாதிக்குள் இம்மகாநாடு கூட்டப்படும் பொருட்டு மகாநாட்டிற்கான தயாரிப்புகளை 1985இல் முடிக்க வேண்டுமென இரு தரப்பு களும் கருதுகின்றன. டியகோ கார்சியா தீவு

உட்பட சாகோஸ் தீவுக் கூட்டம் தனக்குத் திருப்பியளிக்கப்பட வேண்டுமென்ற மொரீஷியசின் நியாயமான கோரிக்கையை இரு நாடுகளும் ஆதரிக்கின்றன.''*

1985இல் நடைபெற்ற இந்துப் பெருங்கடல் பற்றிய ஐ. நா. சங்க விசேஷக் கமிட்டியின் அமர்வுகள் இம்மகாநாட்டைக் கூட்டும் தயாரிப்பு களுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தன. இம்மகா நாட்டை நடத்தும் முறைகளும் நிகழ்ச்சி நிரலின் நகலும் இவற்றில் விவாதிக்கப்பட் டன. இந்துப் பெருங்கடலில் இராணுவ நட வடிக்கையை மட்டுப்படுத்தி, இப்பிரதேசத்தைச் சமாதான மண்டலமாக மாற்றுவதற்கான நடைமுறை நடவடிக்கைகளை முடிவு செய்யும் சர்வதேச மகாநாட்டைக் கூட்டும் பிரச்சினை தொடர்பாக இந்த அமர்வுகளில் தீவிர, காரிய ரீதியான விவாதங்கள் நடந்தன.

கமிட்டியின் உறுப்பினர்களில் மிகப் பெரும் பாலோர் (இக்கமிட்டியில் 48 அரசுகளின் பிரதிநிதிகள் உள்ளனர்), அக்கறையுள்ள எல்லா நாடுகளும் விரும்பினால், இந்துப் பெருங் கடலைச் சமாதான மண்டலமாக அறிவிக்கும் பிரகடனத்தை (இது 1971இல் ஏற்கப்பட்டது) மிக விரைவாக நிறைவேற்றலாம்.

சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடு களின் தூதுக்குழுக்கள் அமர்வின் பணியில் தீவிரப் பங்கேற்றன, மகாநாட்டு தயாரிப்புப் பணிகளை வெற்றிகரமாக முடிக்கப் பாடுபடும்

* பிராவ்தா, 27.05.85. (ருஷ்ய மொழியில்.)



12–898

கூட்டுச் சேரா அரசுகளுக்கு ஆதரவளித்தன. அமெரிக்கத் தூதுக்குழு கமிட்டியின் கவனத்தைக் காரியரீதியாகப் பிரச்சினைகளை அணுகுவதிலிருந்து திசை திருப்ப மீண்டும் முயன்றது, கொழும்புவில் மகாநாட்டைக் கூட்டுவது பற்றிய திட்டவட்டமான தயாரிப்பின் விவாதத்திற்குப் பதிலாக இரண்டாம் பட்சமான பிரச்சினைகளின் விவாதத்தை முன்வைக்க முயன்றது. இந்தியா, இந்தோனேசியா, ஏமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு, ஸ்ரீலங்கா, யுகோஸ்லாவியா, மற்றும் பல நாடுகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் இத்தகைய தந்திரத்தைக் கண்டித்தனர்.

சோவியத் யூனியனைப் பொறுத்தவரை, அது ஆசியாவில் சமாதானம், பாதுகாப்பிற்காகவும் ஆசிய அரசுகளின் சம உரிமையுள்ள ஒத்துழைப்பிற்காகவும் தொடர்ந்து உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் பாடுபடுகிறது. இது இந்துப் பெருங்கடல் பகுதிக்கும் முற்றிலுமாகப் பொருந்தி வரும். ''இப்பிரதேசத்தைச் சமாதான மண்டலமாக மாற்றும் கருத்தை நாங்கள் ஆதரிக்கின்றோம்'' என்று 1985 மேயில் ''பிரெஸ் டிரஸ்டு ஆப் இந்தியா'' எனும் இந்திய செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் சோவியத் தலைவர் மி. செ. கர்பச்சோவ் குறிப்பிட்டார்.

''இப்பிரச்சினை சம்பந்தமாக சர்வதேச மகாநாட்டைக் கூட்டுவதைக் கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்கா குலைத்து வருவது தெரிந்ததே. இந்துப் பெருங்கடல் பரப்பில்

இராணுவ நடவடிக்கையை மட்டுப்படுத்துவது பற்றிய சோவியத்-அமெரிக்க பேச்சுவார்த்தைகளையும் இதுதான் ஒருதலைப்பட்சமாக முறித்தது. இதனிடையே அமெரிக்கா இப்பகுதியில் தன் இராணுவ நடமாட்டத்தைத் தொடர்ந்து பெருக்கி வருகிறது''* என்றார் மி. செ. கர்பச்சோவ்.

''பேச்சுவார்த்தைகளைத் திரும்பவும் துவக்கத் தான் தயாரென சோவியத் யூனியன் பன்முறை அறிவித்துள்ளது. மகாநாடு கூட்டப்படும் வரை காத்திருக்காமல், எந்த நாடுகளின் கப்பல்கள் இந்துப் பெருங்கடல் பரப்பைப் பயன்படுத்துகின்றனவோ அந்த அரசுகள் எல்லாம், இப்பகுதியில் நிலவரத்தைச் சிக்கலாக்கும் எந்த நடவடிக்கையிலும் இறங்கக் கூடாது என்று 1982இல் நடைபெற்ற சோவியத்-இந்திய உயர்மட்ட சந்திப்பின் போது வெளியிடப்பட்ட சோவியத் முன்மொழிவும் அப்படியே உள்ளது. அதாவது இப்பகுதிக்குப் பெரும் கடற்படை யூனிட்டுகளை அனுப்பக் கூடாது, இராணுவப் பயிற்சிகளை நடத்தக் கூடாது, இராணுவத் தளங்களை வைத்திருக்கும் வேறு பிரதேச அரசுகள் இவற்றை விரிவுபடுத்தவோ நவீனப்படுத்தவோ கூடாது என்று இதற்குப் பொருள்.

இன்று இந்துப் பெருங்கடலில் சமாதான மண்டலத்திற்கான போராட்ட மையத்தில் இது பற்றிய சர்வதேச மகாநாட்டைக் கூட்டும் பிரச்சினை உள்ளது. இந்த மகாநாட்டை

---

* பிராவ்தா, *20.05.85. (ருஷ்ய மொழியில்.)*

நடத்தவும் இறுதியாக இந்துப் பெருங்கடல் இக்கரையோர நாடுகளின் (வேறு நாடுகளின் அல்ல) ஜீவாதார நலன்களின் மண்டலமாக மாற வேண்டும் என்பதற்காகவும் இப்பகுதி பதட்ட நிலை, சச்சரவு மண்டலமாக இல்லாமல் சமாதான மண்டலமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் அக்கறையுள்ள மற்ற அரசுகளுடன் சேர்ந்து தீவிரமாகப் பாடுபட நாங்கள் தயார் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலர் மி. செ. கர்பச்சோவ் அறிவித்தார்.

இந்த லட்சியங்களை அடைய இப்பகுதி நாடுகள் அனைத்தின் முயற்சிகளும் ஒற்றுமையும் தேவை. இப்போராட்டத்தில் சோவியத் நாடு இவர்களின் தரப்பில் நிற்கிறது.

அத்தியாயம் ஆறு

# சோவியத் யூனியனின் நிலையும் முன்முயற்சிகளும்

இந்துப் பெருங்கடல் பிரச்சினைகளின் மீதான சோவியத் யூனியனின் நிலை சர்வ தேசப் பிரச்சினைகளைப் பற்றிய சோவியத் நாட்டின் பொது அணுகுமுறையிலிருந்து வரும் தர்க்க ரீதியான தொடர்ச்சியாகும். இந்துப் பெருங்கடலில் பதட்ட நிலையை அகற்றி இப் பகுதியைச் சமாதான, ஒத்துழைப்பு மண்டல மாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகளை சோவியத் யூனியன் இருபது ஆண்டுகளாக பன்முறை வெளியிட்டு வரு கிறது. சோவியத் யூனியன், இந்துப் பெருங் கடலைச் சமாதான மண்டலமாக்க வேண்டும் எனும் கருத்திற்குத் தொடர்ச்சியான ஆதரவு அளித்து வரும் நாடாகும். சோவியத் யூனிய னால் முன்னர் வெளியிடப்பட்ட ஆலோசனை கள் இன்றும் அப்படியே உள்ளன. இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவ தைப் பற்றிய ஆலோசனை ஐ. நா. சபையில் விவாதிக்கப்படுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே சோவியத் அயல்விவகாரத் துறைய

மைச்சர் அ. அ. குரோமிகோ ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 24வது அமர்வில் பிரதேச பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்துவதற்கு ஆதரவாக கருத்துரைத்தார்.

1971இல் இந்திரா காந்தி சோவியத் யூனியனுக்கு வருகை தந்த போது பயண முடிவில் ஏற்கப்பட்ட கூட்டு அறிக்கையில் இந்துப் பெருங்கடல் பகுதியில் சமாதானப் பிரச்சினையைப் பரிசீலிக்கத் தயார் என்று அறிவிக்கப்பட்டது. 1973இல் டெல்லியில் நடைபெற்ற சோவியத்-இந்திய உயர்மட்ட சந்திப்பையடுத்து வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் பிரச்சினை சம்பந்தமான அனுகூலமான தீர்வைத் தேடுவதில் இரு நாடுகளும் பங்கேற்கத் தயார் என்று கோடிட்டுக் காட்டப் பட்டிருந்தது.

1976இல் நடைபெற்ற ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 31வது அமர்வில், ஆயுதப் போட்டியை நிறுத்துதல் மற்றும் படைக் கலைப்பு சம்பந்தமாக சோவியத் யூனியன் அளித்த நினைவுக் குறிப்பில், பூகோள ரீதியாக வெகு தொலைவில் உள்ள அரசுகளின் இராணுவ நடமாட்டம் பிரதேசத்தில் அதிகரித்து வருவது குறித்து கரையோர நாடுகள் கொண்டுள்ள கவலை சோவியத் யூனியனுக்கு நன்கு புரிவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

''இந்துப் பெருங்கடலில் அந்நிய இராணுவத் தளங்கள் இருக்கக் கூடாது, ஏற்கெனவே

இங்குள்ள தளங்கள் அகற்றப்பட வேண்டும், புதிய தளங்கள் தோற்றுவிக்கப்படக் கூடாது என்பதுதான் இங்குள்ள முக்கியப் பிரச்சினை என்பது தெளிவு. சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் இதற்கு இங்கே இராணுவத் தளங்களை ஏற்படுத்தும் எண்ணம் இருந்த தில்லை, இப்போதும் இல்லை.

அந்நிய இராணுவத் தளங்கள் பற்றிய பிரச்சினையை இவ்வாறு அணுகும் போது, இந்துப் பெருங்கடலிலும் இதற்கு அருகேயுள்ள இடங்களிலும் பரஸ்பர அடிப்படையில் கரை யோரமில்லா அரசுகளின் இராணுவ நடவடிக் கையைக் குறைப்பதற்கான வழிகளை மற்ற வல்லரசுகளோடு சேர்ந்து தேட சோவியத் யூனியன் தயார்'' என்று இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1976ஆம் ஆண்டில் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங் கிரசின் ஆவணங்களில் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவது குறித்த பிரச்சி னையில் சோவியத் நாட்டின் நிலை பிரதிப லித்தது. கட்சியின் மத்திய கமிட்டி இக்காங் கிரசிற்கு சமர்ப்பித்த அறிக்கையில் பின்வரு மாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

''வல்லரசுகளின் இராணுவத் தளங்களுக் கான களமாக இந்துப் பெருங்கடல் மாறக் கூடாது என்று கோரும் போராட்டங்கள் சமீப காலமாக பல நாடுகளில் பெருகி வரு கின்றன. நாம் இவற்றை ஆதரிக்கின்றோம். சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில்

இதற்கு இந்துப் பெருங்கடலில் இராணுவத் தளங்களை ஏற்படுத்தும் எண்ணம் இருந்த தில்லை, இப்போதும் இல்லை. இதே நிலையை மேற்கொள்ளுமாறு நாம் அமெரிக்க ஐக்கிய நாட்டை அறைகூவி அழைக்கின்றோம்.''*

உலகப் பெருங்கடல் பரப்புகளின் தனிப் பட்ட பகுதிகளிலிருந்து (இந்துப் பெருங் கடலும் இதிலடங்கும்) அணு ஆயுதமேந்திய கப்பல்களை வெளியேற்றுவது சம்பந்தமான உடன்படிக்கையைச் செய்து கொள்ளும் நோக்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் துவக் குமாறு சோவியத் யூனியன் ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 32வது அமர்வில் அணு ஆயுத வல்லரசுகளுக்கு முன்மொழிந்தது.

1978இல் நடைபெற்ற ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் விசேஷ அமர்வில் ''ஆயுதப் போட்டியை நிறுத்துவது சம்பந்தமான நடை முறை வழிகள். சோவியத் யூனியனின் முன் மொழிவுகள்'' எனும் ஆவணத்தில், இந்துப் பெருங்கடலில் இராணுவ நடமாட்டத்தை மட்டுப்படுத்தி, மேற்கொண்டு குறைப்பது பற்றிய சோவியத்-அமெரிக்கப் பேச்சுவார்த் தைகள் வெற்றிகரமாக முடியுமென நம்பிக் கைத் தெரிவிக்கப்பட்டது. ''இந்துப் பெருங் கடலில் இராணுவ நடவடிக்கையை இன்றைய அளவிலேயே 'முடக்குவதை' அல்லது 'ஸ்திரப் படுத்துவதைப்' பற்றி உடன்படிக்கை அடையப்

---

* **சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ்**, மாஸ்கோ, 1976, பக்கம் 23. (ருஷ்ய மொழியில்.)

பட்டதுமே இதைப் பெரிதும் குறைப்பதைப் பற்றியும் அந்நிய இராணுவத் தளங்களை அகற்றுவதைப் பற்றியும் உடனடியாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்'' என்று இந்த ஆவணம் கோரியது.

இந்த அமர்வில் உரையாற்றுங்காலை சோவியத் அயல்விவகாரத் துறையமைச்சர் அ. அ. குரோமிகோ பின்வருமாறு கூறினார்: ''இந்துப் பெருங்கடலில் இராணுவ நடவடிக்கையை இப்போதுள்ள மட்டத்திலேயே 'முடக்குவதைப்' பற்றி மட்டுமே இப்போது பேசப்படுகிறது. இது ஆரம்பம் மட்டுமே என்பது புரிகிறது. இதையடுத்து இந்நடவடிக்கையைப் பெரிதும் குறைப்பதற்கான, அந்நிய இராணுவத் தளங்களை அகற்றுவதற்கான வழிகளைத் தேட நாங்கள் தயார். இதன் மூலம் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் கருத்து... தெளிவானதாகும்.''

1980ஆம் ஆண்டு ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 35வது அமர்வில் சோவியத் யூனியனால் முன்வைக்கப்பட்ட ''சமாதானம், படைக்கலைப்பிற்காக, சர்வதேசப் பாதுகாப்பின் உத்திரவாதங்களுக்காக'' எனும் நினைவுக் குறிப்பில் இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்க விரும்பும் கரையோர நாடுகளின் முயற்சியையும் இது சம்பந்தமாக சர்வ தேச மகாநாட்டைக் கூட்டும் ஆலோசனையையும் சோவியத் யூனியன் தொடர்ந்து ஆதரிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. சமாதான மண்டலம் ஏற்படுத்தப்பட்டால் இங்

குள்ள எல்லா அந்நிய இராணுவத் தளங்களும் அகற்றப்படும், கரையோர நாடுகளின் பாதுகாப்பையும் அரசுரிமையையும் யாரும் அச்சுறுத்த மாட்டார்கள். அதே சமயத்தில், ''இந்துப் பெருங்கடலில் அமெரிக்கா மற்றும் இதன் ஒரு சில கூட்டாளிகளின் இராணுவ நடமாட்டம் பெரிதும் அதிகரித்துள்ளதால் சமாதானமான, அமைதியான வாழ்க்கைக் குள்ள இப்பிரதேச நாடுகளின் உரிமையும் தம் முயற்சிகள் மற்றும் மூலாதாரங்களை நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சிக் காக ஒன்றுதிரட்டுவதில் இந்நாடுகள் கொண் டுள்ள நாட்டமும் கேள்விக்குறியாக்கப்பட் டுள்ளன'' என்றும் அந்த நினைவுக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

1980 மே மாதம் வார்ஸா ஒப்பந்த நாடு கள் அரசியல் கலந்தாலோசனைக் கமிட்டி கூட்டத்தின் முடிவாக ஏற்ற பிரகடனத்தில், ''இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்ட லமாக மாற்றுவதில் இப்பிரதேச நாடுகளுக்கு ஆதரவளிப்பதாயும் இந்துப் பெருங்கடல் சம்பந்தமான சர்வதேச மகாநாட்டைக் கூட்டுவது உட்பட இந்த விஷயத்தில் அவற் றுடன் ஒத்துழைக்கத் தயார் என்றும்'' அறி வித்திருந்தன. அதே சமயத்தில், இந்துப் பெருங்கடலில் அமெரிக்க கடற்படையின் நடமாட்டமும் நடவடிக்கைகளும் பெரிதும் அதி கரித்து வருவது, இங்குள்ள அந்நிய இராணுவத் தளங்களை விரிவுபடுத்துவது, புதியவற்றைத் தோற்றுவிப்பது ஆகியவை இந்துப்

பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்குவது குறித்து ஐ. நா. சபை ஆமோதித்த திட்டத்துடன் முரண்படுவதாயும் பல நாடுகளின் பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் அச்சுறுத்துவதாயும் சர்வதேச பதட்ட நிலையின் புதிய களங்களை உருவாக்க இட்டுச் செல்வதாயும் இந்நாடுகள் குறிப்பிட்டன.

1980ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்மட்ட சோவியத்-இந்தியச் சந்திப்பின் போது சோவியத் யூனியன் முன்வைத்த பாரசீக வளைகுடா சம்பந்தமான முன்மொழிவுகள் இந்துப் பெருங்கடல் முழுவதற்கும் பொருந்தி வரும். பின்வரும் பரஸ்பர உறுதி மொழிகளை ஏற்குமாறு அமெரிக்கா, மற்ற மேலைய வல்லரசுகள், சீனா, ஜப்பான், இதில் ஆர்வமுள்ள மற்ற எல்லா அரசுகளுக்கும் சோவியத் யூனியன் முன்மொழிந்தது:

—பாரசீக வளைகுடாவிலும் அருகிலுள்ள தீவுகளிலும் அந்நிய இராணுவத் தளங்களைத் தோற்றுவிக்கக் கூடாது; இங்கே அணு ஆயுதத்தையோ வேறெந்த பேரழிவு ஆயுதத்தையோ நிறுவக் கூடாது;

—பாரசீக வளைகுடா பிரதேச நாடுகளுக்கு எதிராக பலத்தைப் பயன்படுத்தக் கூடாது, பயன்படுத்தப் போவதாக அச்சுறுத்தவும் கூடாது, இவற்றின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது;

—பாரசீக வளைகுடா நாடுகள் ஏற்றுள்ள கூட்டுச் சேரா அந்தஸ்தை மதிக்க வேண்டும்; அணு ஆயுத வல்லரசுகள் பங்கேற்கும்

இராணுவக் கூட்டுகளினுள் இவற்றை இழுக்கக் கூடாது;

—இப்பிரதேச நாடுகளுக்கு இவற்றின் இயற்கைச் செல்வங்களின் மீதுள்ள சுய உரிமையை மதிக்க வேண்டும்;

—சாதாரணமான வர்த்தகப் பரிவர்த்தனைக்கும் இப்பிரதேச நாடுகளை உலகின் மற்ற நாடுகளுடன் இணைக்கும் கடல் மார்க்கங்களைப் பயன்படுத்தவும் எவ்வித இடையூறையும் ஏற்படுத்தக் கூடாது, இவற்றை அச்சுறுத்தக் கூடாது.''

1981ஆம் ஆண்டின் துவக்கத்தில் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரசில் கட்சியின் மத்திய கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையின் வெளிவிவகாரக் கொள்கை பகுதியில் பாரசீக வளைகுடா பகுதியிலும் இதன் நுழைவாயில்களிலும் சமாதானத்திற்கு வகை செய்வதன் மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. ''மேன்மேலும் புதிய புதிய கப்பற்படைகளையும் விமானப்படைகளையும் துருப்புகளையும் ஆயுதங்களையும் இங்கு கொண்டு செல்வதற்குப் பதில் சர்வதேச உடன்படிக்கையில் கையொப்பமிட்டு இங்குள்ள போர் அபாயத்தை அகற்றலாமென நாங்கள் முன்மொழிகின்றோம். கூட்டு முயற்சிகளால், எல்லா தரப்புகளின் சட்டபூர்வமான நலன்களையும் கணக்கில் கொண்டு இங்கே ஸ்திர நிலையையும் அமைதியையும் ஏற்படுத்தலாம். இப்பிரதேச அரசுகளின் சுய உரிமைகளுக்கும் இந்நாடுகளை

உலகின் மற்ற நாடுகளுடன் இணைக்கும் கடல், மற்ற மார்க்கங்களின் பாதுகாப்பிற்கும் உத்திரவாதம் தரலாம். சமீபத்தில் சோவியத் யூனியன் முன்வைத்த முன்மொழிவுகளின் சாரம் இதுதான்'' என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்த முன்மொழிவிற்கு பாரசீக வளைகுடா பகுதியின் சில நாடுகள் உட்பட உலகின் பல நாடுகளில் பரவலான ஆதரவு கிடைத்தது. ஆனால் இதற்கு எதிர்ப்புகளும் இருந்தன, எங்கே இவை இருந்திருக்குமென ஊகிப்பது கடினமல்ல. ''எல்லோருக்கும் ஏற்ற தீர்வைக் கூட்டாக அடையும் முகமாக அமெரிக்க அரசாங்கமும் மற்ற நேட்டோ நாடுகளின் அர சாங்கங்களும் இப்பிரச்சினை முழுவதையும் அமைதியாக, பாரபட்சமின்றி சிந்திப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

''இப்பிரச்சினை சம்பந்தமாக உடன்படிக்கை அடையப்பட்டால் அது உலகப் பெருங்கடலின் பல்வேறு பகுதிகளில் இராணுவ நடமாட்டத் தைக் குறைக்கும் முக்கிய நிகழ்ச்சிப் போக் கிற்குத் துவக்கமாக அமையக் கூடும்'' என்று காங்கிரசில் குறிப்பிடப்பட்டது.

இதற்குப் பிந்தைய ஆண்டுகளிலும் சோவியத் யூனியன் மொத்தமாக உலகப் பெருங் கடல் பரப்பிலும் இந்துப் பெருங்கடலிலும் பதட்ட நிலையைத் தணிப்பதற்காகவும் இதைச் சமாதான மண்டலமாக மாற்று வதற்காகவும் அயராது பாடுபடுகிறது. 1982ஆம் ஆண்டு டெல்லியில் ''இந்துப் பெருங்கடல்—

சமாதான மண்டலம்'' என்ற சர்வதேச மகாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் சோவியத் யூனியன் உட்பட 50க்கு அதிகமான நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண் டலமாக மாற்றுவது பற்றிய கரையோர நாடுகளின் முன்மொழிவை சோவியத் யூனியன் ஆதரிப்பது என்பது இந்த சர்வதேச மகாநாட் டில் கலந்து கொண்டவர்களுக்கு அனுப்பப் பட்ட சோவியத் செய்தியில் மீண்டும் ஊர்ஜி தப்படுத்தப்பட்டது. ''இம்முன்மொழிவை ஆத ரிக்கும் சோவியத் யூனியன், இது நிறைவேற்றப் பட்டால் இந்துப் பெருங்கடலில் நிலவரம் பெரிதும் சீர்படும் எனும் கருத்தை அடிப்படை யாகக் கொண்டு செயல்படுகிறது'' என்று அச்செய்தியில் கூறப்பட்டிருந்தது.

''ஆனால், இந்துப் பெருங்கடலைச் சமா தான மண்டலமாக மாற்றும் கருத்திற்கு எதிராளிகளும் உண்டு என்பது எமக்குத் தெரியும். இவர்கள் சமாதானம், மக்களின் பாதுகாப்பு நலன்களை வழிகாட்டியாகக் கொள்ளவில்லை, மாறாக இந்துப் பெருங் கடல் நாடுகளின் மீது தம் ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் இப்பிரதேசத்தை இராணுவ-போர்த்தந்திர ரீதியாக கட்டுப்படுத்தவும் இவர்கள் விரும்புகின்றனர்.

''இந்துப் பெருங்கடலைச் சமாதான மண் டலமாக மாற்றும் போராட்டத்திற்கு சமா தான விருப்பமுள்ள எல்லா அரசுகள், மக்களி னங்கள், ஜனநாயக ரீதியான சமுதாயச்

சக்திகள் ஆகியவற்றின் தீவிரமான, சுறுசுறுப் பான நடவடிக்கைகள் அவசியம். கூட்டான, செயல்முனைப்பான நடவடிக்கைகளால் இந்த முக்கியமான பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.''*

இந்த அறிக்கை மகாநாட்டினரின் மத் தியில் நல்ல எதிரொலிப்பை ஏற்படுத்தியது. இவர்கள் ஏற்ற ஆவணங்களில், இந்துப் பெருங்கடலில் சமாதானம், படைக்கலைப்பு, பதட்ட நிலைத் தணிவு ஆகியவற்றை ஏற் படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் முன் வைத்த ஆக்கபூர்வமான முன்மொழிவுகளை எல்லாப் பிரதிநிதிகளும் ஆதரிப்பதாகக் கூறப் பட்டிருந்தது.

படைக்கலைப்பு சம்பந்தமான ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் இரண்டாவது விசேஷ அமர்வில் (1982 ஜூன்) முன்வைக்கப்பட்ட ''வளர்ந்து வரும் அணு ஆயுத யுத்த அபா யத்தை அகற்றுதல், ஆயுதப் போட்டியைக் குறைத்தல்'' என்ற நினைவுக் குறிப்பில், அமெ ரிக்க முன்னணி இராணுவ சாதனங்களை சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடு களின் எல்லைகளுக்கு இயன்ற அளவு அருகில் வைப்பதானது நடைமுறையில் போர்த்தந்திர சமன்நிலையைக் குலைக்கும் முயற்சியாகும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ''அணு ஆயுத மேந்திய பெரும் அமெரிக்க கப்பற்படையை

---

* பிராவ்தா, 23.04.82. (ருஷ்ய மொழியில்.)

இந்துப் பெருங்கடலில் குவிப்பதும் டியகோ கார்சியா தீவில் மத்திய போர்த்தந்திரத் தளத்தை வைத்து இங்கே அமெரிக்கப் போர்த் தளங்களின் வலையை ஏற்படுத்துவதும் இதே நோக்கங்களுக்குத்தான் சேவை புரிகின்றன'' என்று இக்குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

கடற்படை நடவடிக்கையைக் குறைப்பது சம்பந்தமான ஒரு முழு செயல்திட்டமே அந்த நினைவுக் குறிப்பில் முன்வைக்கப்பட்டிருந்தது. எங்கெல்லாம் சச்சரவுகள் தோன்ற அதிக வாய்ப்புள்ளதோ அங்கெல்லாம் அதிக ஸ்திர மான நிலையை ஏற்படுத்தும் நோக்கத்தோடு கீழ்காணும் பிரச்சினைகளைப் பரிசீலிப்பது விவேகமானது என்று சோவியத் யூனியன் கருதுகிறது:

—ராக்கெட்டுகளுடன் கூடிய நீர்மூழ்கிக் கப்பல்களைப் பரவலான ரோந்துப் பிரதேசங் களிலிருந்து வெளியேற்றி, பரஸ்பரம் ஏற்பு டைய எல்லைகளில் இவற்றின் நடமாட்டத்தை மட்டுப்படுத்துவது;

—நீர்மூழ்கிக் கப்பல்களில் புதிய பாலிஸ்டிக் ராக்கெட்டுகளை நிறுவுவதை மட்டுப்படுத்து வது;

—தொலை தூர உலாவு ராக்கெட்டுகளை கடலிலும் தரையிலும் வைப்பதை நிறுத்துவது;

—நம்பிக்கை நடவடிக்கைகளைக் கடல்கள், பெருங்கடல்களுக்கு, குறிப்பாக போக்குவரத்து மிகுந்த கடல் மார்க்கங்களுக்குப் பரப்புதல்;

—மத்தியதரைக் கடலை நிலையான சமா தானம், ஒத்துழைப்பு மண்டலமாக ஆக்குவது;

—பாரசீக வளைகுடா பகுதியில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பலப்படுத்துதல்.

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக மாற்றுவதைப் பற்றி கூட்டுச் சேரா நாடுகள் முன்வைத்த கருத்தை சோவியத் யூனியன் ஆதரிக்கிறது, இது சம்பந்தமான சர்வதேச மகாநாட்டைக் கூட்டும் தயாரிப்புப் பணியில் தீவிரமாகப் பங்கேற்கும், இந்துப் பெருங்கடலில் இராணுவ நடவடிக்கையை மட்டுப்படுத்தி பின் குறைப்பதைப் பற்றி அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் திரும்பத் துவங்க சோவியத் யூனியன் தயார் என்று இந்த நினைவுக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

1984 கோடையில் ஐ. நா. சங்கப் பொதுச் செயலருக்கு அனுப்பிய கடிதத்தில் உலகப் பெருங்கடல் பிரச்சினைகளில் தன் நிலையை சோவியத் தலைமை மீண்டும் ஊர்ஜிதப் படுத்தியது. இது இந்துப் பெருங்கடலுடன் நேரடியாகத் தொடர்புடையது.

ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 38வது அமர்வின் முடிவுகளுக்கு உடனடியாகக் கட்டுப் பட்டு, கடற்படை நடவடிக்கையை மட்டுப் படுத்துவது பற்றியும் கடற்படை ஆயுதங்களை மட்டுப்படுத்தி குறைப்பது பற்றியும் நம்பிக்கை நடவடிக்கைகளைக் கடல்கள், பெருங்கடல் களுக்குப் பரப்புவது பற்றியும் குறிப்பாக எங்கெல்லாம் போக்குவரத்து அதிகமாயுள் ளதோ, சச்சரவு சூழ்நிலைகள் தோன்ற

எங்கெல்லாம் அதிக வாய்ப்புள்ளதோ அங்கெல்லாம் இவ்வாறு செய்வது பற்றியும் பேச்சு வார்த்தைகளைத் துவக்க தான் தயார் என்று சோவியத் யூனியன் அறிவித்தது.

உடனடி நடவடிக்கையாக, எங்கெல்லாம் சச்சரவு உள்ளதோ, பதட்ட நிலை நிலவுகிறதோ அங்கெல்லாம் அரசுகளின் கடற்படை நடமாட்டத்தை விரிவுபடுத்துவதில்லையென ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று சோவியத் யூனியன் முன்மொழிந்தது. இது தவிர, அணு ஆயுதமேந்திய கப்பல்களை உலகப் பெருங்கடல் பரப்பின் குறிப்பிட்ட இடங்களிலிருந்து வெளியேற்றுவதைப் பற்றி ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதும் இந்தப் பெருங்கடல் பரப்புகளில் பல்வேறுவிதமான கப்பல்கள் இருப்பதற்கான வரம்புகளை நிலைநாட்டுவதும் பெரும் வல்லரசுகளின் கப்பற்படைகள் நீண்ட காலத்திற்குச் சொந்தக் கரைகளிலிருந்து தள்ளி நின்று உலாவுவதற்கு முடிவு கட்டுவதும் பயனுடையதாயிருக்கும் என்று சோவியத் யூனியன் கருதுகிறது.

சோவியத் யூனியனின் நிலையை மற்ற சோஷலிச நாடுகள் பகிர்ந்து கொள்கின்றன. வார்ஸா ஒப்பந்த அரசியல் கலந்தாலோசனை கமிட்டியின் வார்ஸா பிரகடனத்தில் இவை ''சமாதானம் மற்றும் சர்வதேச நிலவரத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடனும் முக்கிய சர்வதேச கடல் மார்க்கங்களை நம்பகரமாயும் தங்குதடையின்றியும் பயன்படுத்துவதற்காகவும் அந்தந்தப் பிரதேசங்களில் (அது அட்லாண்டிக்,

இந்து அல்லது பசிபிக் பெருங்கடல், மத்தியதரைக் கடல், பாரசீக வளைகுடா எதுவாயிருந்தாலும் சரி) இராணுவ நடமாட்டம் மற்றும் இராணுவ நடவடிக்கையின் அளவை மட்டுப்படுத்தி குறைப்பதைப் பற்றிய பிரச்சினையை, உதாரணமாக ஐ. நா. சங்க வரம்புகளுக்குள், பரிசீலிக்கத் துவங்குமாறு''* முன்மொழிந்தன.

சோவியத் யூனியனின் கருத்துப்படி, சர்வதேச மகாநாட்டைக் கூட்டுவதற்கு முன்னரே கூட பலவற்றைச் செய்யலாம். இந்துப் பெருங்கடலில் நிலவரத்தை சிக்கலாக்கும் நடவடிக்கைகளில் கரையோரமில்லா நாடுகள் ஈடுபடக் கூடாது, அதாவது இங்கு பெரும் கடற்படை யூனிட்டுகளை அனுப்பக் கூடாது, இங்கே இராணுவப் பயிற்சிகளையும் ஒத்திகைகளையும் நடத்தக் கூடாது, புதிய இராணுவத் தளங்களை ஏற்படுத்தக் கூடாது என்று 1982இல் சோவியத் யூனியன் முன்மொழிந்தது இன்றும் அப்படியே உள்ளது. இந்நடவடிக்கைகள் கொழும்பு மகாநாட்டிற்கான அரசியல் சூழ்நிலையை மேம்படுத்தும்.

1984 செப்டெம்பரில் ஐ. நா. சங்கப் பொதுச் சபையின் 39வது அமர்வில் பேசிய போது சோவியத் தூதுக் குழுவின் தலைவராகிய அ. குரோமிகோ, கப்பற்படை நடவடிக்கையையும் ஆயுதங்களையும் மட்டுப்படுத்துவது பற்றியும் நம்பிக்கை நடவடிக்கைகளைக் கடல், பெருங்

---

* பிராவ்தா, 15.05.84. (ருஷ்ய மொழியில்.)

கடல் பரப்புகளுக்கு, குறிப்பாக, எங்கெல்லாம் கடல் போக்குவரத்து அதிகமாயுள்ளதோ, எங்கெல்லாம் சச்சரவு சூழ்நிலைகள் தோன்ற அதிக வாய்ப்புள்ளதோ அந்த இடங்களுக்குப் பரப்புவது குறித்தும் பல்தரப்பு பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க சோவியத் யூனியன் தயார் என்று மீண்டும் அறிவித்தார். ''எந்த இடமாக இருந்தாலும் சரி, அது இந்து, அட்லாண்டிக், பசிபிக் பெருங்கடல், மத்தியதரைக் கடல், பாரசீக வளைகுடா எதுவாக இருந்தாலும் அங்கே உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி உடன்பாடு செய்து கொள்ள நாங்கள் ஏற்கெனவே முன்மொழிந்துள்ளோம்... இந்துப் பெருங்கடல் பற்றிய சர்வதேச மகாநாட்டைக் கூட்டுவதை இழுத்தடிப்பது அனுமதிக்க இயலாதது'' என்றார் அவர். ''இந்துப் பெருங்கடலில் சமாதானம் நிலவ வேண்டும், தங்கள் நாடுகளின் மீது தூய வானம் இருக்க வேண்டும் என்பதற்காகப் போராடும் கரையோர நாடுகளின் விருப்பங்களை ஒப்புக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடும் இதன் ஒரு சில கூட்டாளிகளும் விரும்பவில்லை. இப்பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்க வேண்டுமென சோவியத் யூனியன் முன்போன்றே விரும்புகிறது. இது உலகப் பெருங்கடலை இராணுவமயமாக்குவதற்கு எதிரான போராட்டத்தில் முக்கியக் கட்டமாக இருக்கும்'' என்று தொடர்ந்து கூறினார் அவர்.

இந்துப் பெருங்கடலில் நிலவரத்தை சீராக்க சோவியத் யூனியன் பல ஆண்டுகளாகத்

தொடர்ச்சியாகப் பாடுபட்டு வருகிறது, இப்பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்க வேண்டும், இதற்காக சர்வதேச மகாநாட்டைக் கூட்ட வேண்டும் என்ற இப்பிரதேச அரசுகளின் கருத்தை ஆதரிக்கிறது. இப்பகுதியில் பதட்ட நிலைக்கான முக்கியக் காரணம் ''வல்லரசுகளின் போட்டியே'', ''சோவியத் அபாயமோ'' இல்லை என்பது இன்று மேன்மேலும் தெளிவாகி வருகிறது. இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக ஆக்குவதற்காகவும் அமைதியான, தூய வானத்திற்காகவும் நடக்கும் போராட்டத்தில் இதற்காக உண்மையிலேயே போராடுபவர்கள் ஒரு புறமும், இதற்கெதிராக வெளிப்படையாக நிற்பவர்களும் இவர்களது ஆதரவாளர்களும் மறு புறமும் உள்ளது தெளிவு.

இந்துப் பெருங்கடலைச் சமாதான மண்டலமாக்கும் கருத்திற்காகத் தொடர்ச்சியாகப் போராடும் இப்பிரதேச வளர்முக நாடுகளும் சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் ஒரே பக்கம் நிற்கின்றன. மறு பக்கத்தில் அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் கண்மூடித்தனமாக வாஷிங்டனின் மேலாதிக்க கொள்கையை ஆதரிக்கும் நாடுகளும் உள்ளன.

உலகெங்கும் உள்ளதைப் போன்றே இந்துப் பெருங்கடலிலும் சமாதானச் சக்திகளும் போர்வெறியர்களும், முன்னேற்றச் சக்திகளும் பிற்போக்கும், சுதந்திர, விடுதலைச் சக்திகளும் அதிகாரமும் ஆணவமும் ஒன்றிற்கொன்று எதிராக நிற்கின்றன. இறுதியில்,

இங்கு வாழும் மக்கள்தான் இந்துப் பெருங் கடலின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டும். இந்துப் பெருங்கடலின் சமாதான எதிர் காலத்திற்கான இப்போராட்டத்தில் சோவியத் நாட்டின் மக்களும் மற்ற சோஷலிச நாடு களின் மக்களும் இவர்களுடன் உள்ளனர்.

வெற்றியின் அடிப்படை இதில்தான் உள் ளது. சிக்கலான பணி எதிர் நிற்கிறது. இது ஒரு கடினமான போராட்டமாயிருக்கும். ஆனால் மக்கள் வெற்றி பெறுவார்கள்.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்துக் களையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனை களையும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்ச் சியுடன் வரவேற்கிறது.

உங்கள் கடிதங்களைத் தயவு செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

C 212

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41 — பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை — 600 098

ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை — 600 002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625 001
3 — 4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641 018
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 62 008
செர்ரி ரோடு, சேலம் — 636 001

விற்பனை நிலையங்கள்

3 — 22 — 75 — D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் — 627 001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.
சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643 001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624 001